


# மர்ம மாளிகை

கோட்டயம் புஸ்பநாத் தமிழில் சிவன்



**கோட்டயம் புஷ்பநாத் :** இவர் தன்னுடைய 12வது வயதிலேயே முதல் சிறுகதையை எழுதினார். தனது 19வது வயதில் பள்ளி ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்தார். 1991 முதல் முழு நேர எழுத்தாளராக மாறினார். கதை எழுதுவதைத் தவிர விவசாயம் செய்வதும் இவருக்கு பிடித்த பொழுதுபோக்கு. இவர் பள்ளி மாணவராக இருந்த போது இவருடைய ஆசிரியர் கோவூர் என்பவர், விறுவிறுப்பான துப்பறியும் கதைகளை மாணவர்களுக்குச் சொல்வாராம். இந்தத் தாக்கம்தான் பின்னாளில் இவரை எழுத வைத்தது. இவர் தனது 26வது வயதில் முதல் நாவலான 'சிகப்பு மனிதன்' என்னும் தொடரை 'மனோ ராஜ்யம்' என்ற பத்திரிகையில் எழுத ஆரம்பித்து பெரும் வெற்றி கண்டார். இவர் துப்பறியும் கதைகள், மாந்த்ரீக நாவல்கள் என 350க்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார். இவற்றில் பல தமிழ், குஜராத்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. இவரது இரண்டு நாவல்கள் திரைப்படமாகவும் வெளி வந்துள்ளன. புகழ்பெற்ற மலையாளப் பத்திரிகைகளிலும் இவரது கதைகள் வெளிவந்து, தற்போது லட்சக் கணக்கான வாசகர் உள்ளங்களில் கோவில் கொண்டிருப்பவர் கோட்டயம் புஷ்பநாத். (முகவரி : கோட்டயம் – 686 041, கேரளா (தொலைபேசி : 0481–567899, 561999).

**சிவன் :** P.B. சிவசுப்ரமண்யம் என்ற சிவன் 22-6-55ல் பிறந்தார். இவர் மதுரை, செங்கை, சென்னை ஆகிய இடங்களில் தன்னுடைய படிப்பைத் தொடர்ந்தவர். 1980-ஆம் ஆண்டு 'பேசும் படம்' பத்திரிகையில் தன்னுடைய வாழ்க்கையைத் துவக்கி, பிறகு ஜெமினி சினிமா, தினசரி, வெற்றி மாலை எனப் பல பத்திரிகைகளில் பணி புரிந்து, தற்போது பிரபல வாரப் பத்திரிகை ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூல நூல்களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கதைகளை தமிழில் மொழி பெயர்த்து, 70 நூல்கள் வரை வெளி வந்துள்ளன.



உரிமைப் பதிப்பு
முதற் பதிப்பு – டிசம்பர், 2003

© ஆசிரியருக்கு

விலை ரூ. 40.00

Original Title : Maranathaazhvara
By : Kottayam Pushpanadh
Translated By : Siv[illegible]

37852
5479494
கொளத்தூர், சென்னை - 99.

Laser Typeset By : MS Graphics, Chennai-4.
Printed at : Kay em Packaging & Industries, Chennai - 14.

## சில வார்த்தைகள்...

**மா**ந்திரீக நாவல்கள் மூலமாகத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமானவர் திரு. கோட்டயம் புஷ்பநாத். ஆனால், மலையாள மொழியில் அவர் பன்முகம் கொண்ட எழுத்தாளர். ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக திகில், மர்மம் மற்றும் துப்பறியும் கதைகளை எழுதிப் புகழ் பெற்றவர். மலையாள மொழியில் தற்போது க்ரைம், ஆக்ஷன், மர்மம், துப்பறியும் கதைகள் என்று எழுதும் இளந்தலைமுறை எழுத்தாளர்களில் பலர் இவரைக் குருநாதராக மதிக்கிறார்கள். அப்படிப்பட்ட எழுத்தாளர்களில் ஐம்பது சதவிகிதத்தினரை நான் சந்தித்திருக்கிறேன்.

கோட்டயம் புஷ்பநாத் அவர்கள் எழுதாத ஜனரஞ்சகப் பத்திரிகைகளே மலையாள மொழியில் இல்லையென்று சொல்லலாம். அது மட்டுமின்றி, நாற்பதாண்டுகளுக்கும் மேலாக மலையாளத்தில் எழுதிக் கொண்டிருக்கிற எழுத்தாளர்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

93ஆம் ஆண்டில் மொழிபெயர்ப்பு அனுமதிக்காக மதிப்புக்குரிய எழுத்தாளர் திரு. தகழி அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்தேன். அப்போது சாவி வார இதழில் கோட்டயம் புஷ்பநாத் எழுதி, நான் மொழிபெயர்த்த 'மோகினி' நாவலின் பைண்ட் செய்யப்பட்ட தொகுப்பு என்னிடம் இருந்தது. அதில் தன் கையெழுத்துப் போட்ட தகழி கூறினார்: "நிறைய நாவல்களை எழுதியிருக்கிற கவனத்துக்கு உரிய எழுத்தாளர். நல்லவர்!" என்று. நான் வியப்பு அடைந்தேன்.

கோட்டயம் புஷ்பநாத் ஜனரஞ்சகக் கதைகளை எழுதுவதில் புகழ் பெற்றிருந்தாலும் அவர் விரும்பிப் படிப்பது பெரும்பாலும் மலையாள மொழியின் இலக்கியத் தரமான புத்தகங்களைத்தான்.

ஜனரஞ்சகப் பாணியில் – வியாபார நோக்கில் எழுதினாலும் தனது கதைகளில் விரசத்தைப் புகுத்தாத எழுத்தாளர் திரு. புஷ்பநாத். அவரது எல்லா நாவல்களிலும் இந்தத் தன்மையைக் காணலாம். பாலுணர்வை மையமாக்கி எழுதும் எழுத்தாளர்களின் பட்டியலில், கோட்டயம் புஷ்பநாத்தின் பெயர் இடம் பெற்றதில்லை. நான் குறிப்பிட்டதற்குச் சிறந்த உதாரணம் இந்த 'மர்ம மாளிகை.'

சுவாரஸ்யத்துக்காகச் சேர்க்கப்படும் பாலுணர்வு விஷயங்கள் இல்லாமலேயே, திடுக்கிடும் திருப்பங்கள் மற்றும் சம்பவங்களின் மூலமாக அவர் கதையைக் கொண்டு செல்வதில் தேர்ந்தவர்.

தமிழுக்காகவென்றே அவர் எழுதிய ஒரு சில நாவல்களில், வெளியீட்டாளர்களின் விருப்பத்தை ஒட்டி பாலுணர்வு கலந்த சம்பவங்கள் இடம்பெற வேண்டும் என்று நான் கூறியபோது, மறுக்காமல் அப்படிச் செய்திருக்கிறார். அதற்கு நானும் ஒரு காரணமாக இருந்திருக்கிறேன்.

பாலுணர்வு விஷயங்களை அதிகம் கலக்காமல் எழுதியதாலேயே, கோட்டயம் புஷ்பநாத்தின் நாவல்களை பெண் வாசகிகள் உட்படப் பெரும்பாலோர் கேரளத்தில் இன்றும் விரும்பிப் படிக்கின்றனர்.

இந்த மர்மமாளிகை தொடராக வெளிவராமல் நேரடியாகப் புத்தகமாகும் நாவல். நாவலை மொழிபெயர்க்க அனுமதி அளித்த திரு. கேட்டயம் புஷ்பநாத், சிறந்த முறையில் வெளியிடும் கலா நிலையம் திரு. ஸ்ரீனிவாசன், வாங்கி வாசித்து ஆதரிக்கும் வாசகப் பெருமக்கள், புத்தகக் கட்டமைப்பில் பங்கு கொண்ட தொழிலாளத் தோழர்கள் ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகிறது.

சென்னை 600 078
தொலைபேசி : 2483 7681

தோழமையுடன்
சிவன்

# மர்ம மாளிகை

37862
5479494
கொளத்தூர், சென்னை

## 1

"அந்த இடத்தைப் பத்தித்தான் சொன்னேன்!" அந்த மனிதர் நண்பரிடம் சொன்னார்.

ஸஹ்யாத்திரி மலைத் தொடரின் வடக்குப் பகுதியிலுள்ள மலைச்சரிவுக்கு அவர்கள் வந்து சேர்ந்து இரண்டு நாட்கள் கடந்து விட்டன. எந்த விதமான நோக்கமும் இன்றி சும்மா சுற்றிப் பார்ப்பதற்காக வந்தார்கள் அவர்கள் இருவரும். ஒருவர் சரித்திர ஆராய்ச்சியாளர். மற்றவர் விஞ்ஞானி. சமீபத்தில் மாத இதழ் ஒன்றில் வெளியாகியிருந்த ஒரு செய்தியின் அடிப்படையில் அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டனர்.

செய்தி இதுதான்!

மலைகளின் அடிவாரத்தில் நாகரிகத்தில் பண்படாத காட்டு மனிதர்கள் வாழ்கின்றனர். அவர்களுடன், தென்பகுதியிலிருந்து வந்த மனிதர்கள் சிலரும் வசிக்கின்றனர். அங்கு ஏராளமான நிலம் இருக்கிறது. எனவே, அங்கிருக்கும் ஒவ்வொருவரின் வீடும் மிகுந்த இடைவெளியுடன் காணப்படுகின்றன. அந்த மலையடி வாரத்தை ஒட்டி வட்டமாகச் செல்லும் அகலம் குறைந்த பாதையில் மாட்டுவண்டிகள் செல்கின்றன. இரவு நேரத்தில் அந்த வழியாகப் பயணம் செய்பவர்கள் மிகவும் குறைவு. வெகுகாலமாக அந்த இடத்தைப் பற்றிச் சொல்லப்பட்டுவரும் நம்பமுடியாத கதைகள் அவர்களை நடுங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. அவை தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து சொல்லப்பட்டு வரும் கதைகளும்கூட. மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்திருந்த சுற்றுப்பட்டுக் கிராமவாசிகள் அவற்றையெல்லாம் 'உண்மை'யென்று கண்ணை மூடி நம்புகின்றனர்.

இருநூறு வருடங்களுக்கு முன் 'ஸால்வின்' என்ற வெள்ளைக்காரர் ஒருவர் அந்தப் பகுதிக்கு வந்தார். அந்த இடத்தில் பிரம்மாண்டமான பங்களா ஒன்றைக் கட்டினார்.

அந்த பங்களாவுக்குத் தேவையான பொருட்களைக் கிழக்குப் பகுதியிலிருந்து கொண்டு வந்தார். மலையின் பக்கப் பகுதிகளைச் சமப்படுத்தி, வாகனங்கள் கடந்துவரத் தக்க வகையில் அவர்தான் முதன் முதலாகப் பாதை அமைத்தார். கட்டட வேலை முழுமை அடைந்ததும் அந்தப் பாதையை வெள்ளைக்காரர் சரிவரப் பராமரிக்காமல் விட்டுவிட்டார். வேறு எவரும் அந்தப் பாதையைப் பயன்படுத்தச் சந்தர்ப்பமும் இல்லாமல் போனது.

இதன் பின்னணியிலிருந்த ரகசியத்தைப் பற்றி ஏராளமான கதைகள், வதந்திகள் உலவுகின்றன.

ஸால்வின் துரைக்கு மனைவி ஒருத்தி இருந்ததாகவும் சொல்கிறார்கள். 'அவள் வெள்ளைக்காரிதான் என்றும், இல்லை நம் ஊர்க்காரிதான் என்றும் ஆட்கள் கட்சி கட்டிக்கொண்டு விவாதிக்கவும் செய்கின்றனர். ஆனால், இளந்தலைமுறையினர் இதைப் பற்றியெல்லாம் அதிகமாகப் பேசிக் கொள்வது இல்லை. ஏறத்தாழ அவர்கள் அதையெல்லாம் மறந்துவிட்டது மாதிரித்தான். அந்த மலையடிவாரப் பகுதியில் தங்கப் புதையல் இருப்பதாகவும் அதைக் கண்டுபிடிப்பதற்காக துரை வந்ததாகவும் சொல்லப்படுகிறது. இந்தச் செய்திக்கு ஆதாரமாக அந்த மலைச்சரிவின் பல பகுதிகளில் பெரிய பெரிய குழிகள் இன்றும் உள்ளன. அந்தக் குழிகளிலிருந்தெல்லாம் தங்கம் எடுக்கப்பட்டு விட்டதாகவும் அந்தப் பகுதியிலுள்ளவர்கள் நம்புகின்றனர். ஆனால், கிணறு போல் மிகவும் ஆழமாக இருந்த அந்தக் குழிகளுக்குள் இறங்க எவருக்குமே தைரியம் ஏற்படவில்லை. அதற்குள் தங்கப் புதையலைப் பாதுகாத்த பூதங்கள் குடியிருக்கலாமென்று நம்பிப் பயந்தனர். இன்னும் சொல்லப் போனால், தங்கப் புதையலை எடுத்துவிட்ட குழிகள் வேறு. பூதங்கள் ஒருவேளை கோபத்துடன் இருக்கலாம்.

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னால் அங்கு ஒரு சம்பவம் நடந்தது.



அது அங்கிருந்த மொத்தப் பேரையும் நடுங்க வைத்தது.

அத்துடன் எப்படிப்பட்டவரும் நம்ப முடியாத கதைகளுக்குக் கூட உயிர் கிடைத்தன. அதுவரை 'கட்டுக்கதைகள்' என்று நினைக்கப்பட்டவை உண்மைதான் என்று நம்புமளவு பேசப் பட்டன. இளைஞர்கள் மத்தியில் பெரியவர்கள் தலைநிமிர்ந்து நடக்கத் தொடங்கினர். அதற்குக் காரணம் அவற்றை அந்தப் பெரியவர்களே அவிழ்த்துவிட்டதுதான்.

சம்பவம் இதுதான்.

அது ஒரு வெள்ளிக்கிழமை.

கிராமத்தில் வெகுநாளாக வசித்து வரும் டேவிட் என்கிற விவசாயி (இவர் முன்னொரு காலத்தில் ரயில்வேயில் டிரைவராக இருந்தார். வேலையிலிருந்து ரிட்டயர்டு ஆனதும் குடும்பத்துடன் இந்தக் கிராமத்துக்குக் குடிபெயர்ந்தார். நகரில் அவருக்கென்று ஐந்து சென்ட் நிலமிருந்தது. அது அவர் அப்பா வழிச்சொத்து. அதையும் விற்று விட்டு கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். டேவிட் ஆங்கிலோ இந்தியர். ஜெயின் என்கிற மகள் ஒருத்தியும், மனைவியும்தான் அவரது குடும்பம்) இரவு நேரத்தில் நடந்து வந்து கொண்டிருந்தார். பட்டணத்திலேயே பிறந்து வளர்ந்தவராக இருந்ததால் டேவிட் எப்படிப்பட்ட நள்ளிரவிலும் நடந்து வருவது வழக்கம். அன்றுவரை அவர் அதைப் பயப்படக்கூடிய ஒரு விஷயமாக நினைக்கவில்லை. அதனால் அவரே ஓர் 'ஆவி மாதிரித்தான்' என்று ஊரார் நினைத்தனர்.

துரை வசித்த பங்களாவை நெருங்கியதும் டேவிட் நின்றார். காரணம், மழை அதற்குள் வலுத்துவிட்டதுதான். கடப்பாரையின் கனத்தில் மழைத்துளிகள் பூமியில் விழுந்து கொண்டிருந்தன. சுத்தமாக நடக்கவே முடியவில்லை. மழை விடுவதுவரை அந்தக் கட்டடத்தில் ஒதுங்கி நிற்கலாம் என்று நினைத்தார். மழைவிட்ட பிறகு வீட்டுக்குப் போகலாம்.

துரை தங்கியிருந்த பங்களாவை டேவிட் ஒருதடவை பார்த்தார். அங்கு ஒரே இருட்டாக இருந்தது. அந்த இடத்தில்

ஒரு பங்களா இருக்கிறது என்பதே தெரியவில்லை. மின்னல் வெட்டியபோதுதான் பங்களா தட்டுப்பட்டது.

மறுபடியும் ஒரு மின்னல் வெட்டியது.

மின்னலின் கிளைகள் பாம்புகளைப் போல் மலை உச்சியில் ஆழ்ந்து இறங்கிக் கொண்டிருந்தன. அத்துடன் பூமியே அதிர்வது போன்ற இடிமுழக்கம். மலைச் சிகரங்கள் பெயர்ந்து தலையில் விழுந்துவிடுமோ என்றுகூட டேவிட் ஒருகணம் பயந்தார்.

அந்த மின்னலின் வெளிச்சத்தில் அவர் பங்களாவை முழுமையாகப் பார்த்தார். அதன் இருப்பிடத்தையும் தெரிந்து கொண்டார். எப்படியும் அந்த வீட்டுக்குள் நுழைவது என்று முடிவு செய்தார். டேவிட்டை அந்த அளவுக்கு ஊக்கப்படுத்தியது மற்றொரு விஷயம். அங்கிருந்து குறைந்தது பத்து கிலோ மீட்டராவது நடந்தால்தான் அவரது வீட்டை அடைய முடியும். மழையும் சுலபத்தில் நிற்பதாகத் தெரியவில்லை. ஆகவே அவருக்கு இருந்த ஒரே வழி அதுதான்.

அதே நேரம் அந்தக் கட்டடத்தைப் பற்றியும், அந்தப் பகுதியைப் பற்றியும் அவர் ஏராளமான கதைகள் கேள்விப் பட்டிருந்தார். அந்த நேரத்தில் அந்தக் கதைகள் ஒவ்வொன்றும் அவர் மனத்தில் வரிசைக்கிரமமின்றித் தெளிவடையவும் செய்தன.

ஸால்வின் துரை, துரைசானியம்மாவைக் கல்யாணம் செய்வதற்கு முன் அந்த பங்களாவில் எவ்வளவோ விஷயங்கள் நடந்திருக்கின்றன. ஆயிரத்தோரு அரபுக் கதைகளில் இடம் பெறும் ஷாரியர் சக்ரவர்த்தியைப் போன்ற ஒரு மனிதராகவே ஸால்வின் துரையை அங்கிருப்பவர்கள் விவரித்திருந்தனர்.

ஸால்வின் தன் வாழ்வின் இளமைப் பருவத்திலேயே அங்கு வந்துவிட்டாராம். அப்போது அவருக்கு சுமார் முப்பத்து ஐந்து வயது இருக்கலாம். திடகாத்திரமான உடம்பு. எப்படிப் பட்டவரையும் கவர்ந்துவிடும் கண்கள். அத்துடன் அவருக்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக ஒரு கூட்டமும் இருந்தது. அவர்கள் எல்லோரும் துரை கொண்டு வந்திருந்த நோட்டுக் கற்றைகளின் வெளிச்சத்தில் பார்வையை இழந்திருந்தனர்.



ஒவ்வொரு நாளும் அவருக்கு முதலிரவாகவே இருந்தது. எவ்வளவு தொலைவிலிருந்தாலும் அழகான பெண்களைக் கடத்திக் கொண்டுவந்து, துரைக்குக் காணிக்கையாக்குவது அந்த அடியாட்களின் முக்கிய வேலையாக இருந்தது. அந்த விஷயத்துக்குச் செலவு செய்வதில் துரை கொஞ்சம்கூடத் தயங்கிய தில்லை. இப்படி துரையின் பசிதீர்க்கக் கொண்டு வரப் படும் பெண்கள் அதன்பிறகு என்ன ஆனார்கள் என்று எவருக்கும் தெரியவேஇல்லை. கொண்டு வந்தவர்களேகூட மறுபடி அவர்களைப் பார்த்ததில்லை என்று பேசிக் கொள்கிறார்கள்.

துரை, அவர்களையெல்லாம் என்ன செய்தார் என்பது இன்றும்கூட விடை கிடைக்காத ஒரு கேள்விதான்.

துரை, அவர்களைக் கொலை செய்திருப்பாரா?

அவர் காப்பாற்றி வந்த மகத்தான ரகசியம் எதுவோ ஒன்று வெளியே போகாமல் இருப்பதற்காக அந்தப் பெண்களைக் கொன்று எரித்திருப்பாரோ?

எத்தனையோ பேர், எப்படியோவெல்லாம் பேசிக் கொண்டாலும் இன்றுவரை சரியான விடையோ விளக்கமோ கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

ஒருதடவை மிகவும் அழகான ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண்ணை துரைக்காகக் கொண்டு வந்தார்கள். அவள் எந்த இடத்தைச் சேர்ந்தவள், எங்கே தங்கியிருக்கிறாள் என்றுகூட அவளைக் கொண்டு வந்தவர்களுக்குத் தெரியாது. ஒரு குதிரை வண்டியில்தான் அழைத்து வந்தனர். வரும் வழியில் வண்டியின் அச்சாணி எப்படியோ எங்கோ கழன்று விழுந்துவிட்டது. அதனால் வண்டியைச் சற்று நேரம் ஏதோ ஒரு மரத்தின் அடியில் நிறுத்தி வைக்க நேர்ந்தது. வண்டியிலிருந்து இறங்கிய பெண் கொஞ்ச நேரம் மரநிழலில் உட்கார்ந்திருந்ததை ஒரு சிலர் பார்த்திருக்கிறார்கள். ஆனால், அப்படிப் பார்த்ததாகச் சொல்லிக்கொண்ட எவரும் அதிக நாள் உயிர் வாழ்ந்ததில்லை. ஸால்வின் துரையின் நடவடிக்கைகள் அந்த அளவுக்குப் பொல்லாதவையாக இருந்தன.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்தப் பெண்ணின் உடம்பு அருவிக்கரை ஓரமாகக் கிடப்பதைப் பார்த்தவர்கள் இருக்கிறார்கள். இவள் இப்படியாகக் காரணம் என்னவென்று எவரும் விசாரிக்க முற்படவில்லை. ஆனால், அது எதிர்பாராத விபத்து அல்லவென்று அவர்களுக்குத் தெரியவும் செய்தது. அந்த மலைச்சரிவைப் பொறுத்தவரை ஸால்வின் துரை சிம்மசொப்பனமாக விளங்கினார்.

இப்படிப்பட்ட கதைகளை டேவிட் நிறையவே கேள்விப் பட்டிருந்தாலும் சற்று நேரம் அங்கு தங்குவதென்று முடிவு செய்தார்.

மழை நேரத்துக்கு நேரம் வலுத்துக்கொண்டே இருந்தது.

அந்த மலைப் பிராந்தியத்தையே நடுநடுங்க வைத்துக் கொண்டு இடிமுழக்கங்கள் நடுநடுவே ஒலித்தன. மின்னல் வேர்கள் ஆகாயத்தில் பரவிப்படர்ந்து மறைந்தன. காட்டு விலங்குகள்கூட உயிர்பயத்துடன் அங்குமிங்குமாகக் கண்டபடி ஓடியலைந்தன.

இந்த மாதிரிக் காட்சிகளையெல்லாம் டேவிட் அப்போது தான் வாழ்க்கையில் முதன் முறையாகப் பார்க்கிறார். அந்த மலையடிவாரத்தில் வாழத்தொடங்கிய பிறகு வித்தியாசமான அனுபவங்கள் நிறையவே ஏற்பட்டுக் கொண்டிருந்தன. எனவே, டேவிட் அந்த பங்களாவை நோக்கி நடந்தார்.

மணி பதினொன்றுக்குமேல் ஆகியிருந்தது. ஆள் பழக்கமற்ற அந்தக் கட்டடத்தை நோக்கி நடந்தார். ஏராளமான மரணங்கள் அந்தப் பங்களாவில் நடைபெற்றிருப்பதாகவும், அவற்றின் ஆவிகள் அதற்குள் இன்னும் உலவிக் கொண்டிருப்பதாகவும் கிராமத்திலுள்ள பெரியவர்கள் எவ்வளவோ எச்சரிக்கை செய்திருந்ததையும் அந்தச் சமயத்தில் அவர் பொருட்படுத்தவில்லை.

ஸால்வின் துரையும் அந்த பங்களாவுக்குள்தான் இறந்து போனார். அவரின் வைப்பாட்டியாக இருந்தவளும் அங்குதான் இறந்து போனாள். ஒரு நாள் விடியற்காலையில் அந்தப் பங்களாவின் முன்னால் பெண்மணி ஒருத்தி தூக்குப் போட்டுத்



தொங்கிய காட்சியை ஊரில் சிலர் பார்த்திருக்கின்றனர். மூன்று நாட்களுக்குப் பிறகு அதைப் பற்றி விசாரிக்க வந்த போலீஸ்காரர்கள் கண்ட காட்சி அதைவிடப் பயங்கரமாக இருந்தது. அந்தக் கட்டடத்துக்குள் நுழைய முடியாதபடி உடம்பு அழுகிய நாற்றம் படுபயங்கரமாக வீசியது. வீட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அந்த நாற்றம் இடைவெளியின்றி நிறைந்திருந்தது. அந்த பங்களாவின் படுக்கையறைக்குள் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் கிடந்தார் ஸால்வின் துரை.

டேவிட்டின் மூளையில் இந்தச் சம்பவங்கள் ஒரு தொடர் படம் போல் தெளிவடைந்து வந்தன. இருப்பினும் அவர் தயங்கவில்லை.

அதே நேரம்-

மின்னல் ஒன்று மின்னியது.

அந்த வெளிச்சத்தில் பங்களா வராந்தாவில் யாரோ ஒருவர் நின்று கொண்டிருப்பதாகத் தோன்றியது.

'அது பெண் உருவமா?' டேவிட்டின் மனத்தில் சந்தேகத்தின் முதல்விதை முளைவிட்டது!

## 2

சற்றும் எதிர்பாராத அந்தக் காட்சியைப் பார்த்த டேவிட் திடுக்கிட்டு நின்றார். இது வெறும் பிரமையாக இருக்குமோ என்றுகூட ஒருகணம் நினைத்தார். தான் இதுவரை கேட்டுள்ள கதைகளின் அடிப்படையில் தன் மனமே இப்படியொரு காட்சியைக் கற்பிதம் செய்து கொள்கிறதோ? மின்னல் வெளிச்சம் மறைந்ததும் அந்தக் காட்சியும் அவர் பார்வையிலிருந்து மறைந்தது.

மீண்டும் ஒரு மின்னல் வெட்டியது.

பயங்கரச் சத்தத்துடன் அந்தத் தாழ்வரையையே நடுங்க வைத்தபடி இடி முழங்கியது. அந்த வெளிச்சத்தில் டேவிட்

மற்றொரு காட்சியைப் பார்த்தார். பங்களாவின் முன்புறத்தில் பெண் உருவம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. வெள்ளை உடை அணிந்திருந்தது அந்த உருவம். மின்னலின் சக்தியால்தான் உடையை இவ்வளவு துல்லியமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது என்பதும் அவருக்குப் புரிந்தது.

அந்தப் பெண் யாராக இருப்பாள்?

ஆள் புழக்கமே இல்லாத நேரத்தில் அதுவும் ஆவிகள் குடியிருப்பதாக நம்பப்படும் அந்த பங்களாவில் இந்த நேரம் வந்திருப்பது யாராக இருக்கும்? இந்தக் காட்சியினால், தான் அந்த பங்களாவுக்குப் போகாமல் திரும்புவது தன் இயல்புக்கு மாறான ஒன்றாக அவருக்குத் தோன்றியது.

கடுமையான இருளின் ஊடே இந்தியாவின் மத்தியப் பகுதியில் தண்டவாளத்தை அதிர வைத்துக்கொண்டு பாய்ந்து செல்லும் ரயிலில் அவா பணியாற்றியிருக்கிறார். ஆள் நடமாட்டமற்ற பயங்கரக் கொள்ளைக்காரர்கள் நிறைந்த பகுதிகளில்கூட அவர் தைரியமாக ரயில் இன்ஜினை ஓட்டிச் சென்றிருக்கிறார். அப்போது எல்லாம் அவர் எத்தனையோ தற்கொலைகளை நேரடியாகப் பார்த்திருக்கிறார்.

அந்த நேரத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இன்றும்கூட அவர் மனத்தைவிட்டு நீங்காமல் இருக்கிறது. அப்போது ராஜஸ்தான் பாலைவனப் பகுதியில் ரயில் ஓடிக்கொண்டிருந்தது. நேரம் இரவு பன்னிரண்டு மணி. பெண் உருவம் ஒன்று ரயிலின் விளக்கு வெளிச்சத்தில் அவர் பார்வையில் பட்டது. ஒரு கணம் வண்டியை நிறுத்தலாமா என்றுகூட நினைத்தார். ஆனால், நிறுத்த முடியாத அளவுக்கு வண்டி அவளை நெருங்கி விட்டிருந்தது. மீறி நிறுத்துவதானால் அது ஒரு விபத்தில் முடியும். ரயிலிலுள்ள மொத்தப் பயணிகளையும் நினைக்கும்போது, இந்த ஓர் உயிர் போனாலும் பரவாயில்லை என்று எண்ணினார்.

ரயில் அந்த உருவத்தை நெருங்கியது.

இருட்டு நேரமானதால் வேறு எதுவும் தெரியவில்லை.



அவர் கண்களை இறுக மூடிக்கொண்டார்.

அந்தப் பெண்ணின் எலும்புகள் இரும்புச் சக்கரங்களுக்கு இடையில் அகப்பட்டு நொறுங்கிப் போயிருக்க வேண்டும்.

இப்படியொரு சம்பவம் நடந்ததை அவர் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

இப்படி எத்தனையோ சம்பவங்கள்!

அதெல்லாம் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நினைவுக்கு வரும். மதுவின் போதை ரத்தக் குழாய்களுக்குள் ஊடுருவும் போது இப்படிப்பட்ட சம்பவங்கள் தானாகவே நினைவுக்கு வரும். எனவே, இப்போது தென்பட்ட காட்சி அவருள் பயத்தையோ, இரக்கத்தையோ ஏற்படுத்தாதது இயற்கைதான்.

அவர் பங்களாவை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

சின்னச் சின்ன மின்னல்கள் அவ்வப்போது பாதையை அடையாளம் காட்டிக் கொண்டிருந்தன. பங்களாவை நெருங்கும் போது மீண்டும் பிரம்மாண்டமான ஒரு மின்னல். தொடர்ந்து காதைச் செவிடாக்கும் இடி முழக்கம்.

முந்தைய காட்சிகள் எதுவும் இப்போது தட்டுப்படவில்லை.

எனவே, எந்தவிதமான தயக்கமும் இன்றி அவர் பங்களாவுக்குள் நுழைந்தார். மழைத்துளிகள் கட்டடத்தின் நான்கு புறமும் மோதி விழும் சத்தம் இரைச்சலாகக் கேட்டது.

அவர் இப்போதுதான் அந்த பங்களாவுக்கு முதன் முதலாக வருகிறார். இதற்கு முன் பங்களாவைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தாரே தவிர, வந்ததில்லை. ஆனால், அந்த பங்களாவின் வராந்தாவில் காலெடுத்து வைத்தபோது அவர் உடம்பில் அவரையும் மீறி ஒரு நடுக்கம் ஏற்படவே செய்தது.

அந்தப் பகுதியில் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. வாசலை ஒட்டியிருந்த வராந்தாப் பகுதிக்கு வந்து விட்டிருந்தார். அப்போது எழுந்த மற்றொரு மின்னலில் அந்த பங்களாவின் பிரம்மாண்டமான வாசல் தெரிந்தது. கதவு மூடியிருந்ததது.

மழை இன்னும் வலுவாகப் பெய்யத் தொடங்கியது அந்த பங்களாவை ஒட்டிய பகுதிகளில் மட்டுமே மழை இவ்வளவு வலுவாகப் பெய்கிறதோ என்ற சந்தேகமும் தோன்றாமலில்லை.

கதவைத் திறக்காமல் அங்கேயே நிற்பதும் சாத்தியமானதாகத் தோன்றவில்லை. வராந்தா முழுவதிலும் மழை வலுவுடன் மோதிக் கொண்டிருந்தது. டேவிட் கதவைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டார். கையை வைத்து அழுத்தியதும் கதவு மிகவும் லாகவமாகத் திறந்து கொண்டது.

தான் கையை வைத்து அழுத்துவதற்காகக் காத்திருந்த மாதிரியல்லவா கதவு திறந்து கொண்டது?

இந்தச் சந்தர்ப்பத்தில் தன்னிடம் விளக்கு எதுவும் இல்லாமல் போய்விட்டதே என்று வருத்தப்பட்டார். வழக்கமாக அவர் எங்கு போனாலும் கையோடு விளக்கை எடுத்துச் செல்வார். இன்று சீக்கிரமே வீட்டுக்குப் போகப் போகிறோமே... விளக்கு எதற்கு என்று நினைத்து எடுக்காமல் வந்துவிட்டார். வழக்கமாக மாலை நேரத்தில் மது அருந்தும் இயல்புள்ள டேவிட், பணம் அதிகமாக இருக்கும்போது வெளிநாட்டு மதுவகைகளை வாங்கி வருவது வழக்கம். அன்று அவருக்கு பென்ஷன் கிடைத்த நாள். அவர் தோளில் தொங்கிக் கொண்டிருந்த பையில் மூன்று ஃபுல் பாட்டில் ரம் இருந்தது. நகரத்திலிருந்து புறப்படும்போது கொஞ்சம் சரக்கை ஏற்கெனவே உள்ளே செலுத்தியிருந்தார்.

கதவைத் திறந்தவர் உள்ளே நுழைந்தார்.

தன்னுடைய பாக்கெட்டில் சிகார்லைட் இருப்பது, நல்ல வேளையாக ஞாபகம் வந்தது.

அது நனையாது, நனைந்தாலும் எரியும்.

ஆனால், சிகரெட் நனைந்துவிட்டிருக்கும். இருந்தாலும் பரவாயில்லையென்று பாக்கெட்டுக்குள் கையை விட்டார். தேடியவை கைக்குத் தட்டுப்பட்டன. சிகரெட் பாக்கெட்டின் மேற்புறம் நனைந்திருந்தது. பாக்கெட்டைப் பிரித்து சிகரெட்



ஒன்றைக் கையில் எடுத்தார். அதன் முனையும் லேசாக நனைந்திருந்தது. அந்தக் குளிரிலிருந்து தப்பிக்க சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தால் நல்லதென்று தோன்றியது.

சிகரெட்டை உதட்டில் பொருத்திக்கொண்டு லைட்டரை எரியவிட்டார். நனைந்திருந்த திரி பிது செய்தது. திரியை விரலால் நசுக்கி, பனியனில் அழுத்தித் துடைத்து மறுபடி முயன்றார்.

லைட்டர் எரிந்தது. சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு. அதன் வெளிச்சத்தில் அந்த இடத்தை ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தார்.

அது ஒரு வரவேற்பு அறைகூட அல்ல... ஹால். அதன் மையத்திலிருந்த பெரிய டேபிள் மீது எண்ணெய் விளக்கு ஒன்று இருந்தது. பழங்கால விளக்கு. இருப்பினும் தூசு படியாத கண்ணாடிப் பரப்பின் ஊடாக அதனுள் எண்ணெய் இருப்பது தெரிந்தது.

கடந்த இருநூறு வருடங்களாக அந்த வீட்டில் ஆள் புழக்கமே கிடையாது. இருப்பினும் அந்த விளக்கில் எண்ணெய் இருக்கிறது!

டேவிட் ஆச்சரியப்பட்டார்.

டேபிளை நெருங்கினார்.

எண்ணெய் விளக்கின் சிம்மினியை உயர்த்தி. லைட்டரின் உதவியால் விளக்கை ஏற்றினார். முதலில் வெடித்துத் தெறித்த திரி, பிறகு நிதானமாக எரியத் தொடங்கியது.

சிம்மினியைத் துடைக்க வேண்டியதுதான் என்று நினைத்தவர், தோளில் கிடந்த ஈரத்துண்டைப் பிழிந்து. சிம்மினியைத் துடைத்தார். மறுபடி அதை விளக்கில் பொருத்தியதும் வெளிச்சம் பளிச்சென்று தெரிந்தது.

உயரம் குறைந்த சுவரில் அவருக்கு எதிரில் போட்டோ ஒன்று மாட்டப்பட்டிருப்பது டேவிட்டின் கண்களுக்குத் தெரிந்தது.

நடுவயது மனிதரின் போட்டோ அது.

"ஸால்வின் துரை!" அவர் உதடுகள் முணுமுணுத்தன.

சிகார்பைப் ஒன்றைக் கையில் பிடித்தபடி டேவிட்டையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கண்களுக்கு இன்னும் உயிர் இருப்பதாகத் தோன்றியது. பார்வை சற்றுக் கடுமையானதாக இருந்தது. ஒரு கொலையாளியின் கொடூரமும் அந்தக் கண்களில் தெரிந்தது. தனக்கு ஓர் இரை கிடைத்தது போல் அவர் பார்ப்பதாகத் தோன்றியது. டேவிட்டினால் அதிக நேரம் அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

வெளியே மழை நின்றுவிட்டதைப் போல் தோன்றியது. மழை இவ்வளவு விரைவில் நிற்குமென்று அவர் எதிர்பார்க்கவில்லை.

பயங்கர அமைதி அந்தப் பகுதியில் பரவி நின்றது.

மலைச்சிகரங்களில் அப்போதும் மின்னல்கள் பதிந்து கொண்டிருந்தன. திறந்து கிடந்த ஜன்னல்கள் மூலமாகக் காற்று உள்ளே வந்தது. விளக்கின் ஜுவாலை காற்றின் வேகத்துக்கு ஏற்றபடி ஆடி அசைந்து கொண்டிருந்தது. அந்த அசைவையொட்டி எதிரிலிருந்த போட்டோவும் அசைவதாக அவருக்குத் தோன்றியது.

தன் கைகள் நடுங்கத் தொடங்குவதை டேவிட் உணர்ந்தார்.

அடுத்த விநாடி-

வாசலில் யாரோ நிற்பதாக அவருக்குத் தோன்றியது!

## 3

எத்தனையோ மரணங்களுக்கும் தற்கொலைகளுக்கும் சாட்சியாக இருந்த டேவிட், அந்தக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டே போனார்!

திரும்பிப் பார்த்தார்.

வாசலில் பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். வெள்ளை உடை உடுத்திருந்தாள். வெள்ளைப் புடவை, வெள்ளை பிளவுஸ்.



இப்படியொரு பெண்ணை இதற்கு முன் இந்தப் பகுதியில் பார்த்திருப்பதாக அவருக்கு ஞாபகமில்லை!

அவள் டேவிட்டை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கண்கள் தீட்சண்யமாக ஒளிர்ந்து கொண்டிருந்தன.

ஜொலிக்கும் கனல்கட்டைகள் போலிருந்தன அவள் நயனங்கள்!

சட்டென்று என்னென்னவோ யோசனைகள் டேவிட்டின் மனத்தில் பாய்ந்து வந்தன.

ஸால்வின் துரையின் பங்களாவுக்கு வந்து, அவரின் தாகத்தைத் தணித்துப் பலியாடுகளாக மாறி அகால மரணமடைந்த பெண்களின் கதைகள். எத்தனையோ பேரின் உயிர் இந்த பங்களாவின் சுவர்களுக்குள் பெருமூச்சுகளுடன் கழிந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் எல்லோரும் வாழ்க்கையில் எத்தனை கனவுகளை, எதிர்பார்ப்புகளைச் சுமந்து கொண்டிருந்தார்களோ? ஆனால், அவையெல்லாம் குறிப்பிட்ட ஒரு நிமிடத்தில் அழிந்தல்லவா போனது?

இவள், அப்படிப்பட்ட பெண்களில் ஒருத்தியாக இருப்பாளோ?

அந்தப் பெண் இன்னமும் அதே நிலையில் நின்று கொண்டிருந்தாள். அசைவுகளற்ற ஒரு சிலை மாதிரி வாசலில் நிற்கிறாள். தான் நுழையும்போது அங்கு எவருமே இல்லை. கதவையும் தானேதான் திறந்தோம். அப்படியானால் இவள் பங்களாவுக்கு வெளியே இருந்திருக்கவேண்டும்.

இவள் யார்?

தான் நின்று கொண்டிருக்கிற இடத்திலிருந்து ஓர் அடி நகரக்கூட அவரால் முடியவில்லை. 'அதோ நின்று கொண்டிருப்பவள் மனிதப்பெண் இல்லையா? அப்படியானால்...' மேற்கொண்டு அவரால் யோசிக்க முடியவில்லை.

தோளில் போட்டிருந்த பையில் அப்போதும் ரம் பாட்டில்கள் இருக்கின்றனவே. அதில் ஒன்றை வெளியே எடுக்கலாமா என்று யோசித்தார். அந்த நேரத்தில் தைரியம் கிடைக்க அது

அவசியமென்றும் தோன்றியது. பையில் கையை விட்டார். நடுங்கும் கைகளுடன் அதன் மூடியைத் திறந்தார். வாயில் கவிழ்த்தார். உருகிய ஈயம் வழிவது போல் ரம் அவர் தொண்டைக்குள் இறங்கியது. அதுவரை இல்லாதிருந்த தைரியம் புதிதாக ஏற்பட்டது போலிருந்தது. இனிமேல் எது நடந்தாலும் பயப்படப் போவதில்லை. பாட்டிலை மூடி பழையபடி பைக்குள் போட்டுவிட்டு வாசலை நோக்கி நடந்தார்.

அந்த உருவம் அவரது முன்னேற்றத்தை ஒட்டிப் பின்னுக்கு நகர்ந்து கொண்டிருந்தது.

ஒருவேளை போதையால் தனக்கு அப்படித் தோன்றுகிறதோ?

"யார் நீ?" அவர் அலறினார். அந்தக் குரல் பங்களாவின் சுவர்களில் மோதி ஆயிரமாயிரமாக எதிரொலித்தது.

"யார் நீ...

யார் நீ...

யார் நீ?"

"யார் நீ?" என்பதைத் தவிர அவரால் மேற்கொண்டு எதையும் பேசமுடியவில்லை.

அவர் கால்கள் நடுங்க ஆரம்பித்தன. தன்னால் மேற்கொண்டு நிற்க முடியாதென்று தோன்றியது. ஏதோ ஒரு சக்தி தன்னை அடிமைப்படுத்துவதை உணர்ந்தார். தள்ளாடித் தள்ளாடி நடந்தவர் பொத்தென்று தரையில் குப்புற விழுந்தார்.

தோள் பைக்குள்ளிருந்த ரம் பாட்டில்கள் உடைந்து சிதறின. அந்த வரவேற்பு ஹாலின் வாசலில் ரம் பரவிப் படர்ந்து கொண்டிருந்தது. அதன் நடுவில் டேவிட் விழுந்திருந்தார்.

மறுநாள் காலையில் டேவிட்டுக்குத் தெரிந்தவர்கள் அவரைத் தேடிக்கொண்டு புறப்பட்டனர். குறிப்பிட்ட அந்தப் பங்களாவைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் தேடினர். நேற்று மாலை அவர் நகரத்திலிருந்து புறப்பட்டு விட்டார் என்பது



தெரிந்தது. அந்த மலைப் பிராந்தியம் முழுவதும் அவரைச் சல்லடை போட்டுச் சலித்தனர். கடைசியில் தைரியசாலிகளான இளைஞர்கள் சிலரின் ஆலோசனைப்படி அந்த பங்களாவுக்குள் தேடுவதென்று முடிவு செய்தனர். எனவே, இளைஞர்கள் கூட்டமாக பங்களாவுக்குச் சென்றனர்.

பங்களாவின் கதவு திறந்து கிடப்பதைப் பார்த்ததும் வந்தவர்களின் சந்தேகம் வலுத்தது.

வாசலை நெருங்கி உள்ளே நுழைந்தபோது சுயநினைவை இழந்த நிலையில் ரத்தத்தில் குளித்துக்கிடந்த டேவிட்டைக் கவனித்தனர்.

ரம்மின் வாசனை அந்த ஹாலிலிருந்து மறைந்திருக்க வில்லை. அந்தப் பகுதியில் பரவியிருந்த ரம் ஆவியாகிப் போயிருந்தாலும் மணம் காற்றில் அப்படியே தங்கியிருந்தது. உடைந்த பாட்டிலின் சிதறல்கள் அவருக்குச் சுற்றிலும் இறைந்து கிடந்தன.

டேவிட்டைப் பிடித்துத் தூக்கினார்கள்.

அவர் கண்களைத் திறந்தார்.

கனவிலிருந்து விழிப்பது போல் மிரள மிரள சுற்றுமுற்றும் பார்த்தார்.

"எனக்கு என்ன ஆச்சு?" முனகுவது மாதிரியான குரலில் கேட்டார்.

"பயப்படாதீங்க... உங்களுக்கு ஒண்ணும் ஆகலை!" டேவிட்டின் நெருங்கிய நண்பர் ஒருவர் பதிலளித்தார்.

'அவர் சுயநினைவுக்குத் திரும்பியதுபோல் தெரிந்தது. 'உண்மைதான் எனக்கு எதுவும் நேரவில்லை!'

"வாங்க போகலாம்..."வந்தவர்களில் ஒருவர் டேவிட்டின் கையைப் பிடித்து வெளியே கொண்டு வந்தார்.

தனது வீட்டுக்குள் வந்தவர் அங்கு நடந்ததையெல்லாம் விவரித்தார். அதைக் கேட்ட பிறகு வயதானவர்களின் நம்பிக்கைகள் உண்மைதான் என்பது உறுதியானது.

இதுதான் பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்தியின் சாராம்சம்.

"இதெல்லாம் உண்மையா இருக்கும்னு நெனைக்கிறீங்களா?" அதுவரை அந்தச் செய்தியைப் பற்றிக் கூறிய நண்பரிடம் அவர் கேட்டார்.

"செய்தி உண்மையா, பொய்யாங்குறது இங்கே விஷயமில்லை மிஸ்டர் கதிர்?" டிடெக்டிவ் புஷ்பராஜ் கூறினார்.

புகழ்பெற்ற துப்பறிவாளர் புஷ்பராஜ். உலகம் முழுவதும் செயல்படும் ஒரு தனியார் நிறுவனத்தில் அவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். தான் ஏற்றுக்கொண்ட வழக்குகள் எல்லாவற்றிலும் வெற்றி பெற்றிருப்பவர். இதுவரை ஏறத்தாழ அறுபது வழக்குகளைக் கண்டுபிடித்திருக்கிறார். இவை எல்லாமே புகழ்பெற்ற பத்திரிகைகளில் விரிவாக வெளியாகவும் செய்திருக்கின்றன.

"அந்த பங்களாவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" கதிர் கேட்டார்.

கதிர், புஷ்பராஜின் நெருங்கிய நண்பர். அவருடன் இணைந்து பணியாற்றுபவரும்கூட. புஷ்பராஜ் முக்கியமான வழக்குகளில் ஈடுபடும்போது அவருக்கு உதவும் முக்கிய நபர் கதிர்தான்.

"அன்றைக்குப் படித்த ரிப்போர்ட் சரியானது என்ற முடிவினால்தான் இந்த கேஸை விசாரிக்கத் தொடங்கினேன்." புஷ்பராஜ் சொன்னார்.

"அந்த பங்களாவைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"தெரியாது. இன்னும் நான் அதுக்குள்ள நுழைஞ்சு பார்க்கலை." அந்த பங்களா இருக்கும் திசையைப் பார்த்தபடி சொன்னார் புஷ்பராஜ்.

"நீங்க எதைப் பற்றிப் பேசுறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" பிரான்ஸிஸ் பெரேரா கேட்டவாறு அங்கு வந்தார்.



பிரான்ஸிஸ் பெரேரா அந்தக் கிராமத்தின் முக்கியப் பிரமுகர். ஏறத்தாழ ஐந்நூறு ஏக்கர் நிலத்தில் காபிச்செடி விளைந்து கொண்டிருந்தது அவருக்காக. மற்றொரு ஐந்நூறு ஏக்கரில் கொக்கோ வளர்ந்து கொண்டிருக்கிறது. இது தவிர ரப்பர் தோட்டம் ஒன்றும், அதையொட்டி ரப்பர் ஃபேக்டரி ஒன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

பிரான்ஸிஸ் பெரேரா மலையடிவாரப் பகுதியில் மதிக்கப்படும் பிரமுகரும்கூட. ஸால்வின் துரையின் பங்களாவை விலைக்கு வாங்க வேண்டுமென்ற ஆசை அவருள் நெடுநாளாக இருக்கிறது. ஆனால், அந்த பங்களாவைப் பற்றி அவர் கேள்விப்பட்ட கதைகள் அவருக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தன. இல்லா விட்டால் எப்போதோ அதை விலைக்கு வாங்கியிருப்பார்!

புஷ்பராஜும், கதிரும், பிரான்ஸிஸ் பெரேராவின் வீட்டுக்கு வந்தது, ஒரு ஃபேக்டரி நிறுவுவது பற்றிப் பேசுவதற்காகவும் அதைப் பற்றிய ஆலோசனை பெறுவதற்காகவும் என்ற போலிக் காரணத்துக்காகத்தான். வந்திருப்பவர்கள் யாரென்ற உண்மை பெரேராவுக்குத் தெரியாது.

"அந்த பங்களாவைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம்." புஷ்பராஜ் கூறினார்.

"நான் அதை என்றோ வாங்கியிருப்பேன். அது தற்போது வேறொருவரின் கையில் உள்ளது. அந்த நபர் ஊரிலில்லை. பங்களாவின் உரிமையாளரான ஸால்வின் துரை எத்தனையோ தலைமுறைகளுக்கு முன் அதை வேறொருவரிடம் ஒப்படைத்து இருக்கிறார். அப்படிப்பட்ட வாரிசுதான் இருக்கிறார்!"

"யார் அவர்?" கதிர் கேட்டார்.

"பெரியவர் ஒருத்தர். அவருக்கு சுமார் எழுபது வயசிருக்கும்."

"எவ்வளவு விலை கேட்கிறார்?"

"அஞ்சு லட்ச ரூபாய்!"

"பெறுமானம்தானா?"

"அந்த பங்களாவுக்குள் புதையல் இருப்பதாகச் சொல்கிறார் அவர்."

"அங்குதான் அவர் தங்கியிருக்கிறாரா?"

"இல்லை."

"உங்க முடிவு என்ன?"

"அஞ்சு லட்சம் கொடுத்தாவது அதை வாங்கிடணும்கிறது தான்!"

இரவு மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

"அதோ அங்கே ஒரு வெளிச்சம் தெரியுதே!" பங்களாவைப் பார்த்த கதிர் சொன்னார்.

## 4

"எங்கே?" புஷ்பராஜ் கேட்டார்.

"அதோ பாருங்க!" கதிர் சுட்டிக் காட்டினார்.

புஷ்பராஜும் பிரான்ஸிஸ் பெரேராவும் அந்தப் பக்கம் பார்த்தார்கள்.

ஓர் ஒளி மின்னி மறைந்தது தெரிந்தது.

"இன்னிக்கு வெள்ளிக் கிழமையில்லையா?"

"வெள்ளிக் கிழமையில என்ன விசேஷம்?" புஷ்பராஜ் கேட்டார்.

"அன்னிக்கு மட்டும்தான் இப்படிப்பட்ட காட்சிகள் தட்டுப்படும்!"

"ஓகோ... அப்படியா?" கதிர் கேட்டார்.



"எனக்கு இதுல எல்லாம் நம்பிக்கை இல்லை." பெரேரா தனது கோட்டின் காலரைச் சரிப்படுத்தியபடி பேசினார். அவர் செயற்கையாகத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பேசுகிறார் என்று அவர்களுக்குத் தோன்றியது.

"அந்தக் கட்டடத்துக்குள்ளே நுழைஞ்சு பார்க்கலாம்னு தோணுது!" புஷ்பராஜ் எழுந்தார்.

"நீங்க என்ன பேசுறீங்க! பகல் நேரத்திலேயே அங்க போறதுக்கு யாருக்கும் தைரியம் வராது. இந்த நடுராத்திரியில அங்கே போய்ப் பார்க்கணும்னு சொல்றீங்களே! போதாக்குறைக்கு மழை வேற வரப் போகுது பாருங்க." பெரேரா தடுக்க முயன்றார்.

இருப்பினும் புஷ்பராஜ் அந்த இடத்துக்குப் போக வேண்டும் என்று விரும்பினார்.

"எந்தக் காரணத்துக்காகவும் நீங்க அங்கே போகக் கூடாதுங்கிறதுதான் என் அபிப்பிராயம். அதுவும் இந்த ராத்திரியில. இப்படி ராத்திரி நேரத்துல அங்கே போன ஒருத்தர் என்ன ஆனார்னு தெரியுமா உங்களுக்கு? அதுக்குப் பிறகு அவர் கண்விழிக்கவே இல்லை!"

"யாரது?"

"கங்காணி ஒருத்தர்."

"அவர் பேரு?"

"மாரிமுத்து!"

"அவருக்கு என்ன ஆச்சு?"

"அந்த பங்களாவில் இருந்து அவரோட பிணம்தான் திரும்பக் கிடைச்சது. அதுவும் சரியா மூணு நாளைக்குப் பிறகு!"

"நீங்க சொல்ற சம்பவம் நடந்து எவ்வளவு நாளாச்சு?"

"சுமார் மூணு வருஷம் இருக்கும்."

"அதுக்குப் பிறகு அதே மாதிரி அனுபவம் வேற யாருக்காவது நேர்ந்திருக்கா?" புஷ்பராஜ் கேட்டார்.

"டேவிட்னு ஒருத்தருக்கு இதே மாதிரி ஓர் அனுபவம் ஏற்பட்டிருக்கு. அவர் மட்டும் இன்னும் உயிரோட இருக்கார்."

"நாங்க அவரைச் சந்திக்க முடியுமா?"

"இப்போ அவர் ரம்முக்குள் நீச்சலடித்துக்கொண்டிருப்பார். அந்த பங்களாவிலிருந்து அவரைக் காப்பாற்றியபோது நிஜமாவே ரம்முக்குள்ளதான் விழுந்து கிடந்தார். ராத்திரி நேரத்தில் எப்படி அங்கு போனோம் என்பதே அவருக்கு ஞாபகமில்லை."

"உடனடியா அவரைப் பார்க்க முடியுமா?"

"நீங்க கண்டிப்பா பார்த்தே ஆகணும்னா ஆளனுப்பி வரவழைக்கலாம்" பெரேரா சொன்னார்.

"பார்த்தால் நல்லதுன்னு தோணுது!" புஷ்பராஜ் பதிலளித்தார்.

பெரேரா உடனே தன் வேலைக்காரர்களில் ஒருவரை அழைத்து, டேவிட்டைக் கூட்டிக்கொண்டு வருமாறு சொன்னார்.

"அவர் இந்த நேரம் வருவாரா, மாட்டாரான்னு தெரியலை!" வேலைக்காரர் போன பிறகு பெரேரா சொன்னார்.

அரைமணி நேரத்துக்குள் தேடிப்போன வேலைக்காரர் திகைப்புடன் திரும்பி வந்தார்.

"என்ன ஆச்சு?" பெரேரா கேட்டார்.

"அவரைக் காணோமாம்!"

"என்ன!" பெரரா கேட்டார்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால அவர் வீட்டிலேருந்து வெளியேறினாராம். எங்கே போனார், எதுக்குப் போறார்னு யார்கிட்டயும் எதுவும் சொல்லலையாம். யாருக்கும் எதுவும் தெரியலை."

"யாருக்குமேவா தெரியலை?"

"அப்படித்தான் சொல்றாங்க!"



"அப்பம்ன்னா..." புஷ்பராஜ் பேச்சைத் தொடங்கிவிட்டு நிறுத்தினார்.

"நீங்க என்ன சொல்ல வரீங்க?"

"ஒருவேளை அவர் அந்த பங்களாவுக்குள் இருக்கலாம்."

"என்னமோ... எனக்கும் அப்படித்தான் தோணுது."

அதே நேரம் கூட்டமாகச் சிலர் பெரேராவின் வீட்டை நோக்கி வருவதை அவர்கள் கவனித்தனர். வருபவர்களின் கைகளில் டார்ச்லைட்டும், தீப்பந்தங்களும் இருந்தன.

"என்னங்க...என்ன விஷயம்?"பெரேரா கேட்டார்.

"டேவிட்டோட மகளையும் காணோம்."

"நிஜமாவா?" பெரேரா வியப்புடன் கேட்டார்.

"ஆமாம். எப்படிக் காணாமப் போனாங்கன்னு யாருக்குமே தெரியலையா?"

"ஒருவேளை டேவிட் தன் மகளைத் தேடிப் போயிருக்கலாம், இல்லையா?" புஷ்பராஜ் கேட்டார்.

"அவரை எங்கே போனால் பார்க்கலாம்?" யாரிடம் என்றில்லாமல் கேட்டார் கதிர்.

"வாங்க... நாம நேரா அங்கேயே போய்ப் பார்த்துடலாம்." புஷ்பராஜ் கதிரைப் பார்த்துப் பேசினார்.

"இந்த நேரத்துல அங்கே போகணுமா?" பெரேரா கேட்டார்.

"டேவிட் மட்டுமில்லை... அவர் மகளும் காணாமல் போயிருக்காங்க. முதல்ல அவங்களைக் கண்டுபிடிக்கணும்." புஷ்பராஜ் ஒரு தீர்மானத்துக்கு வந்தவராகப் பேசினார்.

"நீங்க ரெண்டு பேரா இருக்கிறதால ஆபத்து எதுவும் ஏற்படாதுன்னு நினைக்கிறேன். சரி... போயிட்டு வாங்க. அதோ தெரியுறதுதான் நீங்க குறிப்பிடுற பங்களா." அறைக்குள் நுழைந்த

பெரேரா குண்டுகள் நிறைந்த டபுள் பேரல் துப்பாக்கி ஒன்றை எடுத்து வந்து புஷ்பராஜின் கையில் கொடுத்தார். துப்பாக்கி கிடைத்ததும் சுதிருக்குத் தைரியம் பிறந்தது.

புஷ்பராஜும் சுதிரும் பங்களாவை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

கடுமையான இருட்டு, சூழ்நிலையை ஆக்கிரமித்திருந்தது. அந்த பங்களாவுக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் உயரமாகப் புல் வளர்ந்திருந்தது. இருபுறமும் நெருக்கமாக வளர்ந்திருந்த புதர்கள், பாதையை ஓரளவு அடையாளம் காட்டின.

"பாதையைப் பார்த்தா வருஷக்கணக்கா யாருமே பயன் படுத்தறதில்லேன்னு தோணுது." புஷ்பராஜ், சுதிரிடம் சொன்னார்.

மேற்குத் திசையிலிருந்து குளிர்ந்த காற்று வீசியது. ஸஹ்யாத்திரியின் மலைச் சிகரங்களைத் தொட்டுக்கொண்டு வரும் காற்று. அந்த நேரத்தில் நள்ளிரவின் ஒலி என்பது போல் ஏதோ ஒரு சத்தம் இடைவெளியுடன் கேட்டுக் கொண்டிருந்தது.

"தனியா நடக்கிறவங்களுக்கு இந்த பாதை அவ்வளவா நல்லதில்லைனு தோணுது!" சுதிர் சற்று நேர இடைவெளிக்குப் பிறகு பேசினார்.

"உண்மைதான்!"

பங்களா இருக்குமிடத்தை அவர்கள் நெருங்கினர்.

இருளில் குளித்தபடி நின்று கொண்டிருந்தது அந்தப் பிரம்மாண்டக் கட்டடம்.

புஷ்பராஜ் டார்ச்லைட்டை எடுத்தார்.

சுதிரின் கையில் டபிள் பேரல் துப்பாக்கி எந்த நேரமும் குண்டைத் துப்பத் தயாராக இருந்தது.

" என்ன நடந்தாலும் துப்பாக்கியைப் பயன்படுத்தக் கூடாது!' புஷ்பராஜ் எச்சரித்தார்.

"சரி!"



பங்களாவின் வராந்தாவை நெருங்கினர்.

டேவிட்டுக்கு நேர்ந்த அனுபவம் அவர்கள் மனத்தின் மேற்பரப்பிலேயே நின்றிருந்தது. அவர் சுயநினைவற்றுக் கிடந்ததும், அவருக்கு நிகழ்ந்த நம்பமுடியாத சம்பவங்களும் அப்போது அவர்கள் நினைவில் எழவே செய்தன.

டேவிட்தான் அந்த பங்களாவைப் பற்றிய விஷயங்களைச் சொன்னவர். அவருக்கு மட்டும்தான் சமீபத்தில் இப்படியோர் அனுபவம் ஏற்பட்டுள்ளது. கடைசியில் அவர் மட்டும்தான் அந்தப் பங்களாவின் சாபத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

பங்களாவின் வராந்தாவுக்கு வந்தனர்.

இருளில் மூழ்கிக் கிடந்த அந்தக் கட்டத்தின் நான்கு புறமும் காட்டுக் கொடிகள் கன்னாபின்னாவென்று வளர்ந்து கிடந்தன.

"அதோ பாருங்கள் கதவு திறந்தது கிடக்கிறது." சுதிர் சொன்னார்.

புஷ்பராஜ் டார்ச் லைட்டை எரியவிட்டார்.

"என்னது!" சட்டென்று பின்வாங்கினார்.

வரவேற்பு ஹாலுக்குள் யாரோ ஒரு பெண் குப்புறப் படுத்துக் கிடந்தாள்.

'அவள் யாராக இருப்பாள்?'

புஷ்பராஜ் வரவேற்பு ஹாலில் கிடந்த அந்த உருவத்தை நெருங்கினார்.

இரவு உடை அணிந்திருந்தாள் அவள்.

அவள் யார்? என்பது இருவருக்கும் புரியவில்லை.

"இவள் டேவிட்டின் மகளாக இருக்கவேண்டும்!" புஷ்பராஜ் சொன்னார்.

"எப்படித் தெரிஞ்சது உங்களுக்கு?"

"அப்படித்தான் தோணுது!"

ஆனால், டேவிட் அங்கு எங்கும் இல்லை. புஷ்பராஜ் அவளை நெருங்கிப் பரிசோதித்தார்.

"இன்னும் உயிர் இருக்கு!"

"அப்பமன்னா இவளைக் காப்பாத்த முயற்சி பண்ணணும்." கதிர், அவளை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டார்.

அவளுடன் இருவரும் பங்களாவுக்கு வெளியில் வந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்ததைப் போல் எந்தவிதமான எதிர்ப்பும் அங்கு ஏற்படவில்லை. அந்தப் பெண்ணைத் தோளில் போட்டுக் கொண்டு கதிர் வந்த வழியே நடக்கத் தொடங்கினார். புஷ்பராஜ் பின்புறமிருந்து டார்ச் லைட் அடித்தபடி அவரைத் தொடர்ந்தார்.

பெரேராவின் வீட்டுக்கு வந்தனர்.

"என்ன இது?" பெரேரா கேட்டார்.

"அந்த பங்களாவுக்குள் கிடந்தாள். யார் இந்தப் பெண்?" கதிர் அவளை சோபாவில் படுக்க வைத்தபோது புஷ்பராஜ் கேட்டார்.

பெரேரா அவள் முகத்தைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றார்.

"சுயநினைவோட இருக்கிறாளா?" பெரேரா கேட்டார்

"உயிரோட இருக்கிறாள்!" புஷ்பராஜ் பதிலளித்தார்.

"இது டேவிட்டின் மகள். அவருக்கு இந்த ஒரு பொண்ணு மட்டும்தான். இவளையும் ஸால்வின் துரை அபகரிச்சுட்டாரா?" பெரேரா கண்ணிமைகளை இமைக்க மறந்தவராகக் கேட்டார்.

"நீங்க இப்படிச் சொல்லக் காரணம்?" புஷ்பராஜ் சந்தேகத்துடன் கேட்டார்.

"நான் என்னதான் சொன்னாலும் உங்களுக்குப் புரியப் போறது இல்லை. இதெல்லாம் இந்த மலைச்சரிவில சாதாரணமா நடக்கிறது. வயசுக்கு வந்த பெண்களுக்கு இந்தப் பகுதி ரொம்பவும்



ஆபத்தான இடம். ஸால்வின் துரையின் ஆவி இன்னமும் அந்த பங்களாவுக்குள்ளே இருக்கு. அவரோட பழைய வேட்டை இன்னும் தொடர்ந்திட்டிருக்கு. அந்த வேட்டைக்குப் பலியாகாதவங்க ரொம்பவும் குறைவு. ம்... கடைசியில் இவளும் அந்த வலையில் விழுந்துட்டாள்" பெரேரா பெருமூச்செறிந்தபடி பேசினார்.

"இப்பவும் நீங்க சொன்னதோட அர்த்தம் எனக்குப் புரிய வில்லை!" புஷ்பராஜ் கூறினார்.

"புதுசா வந்த யாருக்கும் இதெல்லாம் புரியாது. நூற்றாண்டுக்கும் மேலாக இந்த மலைச்சரிவில் நடக்கும் ஒரு சம்பவம் இது. இன்னும் அது நிற்காமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது." பெரேரா சொன்னார்.

"அப்பமன்னா இதுக்குப் பின்னால ஏதோ ஒரு ரகசியம் ஒளிஞ்சிருக்கு!"

"உண்மைதான்! மனிதரல்லாதவர்களின் ரகசியங்களை யாரால் தெரிந்துகொள்ள முடியும்? ஆவிகளுக்கு மட்டும்தான் அதெல்லாம் புரியும்."

அதே நேரம் அந்த வீட்டு வாசலில் எவரோ வந்து நிற்பது போல் அவர்களுக்குத் தோன்றியது.

புஷ்பராஜ் சட்டென்று வாசல் பக்கம் ஓடி வந்தார்.

ஆனால், அந்தப் பகுதியில் எவரையும் காணவில்லை.

அதே சமயம்-

ஸால்வின் துரையின் பங்களாவுக்குள் மறுபடியும் ஒரு தடவை வெளிச்சம் தோன்றி மறைந்தது!

## 5

எல்லோரும் அந்த பங்களாவை நோக்கித் திரும்பினர். அப்போது சற்றுத் தொலைவில் யாரோ நடந்து வருவது தெரிந்தது.

"வர்றவர்தான் டேவிட்." பெரேரா சொன்னார்.

"நீங்க இவ்வளவு நேரம் எங்கே போயிருந்திங்க?" புஷ்பராஜ், டேவிட்டிடம் கேட்டார்.

"நான் சொன்னா யாருமே நம்பமாட்டாங்க! இவள் கிட்டயும் நான் எத்தனையோ தடவை சொல்லியிருக்கேன். அந்த மனிதருக்கு மரணமில்லேன்னு எனக்குத் தெரியும். இப்படிப்பட்ட மோசமான மனுஷங்களோட ஆவி ஒருபோதும் பூமியை விட்டுப் போகவே போகாது. அது அலைஞ்சு திரிஞ்சுக்கிட்டே இருக்கும். இல்லேன்னா யாரோட உடம்புக்குள்ளேயாவது புகுந்து திரியும். ஸால்வின் துரையை எங்க அப்பா பார்த்திருக்கார்!" டேவிட் நெகிழ்ந்த குரலில் சொன்னார்.

"இது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நான் இந்த இடத்துக்கு வரும்போது என் அப்பா உயிரோட இருந்தார். ஸால்வின் துரையைப் பார்த்த மறுநாள்தான் அவர் இறந்து போனார். அவர் பயந்ததுனாலதான் இறந்து போனதா எல்லாரும் சொன்னாங்க." டேவிட் தன் மகளைப் பார்த்தபடி பேசினார்.

"நான் அதையெல்லாம் நம்பலை. அதெல்லாம் கிடக்கட்டும். இப்ப உங்க பொண்ணு தப்பிச்சுட்டாளே! அது போதும். அவள் கண் திறந்த பிறகு மிச்ச விஷயங்களைக் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்."

"சூஸன்...சூஸன்...அப்பா வந்திருக்கேம்மா!" அவளை நெருங்கிய டேவிட் அழைத்தார்.

நல்ல காற்றோட்டமான இடத்தில் படுத்திருந்த சூஸன் மெதுவாகக் கண்களைத் திறந்தாள்.

"உன்னால எழுந்து உட்கார முடியுமாம்மா?"

"முடியும் அப்பா!" அவள் எழுந்து உட்கார்ந்தாள்.



தான் முற்றிலும் புதிய ஓரிடத்தில் இருப்பதை அப்போது தான் அவள் உணர்ந்தாள். வியப்பு நிறைந்த விழிகளுடன் அவள் தனக்குச் சுற்றிலும் நிற்பவர்களைப் பார்த்தாள்.

"இது எந்த இடம்?" அவள் கேட்டாள்.

"நம்ம முதலாளி வீடுதான்! சரி வா. நாம போகலாம்!" டேவிட் சொன்னார்.

அவள் எழுந்து நிற்கச் சிரமப்பட்டாள். டேவிட் அவளுக்கு உதவினார்.

"இந்த ராத்திரி நேரத்துல போகணுமா?" பெரேரா கேட்டார்.

"அதுக்கென்ன பரவாயில்லை. இந்தாம்மா, இந்த மழைக் கோட்டைப் போட்டுக்க." டேவிட், தான் அணிந்திருந்த கோட்டைக் கழற்றி அவளிடம் கொடுத்தார்.

அவள் அதை வாங்கி அணிந்து கொண்டாள்.

"இந்தாங்க மிஸ்டர் டேவிட்... இந்த டார்ச்லைட்டையும் கொண்டு போங்க." பெரேரா மேஜை மீதிருந்த லைட்டை அவரிடம் நீட்டினார்.

வெளியே அப்போதும் மழை பெய்து கொண்டிருந்தது. அவ்வப்போது மின்னல்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன.

'இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?' பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள முடிந்ததே தவிர, யாருக்கும் எதுவும் புலப்படவில்லை.

நள்ளிரவு தாண்டி வெகு நேரமாகி விட்டிருந்தது.

புஷ்பராஜும் சுதீரும் பெரேராவின் அவுட்ஹவுஸை நோக்கி நடந்தனர்.

"இங்கே நடக்கிறதெல்லாம் ரொம்பவும் ஆச்சரியகரமான சம்பவமா இருக்கு." சுதீர் பேசினார்.

"நான்தான் ஏற்கெனவே உங்ககிட்டச் சொன்னேனே... இந்தப் பகுதியில இருக்கிறவங்கெல்லாம் மூடநம்பிக்கை உள்ளவங்கன்னு!" புஷ்பராஜ் பதிலளித்தார்.

"நீங்க சொல்றது உண்மையா இருந்தா, தூஸன் எப்படி அந்த பங்களாவுக்கு வந்திருப்பான்?"

"நானும் அதைப் பத்தித்தான் யோசிச்சுக்கிட்டிருக்கேன். இதில் என்னமோ ரகசியம் இருக்கு."

பொழுது விடிந்தபோது பெரேராவின் வேலைக்காரர், இரண்டு கப் காபியுடன் அவர்களை எழுப்பினான்.

"உங்க முதலாளி என்ன பண்றார்?" புஷ்பராஜ் கேட்டார்.

"விடியற்காலையிலேயே எங்கேயோ கிளம்பிப் போயிட்டார். யாரோ ஒருத்தர் கார்ல வந்து அவரைக் கூட்டிட்டுப் போனார். பெரும்பாலும் அவர் வீட்டுல இருக்கிறதே இல்லை. அப்படி அவர் எங்கேதான் போவாருண்ணும் எங்களுக்குத் தெரியாது."

"இன்னிக்கே திரும்பி வந்து விடுவாரா?"

"ஒண்ணும் சொல்லலை. உங்களை நல்லா கவனிச்சுக்கச் சொன்னார்."

"முதல்ல இப்படி உட்காருங்க. உங்ககிட்ட நாங்க நிறையப் பேச வேண்டியிருக்கு" சுதீர் சொன்னார்.

"சாயந்திரமா வர்றேனே. இப்ப நிறைய வேலை இருக்கு. சாதாரணமா பகல் நேரத்துல நான் கொஞ்சம்கூட ஓய்வா உட்கார முடியாது!" வேலைக்காரர் சொன்னார்.

"சரி, உங்க சௌகரியப்படி செய்யுங்க. உங்க வேலையெல்லாம் முடிச்சுட்டு சாயந்திரமா வாங்க! நாங்க உங்களுக்காகக் காத்திருப்போம்."

வேலைக்காரர் வெளியேறினார்.

வேளாவேளைக்கு டிபன், சாப்பாடு என ஒவ்வொன்றும் தவறாமல் வந்து கொண்டிருந்தன.

மாலை நேரமாகியும் பெரேரா வந்து சேரவில்லை.

இரவு ஒன்பது மணியானபோது வேலைக்காரர் வந்தார்.



"இனிமேல் எனக்கு ஓய்வுதான். இப்ப கேளுங்க. நான் பதில் சொல்றேன்" வேலைக்காரர் தரையில் சப்பணமிட்டு அமர்ந்தார்.

அதற்குள் இரவுச்சாப்பாட்டை முடித்துவிட்டிருந்த புஷ்பராஜும், சுதீரும் வேலைக்காரரின் கதையைக் கேட்க உட்கார்ந்தனர்.

புஷ்பராஜ் சிகரெட் பாக்கெட்டைத் திறந்து ஒரு சிகரெட்டை எடுத்து வேலைக்காரரிடம் நீட்டினார்.

அவர் அதை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டார்.

பற்றவைத்துக் கொண்டனர்.

"நீங்க இங்கே வேலைக்கு வந்து எவ்வளவு நாளாகுது?" புஷ்பராஜ் கேட்டார்.

அந்த அவுட்ஹவுஸ் பெரேரா பங்களாவின் மேற்குப்புறம் இருந்தது. தனியாகக் கட்டப்பட்டிருந்த அந்தச் சிறிய கட்டடத்தின் சுற்றிலும் சவுக்கு மரங்கள் வளர்ந்திருந்தன. பெரேராவின் பங்களாவையும் அவுட் ஹவுஸையும் பெரேரா தன் நேரடிக் கண்காணிப்பில் கட்டியிருந்தார்.

"நான் வந்து... வந்ததெல்லாம் இல்லை. நான் பிறந்ததே இங்கேதான்!"

"அப்படீன்னா?"

"என் அப்பாவும் இதே வீட்டுல வேலை செய்தவர்தான் அவர் அப்பா - அதான் என் தாத்தா ஸால்வின் துரை கிட்ட வேலை செஞ்சவர்."

"அந்த பங்களாவுக்குச் சொந்தக்காரரான ஸால்வின் துரை கிட்டயா?" சுதீர் கேட்டார்.

"ஆமாம்... அந்தத் துரைதான் எங்க தாத்தாவை இங்கே கூட்டீட்டு வந்தாராம். அவர் கோவாக்காரர். இங்கே வந்த பிறகுதான் கல்யாணம் பண்ணிக்கிட்டாராம்?"

"நீங்க அவரைப் பார்த்திருக்கீங்களா?"

"இல்லை!"

"ஸால்வின் துரையைப் பத்தின கதைகள் உங்களுக்குத் தெரியுமா?"

"கேள்விப்பட்டதுதான்."

"என்னவெல்லாம் கேள்விப்பட்டிருக்கீங்க?"

"துரை ரொம்பவும் பயங்கரமானவர்னு கேள்விப் பட்டிருக்கேன். யார் பார்த்தாலும் பயப்படக்கூடிய உருவமாம் அவருது. ரொம்பவும் மோசமானவர்னும் சொன்னாங்க. நிறையப்பேர் அவரோட துப்பாக்கிக்குப் பலியாகியிருக்காங்க. அந்த பங்களாவைச் சுத்தியிருக்கிற ஆழந்தெரியாத குழிகள்ல ஏராளமான பிணங்களை வீசியிருக்கிறதாவும் சொல்லிக்கிறாங்க. தங்கத்தை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யுறதுதான் அவரோட வேலையாம். அதுக்காக நிறையப் பேரை வேலைக்கு வெச்சிருந்தாராம். இந்த இடத்திலேர்ந்து யாராவது தப்பிக்க நெனைச்சா, துரைக்கு அது தெரிஞ்சா உடனே அந்த நபரைச் சுட்டுக் கொன்னுடுவாராம். இந்த இடத்துலேயே புதைச்சுடுவார். அதே மாதிரி எத்தனையோ பெண்களைத் துப்பாக்கியாலேயே அடிச்சுக்கொன்னுருக்காராம். இதையெல்லாம் அப்பா எங்கிட்டச் சொல்லியிருக்கார்." ஜன்னல் வழியாக வெளியே பார்த்துப் பேசிக் கொண்டிருந்தார் வேலைக்காரர்.

"சமீபத்துல இப்படி நம்பமுடியாத சம்பவங்கள் எதுவும் நடந்ததா ஞாபமிருக்கா?"

"எவ்வளவோ பேர், எவ்வளவோ கதை சொல்றாங்க. ஆனா, ஒரு விஷயம் உண்மை. இப்பவும் அந்த பங்களா பக்கம் ராத்திரி வேளைகள்ல யாரும் நடமாடறதில்லை. அவ்வளவு பயம். துரையோட ஆவி அந்தப் பக்கம் அலைஞ்சுட்டிருக்கிறதா சொல்றாங்க."

"ராத்திரி நேரத்துல சில சமயம் அந்த பங்களாவில் என்னமோ வெளிச்சம் தெரியுறதா சொல்றாங்களே, அது உண்மையா?"



"உண்மைதான். குறிப்பா வெள்ளிக்கிழமைகள்ல வெளிச்சம் தெரியும்."

"நீங்க பார்த்திருக்கீங்களா?"

"பார்த்திருக்கேன்."

"அதெல்லாம் வெறும் பிரமையா இருக்கும்." புஷ்பராஜ், அந்த பங்களா இருந்த பகுதியைப் பார்த்தபடி பேசினார்.

மணி பதினொன்றுக்குமேல் ஆகிவிட்டிருந்தது.

வேலைக்காரருக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்றியது.

"தூக்கம் வருது சார்... மிச்சத்தை நாளைக்குப் பேசிக்கலாமே?" அவர் எழுந்து வெளியே போனார்.

"அவர் சொன்னதுல ஏதாவது உண்மை இருக்கும்னு உங்களுக்குத் தோணுதா?" கதிர் கேட்டார்.

"உடனடியா நாம ஒரு தீர்மானத்துக்கு வந்துடக்கூடாது. நிறைய விசாரிக்கணும். இங்கே என்னென்னமோவெல்லாம் நடக்குது. இதுக்குப் பின்னால யாரெல்லாமோ இருக்கிறதாத் தோணுது. ஒருவேலை செய்யறீங்களா? நீங்க தூங்காம இருக்கணும். இந்த பங்களாவுக்கு யாராவது வர்றாங்களான்னு பார்க்கணும். நான் ஸால்வின் துரை பங்களாவுக்குள்ளே போய் சோதனை போடுறேன். நாம ரெண்டு பேரும் ஒண்ணாப் போனா சில சமயம் சோதனை பலனில்லாமல் போயிடலாம். அது மட்டும் இல்லாமல், பெரேரா வந்தால் நம்மைத் தேடுவார். உங்ககிட்டக் கேட்டா, நான் தூங்கிட்டிருக்கேன்னு சொல்லுங்க. நாம ரெண்டுபேருமே இங்கே இல்லாமல் போயிட்டா அவருக்கு ஏதாவது சந்தேகம் வரலாம்."

"சரி, உங்க யோசனைப்படியே செய்யலாம்." கதிர் ஒப்புக் கொண்டார்.

புஷ்பராஜ் தனது ரிவால்வரை எடுத்து பாண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டார். கருமையான மழைக்கோட்டு அணிந்து, கம்பளியாலான தொப்பி ஒன்றையும் அணிந்துகொண்டார். சட்டென்று பார்த்தால் எவரும் கண்டுபிடிக்க முடியாத ஒரு வேடமாக இருந்தது அது. வெளியே இருட்டு மிகவும் கடுமையாக இருந்தது. எதற்கும் இருக்கட்டும் என்று பென் டார்ச்சையும் எடுத்துக் கொண்டார்.

"நான் புறப்படுறேன். பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்துட்டா, டார்ச் லைட்டை மூணு தடவை எரியவிட்டு அடையாளம் காட்டுறேன்." புஷ்பராஜ், கதிரிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

ஒற்றையடிப் பாதையில் நடக்கத் தொடங்கினார்.

அன்று மழையோ, இடியோ, மின்னலோ எதுவுமின்றி வானம் அமைதியாக இருந்தது. புஷ்பராஜின் நோக்கத்துக்கு இந்தச் சூழ்நிலை உதவவே செய்தது. தான் அந்த பங்களாவுக்குப் போவதை யாரும் அவ்வளவு சுலபத்தில் பார்த்துவிட முடியாதே? அதுவே அவருக்கு ஆறுதலாக இருந்தது.

இன்னும் அரை மணி நேரத்துக்குள் நிலவு மலை முகட்டுக்கு வந்துவிடும். எனவே, அவர் வேக வேகமாக நடந்தார். நிலா வெளிச்சம் பரவிவிட்டால் அந்த மலையடிவாரம் வெளிச்சத்தில் மூழ்கிவிடும். அதற்குள் பங்களாவின் காம்பௌண்டை அடைந்து விட வேண்டும். காம்பௌண்டுக்குள் பைன் மரங்கள் இருப்பதால் எப்படியும் தப்பித்துவிடலாம்.

பதினைந்து நிமிடத்துக்குள் அவர் பங்களாவை நெருங்கினார்.

அமைதி, அந்தப் பகுதி மொத்ததையும் ஆக்கிரமித்திருந்தது.

வரைந்து வைத்த படங்களைப் போல் மரங்கள் அசைவற்று நின்றிருந்தன.

மெல்லிய தளிர் இலையை அசைக்கும் அளவுக்குக் கூட காற்று இல்லை.



புஷ்பராஜ் பங்களாவின் வரந்தாவுக்கு வந்தார்.

அவுட்ஹவுஸை நோக்கி மூன்று தடவை டார்ச் லைட்டை அடித்துக் காட்டினார்.

பங்களாவின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார். நுழைந்தவர் கதவை மூடி உடனே தாழிட்டார். பென் டார்ச்சை எரியவிட்டார்.

ஸால்வின் துரையின் போட்டோ!

அந்தக் கண்கள் தன்னை உற்றுப் பார்ப்பதாக புஷ்பராஜுக்குத் தோன்றியது.

அந்தக் கண்களுக்கு உயிர் இருப்பதாகத் தெரிந்தது. குரூரம் நிறைந்த கண்மணிகள்!

புஷ்பராஜ் சோபாவில் அமர்ந்தார்.

நிலவொளி மெதுவாகப் பரவத் தொடங்கியது.

மறுபடி அந்தப் படத்தை நோக்கி டார்ச்லைட்டை அடித்தார்.

ஸால்வின் துரையின் படத்தின் மேற்புறம் அதிசயமான ஒரு காட்சியை அவர் கவனித்தார்.

## 6

அந்தப் புகைப்படத்தின் மேற்புறம் தென்பட்ட காட்சி முதலில் சுவாரஸ்யமானதாகத் தோன்றினாலும் பிறகு அது அவருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தவே செய்தது.

அசாதாரணமான பருமனுடனிருந்த எலி ஒன்று அங்கிருந்தவாறு அவரை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தது. அதன் கண்கள் இரண்டும் வைரக் கற்களைப் போல் ஜொலித்தன. துரையின் கண்களும், அந்த எலியின் கண்களும் ஒரே மாதிரி இருப்பதாக புஷ்பராஜுக்குத் தோன்றியது. அவை இரண்டுக்கும் ஏதோ ஒரு பிரத்தியேகத் தன்மை இருப்பதைக் கண்டறிந்தார்.

எலி வந்த அதே விநாடி துரையின் கண்களின் பளபளப்புக் குறைந்தது போல் தோன்றியது. அதுவரை அந்த போட்டோ உயிருள்ளது போலிருந்தது. ஆனால், எலி அங்கு வந்து சேர்ந்த பிறகு புகைப்படத்திலிருந்த உணர்ச்சிகளின் தீவிரம் அப்படியே எலிக்கு மாறிவிட்டது.

முன்னொரு சமயம் கேள்விப்பட்ட கதை சட்டென்று ஞாபகம் வந்தது.

நீதிபதி ஒருவரின் ஆவியொன்று எலிக்குள் புகுந்து கொண்ட கதை. அதே போல் ஸால்வின் துரையின் ஆவியும் எலிக்குள் புகுந்திருக்குமோ?

அப்போதும் டார்ச்லைட் புகைப்படத்துக்கு நேராக வெளிச்சம் சிந்திக் கொண்டிருந்தது. எலி அசைவற்றதாக அவரை ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தது.

மேஜை மீது எண்ணெய் விளக்கு இருந்தது. அப்போதுதான் நினைவுக்கு வந்தது. டேவிட்கூட அதைப் பற்றிச் சொல்லி இருக்கிறாரே!

புஷ்பராஜ் விளக்கு இருந்த இடத்தைப் பார்த்தார். நல்லவேளையாக அது அங்கேயே இருந்தது.

விளக்கை நெருங்கி டார்ச்லைட்டை மேஜை மீது வைத்துவிட்டு சிகார் லைட்டின் உதவியால் அந்த எண்ணெய் விளக்கைக் கொளுத்தினார். புகை படிந்திருந்த சிம்னியின் வழியாக வெளிச்சம் வெளியேறத் திணறிக்கொண்டிருந்தது. அது அப்படியே எரியட்டும் என்று விட்டுவிட்டார். அறைக்குள் மங்கிய வெளிச்சம் பரவியது. புஷ்பராஜ் புகைப்படத்தின் மேற்புறம் பார்த்தார்.

அதற்குள் எலி மறைந்து விட்டிருந்தது!

அத்துடன் துரையின் புகைப்படத்தில் பழையபடி கண்கள் உயிர் பெற்றன. ஜன்னல் வழியாக நிலவொளி உள்ளே பாய்ந்து கொண்டிருந்தது. மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகியிருந்தது.



அந்தக் கட்டடத்தை ஒரு தடவை சோதித்து விடுவது என்று நினைத்தார்.

விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு உட்புறமிருந்த முதல் அறையின் கதவைத் திறந்து நுழைந்தார். அது படுக்கை அறை. அதன் நடுவில் பிரம்மாண்டான கட்டில் ஒன்று கிடந்தது. அருகில் ஒரு மேப்பாய். சுவர் அலமாரி பூட்டப்பட்ட நிலையில் இருந்தது.

புஷ்பராஜ் அலமாரியைத் திறந்தார்.

சிலந்திகள் ஏகத்துக்கு வலைபின்னி ஓர் ஆலையை அமைத்திருந்தன. அதற்குள் வெளிநாட்டு மதுவகைகளின் காலி பாட்டில்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எல்லாம் ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்டவை. துரை ஒரு சரியான குடிகாரர் என்பதற்கு அவை சாட்சியாக இருந்தன. அந்த அறையிலிருந்து மற்றோர் அறைக்குள் நுழையக் கதவு ஒன்று இருந்தது. அதுவும் பூட்டப்பட்டிருந்தது.

'அதைத் திறந்தால் என்ன?' என்று யோசித்தவர், தாமதிக்காமல் திறந்தார்.

அந்த அறை மிகவும் ஒடுக்கமாக இருந்தது. ஆறுக்கு ஆறு என்ற அளவிலான சதுர அறை. அதன் பிறகு கதவுகள் எதுவும் இல்லை. படுக்கை அறையை ஒட்டி இப்படியோர் அறை எதற்காகக் கட்டப்பட்டிருக்கும் என்று யோசித்தார். துரையின் மோசமான நடவடிக்கைகளுக்கு உதவத்தக்க வகையில் அந்தப் படுக்கையறையும், சின்ன அறையும் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று நினைத்தார்.

எப்போது வேண்டுமானாலும் தனது படுக்கையறைக்குள் நுழையக் கூடிய அளவு உரிமை உள்ளவர்களிடமிருந்து, தான் கொண்டு வந்திருக்கும் புதிய பெண்களை மறைத்து வைக்க அந்த அறை பயன்பட்டிருக்க வேண்டும்.

அப்படியானால் துரையைப் பற்றி உலவும் கதைகள் உண்மையாகத்தான் இருக்கவேண்டும்.

படுக்கை அறையிலிருந்து அவர் மறுபடியும் வரவேற்பு ஹாலுக்கு வந்தார்.

அவர் டார்ச்லைட் சுவிட்சை அமுத்தினார். ஆனால், அது எரியவில்லை.

டார்ச்லைட்டை வெகு நேரமாக அந்தப் புகைப்படத்தின் மீது எரியவிட்டது ஞாபகம் வந்தது. கையில் லைட்டில்லாமல் போவது நல்லதல்ல. எனவே, அன்றைய இரவை அங்கேயே கழிப்பதென்று தீர்மானித்தார்.

மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே இருந்தவரின் கண்ணிமைகள் தானாக மூடிக் கொண்டன. காரணமற்ற களைப்பு அவரை ஆட்கொண்டது.

சோபாவில் படுத்துக் கொண்டார்.

தான் ஒருவேளை இங்கேயே தங்கிவிடலாம் என்று சொல்லியிருந்ததால் சுதீர் தன்னை எதிர்பார்த்துக் காத்திருக்க மாட்டார்.

விளக்கிலிருந்த திரி படிப்படியாக வெளிச்சம் குறைந்து கடைசியில் அணைந்து போனது.

அறைக்குள் இருள் பரவினாலும் ஜன்னல் வழியாக வந்த நிலாவெளிச்சம் எதிர்ப்புறச் .சுவரில் மோதி சன்னமான பிரதிபலிப்பை நிகழ்த்திக் கொண்டிருந்தது. எனினும் பழைய சுவராக இருந்ததால் அந்த அறைக்குள் இருப்பவற்றைப் பார்க்க அந்த வெளிச்சம் போதுமானதாக இல்லை.

புஷ்பராஜ் கண்களை மூடினார்.

உணர்வுகள் உறக்கத்துக்குள் ஒடுங்கிய வேளை. ஏதோ மோசமான கனவு கண்டதைப் போல் சட்டென்று விழித்தார். கண்ணைச் சுழற்றி நான்கு புறமும் பார்த்தார்.

கண்ணாடி ஜன்னலில் ஒரு நிழல்!

அது பெண் உருவம் போலத் தெரிந்தது.



டேவிட் குறிப்பிட்ட சம்பவத்துடன் அந்த நிழலுக்குத் தொடர்பிருப்பதாக அவருக்குத் தோன்றியது. அவரும் இப்படித்தான் குறிப்பிட்டார். நிழல் மாதிரித் தெரிந்த அந்த உருவம் அசைவற்று நின்று கொண்டிருந்தது. கழுத்துவரை தலைமுடியை வெட்டிவிட்டிருந்த அந்த உருவம் •ஃபிராக் அணிந்திருந்தது. மெலிதான காற்றில் அதன் தலைமுடி ஆடிக் கொண்டிருந்தது.

'ஆவிகளுக்கு வடிவம் இருக்கிறதா என்ன?' புஷ்பராஜ் யோசித்தார்.

மேலைநாடுகளில் இப்படிப்பட்ட ஆவிகளைப் பற்றி விவாதிக்கும் ஆதாரபூர்வமான புத்தகங்கள் ஏராளமாக உள்ளன. சிலவற்றை அவரும் படித்திருந்தார். கண்களுக்குத் தெரியாத 'ஆவி'களைக் குறித்து ஆராய்ச்சி செய்யும் நிறுவனங்கள் கூட அங்கு உண்டு.

உலகத்தில் ஆவிகளின் மீது அதிக அளவு நம்பிக்கை வைத்திருப்பவர்கள் மேலை நாட்டுக்காரர்கள்தான் என்பதை அவர்களது புத்தகங்களே வெளிப்படுத்துகின்றன.

அந்தப் பெண்ணுருவம் அங்கேயே அசைவற்று நின்று கொண்டிருந்தது. புஷ்பராஜ் சோபாவிலிருந்து எழுந்திருக்காமல் படுத்த நிலையிலேயே கிடந்தார்.

'யார் இவள்?' அவர் யோசித்தார்.

ஆள் நடமாட்டமில்லாத இந்த பங்களாவில், அதுவும் ஊரார் 'பேய்கள் உலவும் வீடு' என்று குறிப்பிடும் இடத்தில் நள்ளிரவு நேரத்தில் தனியாக வந்து நிற்கவேண்டுமானால், அவள் சாதாரணமான பெண்ணாக இருக்கமுடியாது.

எது வந்தாலும் சரி என்று நினைத்தவராக பாக்கெட்டிலிருந்த ரிவால்வரை எடுத்துக்கொண்டு முன்னோக்கி நகரத் தொடங்கினார்.

அந்த நொடியிலேயே அந்த உருவம் சட்டென்று மறைந்தது.

துப்பாக்கி தன் கையிலிருப்பதை அவள் பார்த்திருப்பாள். அதனால்தான் பயந்து ஓடியிருப்பாள் என்று நினைத்தார். அப்படியானால், வந்தவள் மனிதப் பெண் என்பதில் சந்தேகமே இல்லை! எனவே, மறுபடியும் அவள் வந்தால்கூட நேருக்கு நேர் மோதுவதற்குப் பயப்பட வேண்டியதில்லை. சற்று எச்சரிக்கையுடன் முயன்றால் அவளிடமிருந்து ஏதாவது ரகசியங்களைத் தெரிந்து கொள்ளவும் முடியும் என்று நினைத்தார்.

அவ்வளவு விரைவாக அவள் அந்த பங்களா எல்லையை விட்டுப் போயிருக்க முடியாது என்று நினைத்தவராக வாசல் கதவை நோக்கி விரைந்தார்.

கதவைத் திறந்தார்.

அப்போது

அவள் வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

அவள் முகம் தெளிவற்றுத் தெரிந்தது.

"யார் நீ?" துப்பாக்கியை நீட்டிய புஷ்பராஜ் கேட்டார்.

அதற்குப் பதில் கிடைக்கவில்லை.

"யார் நீ...வாய் திறந்து பதில் சொல்லலையானால்..." அவர் ஒரு தடவை துப்பாக்கியை ஆட்டிக் காட்டினார்.

அதே நேரம் மேற்புறத்திலிருந்து எதுவோ ஒன்று அவர் கைமீது விழுந்தது. எதிர்பாராத இந்தத் தாக்குதலால் அவர் கையிலிருந்த துப்பாக்கி எங்கோ போய் விழுந்தது.

தன் கையின் மீது விழுந்தது, என்ன என்று தெரிந்து கொள்ளும் பொருட்டுப் பார்த்தார். ஜன்னலுக்கு அருகே சென்று வெளியேறும்போது அது இன்னதென்று அவருக்குப் புரிந்தது.

ஸால்வின் துரையின் புகைப்படத்துக்கு நேராக, தன்னைக் குரூரமாகப் பார்த்துக் கொண்டிருந்த எலிதான் அது.

சட்டென்று அவருக்குள் ஒரு நிம்மதியற்ற தன்மை பரவியது. இதுவரை அவரது வாழ்க்கையில் இப்படியோர் அனுபவம்



ஏற்பட்டதில்லை. ஓர் எலி கைமீது விழுந்ததும் கையிலிருந்த துப்பாக்கி எங்கோ போய் விழுவதா? அது மட்டுமல்ல எவ்வளவு துல்லியமான நேரத்தில் எலி தன் கை மீது வந்து விழுந்தது - அவளைச் சுட்டுவிடுவோம் என்று மிரட்டிய அதே கணத்தில் சொல்லி வைத்ததைப் போல் எலி பொத்தென்று விழுந்தது. அப்படியானால் அவளுக்கும் அந்த எலிக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறதா? புஷ்பராஜ் யோசித்தார்.

அதே நேரம் தனது துப்பாக்கி எங்கே விழுந்திருக்கிறது என்று தேடிப் பார்க்க முயன்றார்.

"தேடாதீங்க...வந்த விருந்தாளி அதை எடுத்துட்டுப் போயிட்டார்." வெளிப்புறத்திலிருந்து அவள் குரல் கேட்டது.

கண்ணாடித் துண்டுகள் தெறித்து விழுவதுபோல் அவளிடமிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

"நல்ல வேடிக்கை? எலி, துப்பாக்கியை எடுத்துட்டுப் போகுமா?" அவர் குரல் லாகவமாக இருந்தது.

"அந்த எலி ரொம்பவும் மோசமானது. மனுஷங்களையே கூட அது இழுத்துட்டுப் போயிருக்குது. அது எவ்வளவு பேரைக் கொன்னிருக்குதுன்னு தெரியுமா உங்களுக்கு?" அவள் கேட்டாள்.

"அதெல்லாம் கிடக்கட்டும். நீ யார், முதல்ல அதைச் சொல்!" புஷ்பராஜ் சற்றும் கலங்காதவராகக் கேட்டார்.

"என்னை உங்களுக்குத் தெரியாது. இன்னார்னு சொன்னா மட்டும் என்ன பிரயோஜனம்?" அவள் கேட்டாள்.

"உள்ளே வா!"

"வேண்டாம்... நான் இங்கேயே நின்னுக்கிறேன்."

"ஏன், பயமா இருக்கா?"

"நான் யாருக்குப் பயப்படணும்? என் பயமெல்லாம் அன்னிக்கே தீர்ந்து போச்சு!"

"என்னிக்கு?"

"அன்னிக்கு ராத்திரியோட!"

"புரியலை!"

"உங்களுக்கு அது ஒருபோதும் புரியாது!"

"புரிஞ்சுக்கத்தான் வந்திருக்கேன். இல்லேன்னா, இந்த ராத்திரி வேளையில இந்த இடத்துல நான் படுத்துத் தூங்கணும்கிற அவசியமில்லை."

"அப்போ புரிஞ்சுக்கிட்ட பிறகுதான் போவீங்க?"

"ஆமாம்!"

"உங்களுக்கு என்ன தெரியணும்?"

"ஸால்வின் துரையைப் பத்தி...!"

"இன்னுமா அவரைப் புரிஞ்சுக்க முடியலை?"

"தோல்வியை ஒப்புக்கிறேன்!"

"உங்களோட துப்பாக்கி உங்ககிட்டேயிருந்து கை நழுவினதை நேரடியாப் பார்த்தீங்க. அவர் பலத்தைத் தெரிஞ்சுக்க இதைவிட வேற என்ன ஆதாரம் வேணும்? ஹ...ஹ்ஹா...ஹி."

அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

சிரித்துக்கொண்டே பின்னோக்கி நகர்ந்தவள் கட்டடத்தை ஒட்டித் தொங்கிக் கொண்டிருக்கும் கொடிகளுக்குள் மறையவும் செய்தாள்.

அவள் சிரிப்பு அப்போதும் அந்தப் பகுதியில் எதிரொலித்துக் கொண்டிருப்பதாக அவருக்குத் தோன்றியது.

புஷ்பராஜ் சிகார்லைட்டை எரிய வைத்தார். அதன் வெளிச்சத்தில் தன்னுடைய துப்பாக்கியைக் கண்டுபிடிக்க முயன்றார்.

அவர் காலடியிலேயே துப்பாக்கி விழுந்து கிடந்தது. அதைக் கையில் எடுத்தவர் வெளியே ஓடி வந்தார்.



ஆனால், அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவர் மீண்டும் வரவேற்பு ஹாலுக்கே வந்து சேர்ந்தார்.

## 7

அந்த எலி தன் கையிலிருந்த துப்பாக்கியைத் தட்டிவிட்ட விஷயம் இப்போதும் அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அது எதிர்பாராமல் நடந்த ஒரு சம்பவமாகக்கூட இருக்கலாம். இருப்பினும் அது அவ்வளவு துல்லியமாக தன் கைமீது விழுந்தது?

அது ஏற்கெனவே புகைப்படத்தின் மேலிருந்து தன்னை ஊன்றிக் கவனித்தது. இதன் பின்னணியில் ஏதேனும் இருக்குமோ?

அந்த பங்களா மீண்டும் அமைதியில் ஆழ்ந்தது.

பயமேற்படுத்தக் கூடிய அமைதி.

இருப்பினும் புஷ்பராஜ் அதற்குள் இருக்கத் தீர்மானித்தார். அந்தக் கிராமத்திலிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மூட நம்பிக்கை மிகுந்தவர்கள். உயிருடன் இருக்கும்போதே மோசமான நடவடிக்கைகள் உள்ள மனிதன் இறந்துவிட்டாலும் அவனது ஆத்மா பூமியிலேயே அலைந்து கொண்டிருக்கும் என்று நம்புகின்றனர்.

ஸால்வின் துரை குரூரமானவர்.

அவர் பல பெண்களின் கற்பைச் சூறையாடி இருக்கிறார். அவரது ஆவி இப்போதும் பெண்களை வேட்டையாடிக் கொண்டிருப்பதாகப் பெரியவர்கள்-பழமையாளர்கள் நம்புகின்றனர். அந்த பங்களாவுக்குள் அவரது ஆவி வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் கருதுகின்றனர்.

புஷ்பராஜ் வரவேற்பு ஹாலிலிருந்து உட்புறமாக நடந்தார். அது ஒரு லைப்ரரி. சுவரையொட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணாடி ஷெல்புகளில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்

பட்டிருந்தன. கண்டபடி சிலந்திகள் வலை பின்னியிருந்த அந்த அலமாரிக்குள் என்னென்ன புத்தகங்கள் இருக்கின்றன என்று தெரியவில்லை. கண்ணாடி போட்ட அலமாரிகள் அங்கு மூன்று இருந்தன.

அறையின் மையத்தில் வட்டவடிவமான டேபிள் ஒன்றும் அதைச் சுற்றி ஆறு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. மேஜை மீது செப்பு உலோகத்தாலான இரண்டு மெழுகுவத்திப் பீடங்கள் இருந்தன. ஒவ்வொரு பீடத்திலும் மூன்று மெழுகுவத்திகள் பொருத்தும் வசதி இருந்தது. ஒன்றில் மட்டும் சற்றுத் தடித்த திரி. சுமார் நான்கு அங்குல நீளத்துடன் இருந்தது. புஷ்பராஜ் சிகார்லைட்டை எரியவிட்டு அதைப் பற்றவைத்தார். முதலில் சற்றுத் தயங்கிய திரி பிறகு நிதானமாக நின்று எரியத் தொடங்கியது. அறைக்குள் இருந்த இருட்டு சட்டென்று ஓடி அலமாரிகளின் பின்னால் ஒளிந்து கொண்டது. அறைக்குள் எதுவெல்லாமோ ஓடி ஒளியும் சத்தங்கள் கேட்டன. அவையும் எலிகள்தான். சுண்டெலிகள். அவை கிறீச்சிட்டபடி அலமாரிகளின் பின்னால் துள்ளிப்பாய்ந்தன. ஆனால், ஓர் எலிகூட அந்த அறையை விட்டு வெளியேற முற்படவில்லை.

முதலில் இருந்த ஷெல்பை நெருங்கிய புஷ்பராஜ் அதைத் திறக்க முயன்றார். துரும்பு பிடித்த கீல்களால் கதவுகள் திறந்து கொள்ளச் சிரமப்பட்டன. இருப்பினும் சற்று வலுவாக இழுத்ததும் கதவு திறந்துகொண்டத்து.

அதற்குள் மேற்புற வரிசையில் பிரத்தியேகமான புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. எல்லாப் புத்தகங்களும் ஒரே விஷயத்தைப் பற்றி விவாதித்தன.

'லிவிங்ஸ்பிரிட்ஸ் (வாழும் ஆவிகள்)' - என்பது முதல் புத்தகம்.

புஷ்பராஜ் அந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்தார். ஏறத்தாழ ஐந்நூறு பக்கங்கள் கொண்ட அந்தப் புத்தகத்தின் முதுகுப்பகுதி இற்றுப்போயிருந்தது. எனவே, தாள்கள் கட்டமைப்பிலிருந்து விடுபட்டிருந்தன.



'தி நேச்சர் ஆஃப் ஸ்பிரிட் (ஆவிகளின் இயல்புகள்)' இரண்டாவது புத்தகம்.

முழுக்கத் தோலால் பைண்ட் செய்யப்பட்ட புத்தகம். புஷ்பராஜ் அதைக் கையிலெடுத்து அதன் பக்கங்களைப் புரட்டினார். முதல் பக்கத்திலேயே ஸால்வின் துரையின் கையெழுத்து இருந்தது.

இப்படிப்பட்ட புத்தகங்களோடு அவருக்கு அளவு கடந்த ஆர்வமிருந்தது புஷ்பராஜுக்கு விளங்கியது. அவர் அங்கிருந்த மெழுகுவத்தி வெளிச்சத்தில் அந்தப் புத்தகத்தைப் பரிசோதிக்கத் தீர்மானித்தார்.

மேஜைமீது ஏராளமாகத் தூசி படிந்திருந்தது. அவை பெரும்பாலும் மச்சுப்பகுதியிலிருந்து விழுந்த காரைத் துகள்களாக இருந்தன. சரியான பராமரிப்பு இல்லாததால் கட்டடத்தின் மேற்பரப்பு காலப்பழைமையால் வலுவிழந்து தூளாகக் கொட்டத் தொடங்கியிருந்தது. நாற்காலிகளிலும் அதேபோல் சுண்ணாம்புக் காரை படிந்து அவற்றின் குஷன் நிறம் மாறியிருந்தன.

மெழுகுவத்தி ஸ்டாண்டை பக்கத்தில் தள்ளி வைத்துவிட்டு அந்தப் புத்தகத்தைப் புரட்டத் தொடங்கினார்.

ஒவ்வொரு பக்கத்தையும் எச்சரிக்கையுடன் புரட்டவில்லையானால், தூள் தூளாகிவிடும் என்பதை உணர்ந்தார். அப்படி ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டிக் கொண்டே வந்தபோது கசங்கிய தாள் ஒன்று அவர் கண்ணில் பட்டது. நான்காக மடிக்கப்பட்ட, நிறம் மங்கிய ஒரு காகிதத் துண்டு.

புஷ்பராஜ் மிகவும் நிதானமாக அந்தத் தாளைக் கையில் எடுத்துச் சேதாரமில்லாமல் விரித்தார்.

கறுப்பு நிற மையால் அந்தக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது. அதன் கீழ் ஸால்வின் துரையின் கையொப்பம் இருந்தது.

புஷ்பராஜ் அந்தக் காகிதத்தை ஊன்றிக் கவனித்தார். தெளிவற்ற எழுத்துகளால் எழுதப்பட்டிருந்த அந்தக் குறிப்பை மிகவும் கஷ்டப்பட்டு வாசித்தார்.

'...என் தீர்மானப்படி ஆவிகள் உண்டு. இந்தப் புத்தகமே அதற்கு ஆதாரம். உயிர்தான் அதற்கு முக்கியமான அடிப்படை. மருத்துவ முறையின் மொத்தச் சக்திகளையும் பயன்படுத்தினால் கூட உயிரை-அதாவது உடலிலிருந்து பிரிந்து போகிற (அப்போது தானே மரணம் நிகழ்கிறது) ஏதோ ஒன்றை மீண்டும் அந்த உடம்புக்குள் புகுத்த முடிவதில்லை. அப்படியானால் அந்த ஏதோ ஒன்றின் ரகசியத்தை இதுவரை யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. மரணமடைந்துவிட்டார் என்று நாம் குறிப்பிடுவது உயிர், உடம்பிலிருந்து வெளியேறுகிற நிலையைத்தானே! அப்படி விடுபடும் உயிர் எங்கே போகிறது?

அதுவரை அந்த உயிர் எங்கே இருந்தது?

அதே போன்றதுதான் அறிவும். அறிவு எல்லோருக்கும் ஒரே மாதிரி அமைவதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமான சிந்தனை இருக்கலாம். இந்த மாறுபட்ட தன்மை எப்படி ஏற்பட்டது? ஓர் ஓவியன், ஒரு பாடகன், ஒரு கவிஞன்... இவர்கள் எல்லாரும் மற்றவர்களிலிருந்து மாறுபட்டுப் போனது எப்படி? இதற்கெல்லாம் பின்னணியில் ஏதேதோ புரிந்து கொள்ள முடியாத ரகசியங்கள் அடங்கியிருக்கின்றன.

என் கருத்துப்படி 'உயிர்' என்ற பொருளுக்கு அழிவில்லை என்று கருதுகிறேன். அதை யாராலும் அழிக்க முடியாது. உடலிலிருந்து விடுபடும் உயிரை - அதைத் தற்சமயம் நான் ஆத்மா என்று அழைக்கிறேன்.

அது... அந்தச் சுற்றுப்புறத்திலேயே சுற்றியலைந்து கொண்டிருக்கிறது.

சமீப காலத்தில் இதே போன்று நான் மற்றொன்றைக் கண்டுபிடித்தேன். மிகவும் ஆச்சரியகரமான ஒரு விஷயம் அது. அது சரிதான் என்றும் நம்புகிறேன். என் நம்பிக்கையை வலுப்படுத்தும் விதமாக எத்தனையோ ஆதாரங்கள் உள்ளன. அவற்றின் அடிப்படையில்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன்.

உலகத்திலுள்ள உயிர் வகைகளிலேயே கட்டளையிடக் கூடியதும், அறிவு மிக்கதுமான உயிர் மனிதன் மட்டும்தான். எந்த



வகையான விலங்கையோ, உயிரையோ அடக்கியாளும் ஆற்றல் அவனிடம் இருக்கிறது. அவனின் கண்களுக்கு ஒரு பிரத்தியேகத் தன்மை உள்ளது. வெறையும் அவனால் அடிமைப்படுத்த முடியும். அதனால் உடலைவிட்டு வெளியேறும் உயிருக்கு மற்ற உயிரினங்களிடமும் ஆதிக்கம் செலுத்த முடியும்.

மனித உயிர் மரணமடைந்த பிறகு உடலிலிருந்து விடுபடும் ஆவி அல்லது ஆத்மாவுக்கு மற்ற உயிர்களில் புகுந்து கொள்ளும் வல்லமை இருக்கிறது. எந்த உயிர்களிடமும் அதனால் ஆதிக்கம் செலுத்த முடியும். அதனால்தான் பைசாசிக சக்திகள் உள்ள உயிர்களைப் பற்றி நாம் பேசுகிறோம். ஓநாய், வௌவால், எலி போன்றவையெல்லாம் இப்படிப்பட்ட உயிர்கள்தான். இவற்றின் உடல்களில் ஆவிகளால் சுலபத்தில் புகுந்துகொள்ள முடியும். எனவே, மனிதர்கள் மரணமடைந்து விட்டாலும் மற்ற உயிரினங்களில் புகுந்துகொண்டு உயிர் வாழ முடியும் என்று நான் கருதுகிறேன்!

இப்படிக்கு

ஸால்வின் ஃபோக்ஸ்'

அலங்கோலமான கையெழுத்துடன் அமைந்த கடிதத்தை புஷ்பராஜ் மீண்டும் ஒருமுறை வாசித்துப் பார்த்தார். பிறகு அந்தப் புத்தகத்தின் மற்ற பக்கங்களைப் புரட்டினார்.

ஆத்மாக்கள் எப்படி மற்ற உயிர்களில் புகுந்துகொள்ள முடியும் என்பதைப் பற்றி தொடர்ந்து வந்த பகுதிகள் விவரித்தன. அந்தப் புத்தகத்தைத் தன்னுடன் எடுத்துச் செல்ல அவர் விரும்பினார். அந்த இரண்டு புத்தகங்களையும் மெழுகுவத்தியின் அருகே வைத்துவிட்டு மீண்டும் அவர் அலமாரியின் அருகே சென்றார்.

அலமாரிக்குள்ளிருந்த சிலந்திவலைகளை மற்றொரு புத்தகத்தின் உதவியால் தட்டிச் சுத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். அந்த வரிசையில் அது தொடர்பான புத்தகங்களே அதிகமாக இடம் பெற்றிருந்தன. அவற்றில் சில புத்தகங்கள்

வரிசையிலிருந்து விலகி முன்புறமாக துருத்தியபடி நின்று கொண்டிருந்தன.

இதிலிருந்து ஸால்வின் துரை பொதுவாக இப்படிப்பட்ட புத்தகங்களைத்தான் வாசிப்பது வழக்கம் என்பது புஷ்பராஜுக்கு விளங்கியது. அவர் ஆவிகளைத் தேடி ஆராய்பவராக இருந்தார். அவை பற்றி - அப்படியொன்று இருந்தால், தேடும் இயல்பு கொண்டவராக அவர் இருந்தார். அதே வரிசையில் சற்று முன் தள்ளியிருந்த புத்தகம் ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு அவர் மீண்டும் மேஜை அருகே வந்தார்.

வந்தவர் திடுக்கிட்டார்.

தான் காண்பது உண்மையா?

மெழுகுவத்தியின் அருகே வைத்திருந்த புத்தகங்களின் அருகே...

சட்டென்று தான் கனவு காண்கிறோமோ என்றுகூட நினைத்தார் புஷ்பராஜ்!

## 8

'என்ன இது!' புஷ்பராஜ் வியப்புடன் மேஜையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

எலிக் கூட்டம் ஒன்று அந்தப் புத்தகங்களைச் சூழ்ந்து கடித்துத் தின்று கொண்டிருந்தது. அதன் ஒவ்வொரு காகிதத்தையும் நிதானமாக உருவி அவை சாவகாசமாக மென்று கொண்டிருந்தன. காகிதங்கள் ஒவ்வொன்றாக எலிகளின் வயிற்றுக்குள் மறைந்து கொண்டிருந்தன. மனிதர்கள் உணவை மென்று விழுங்குவது போலவே அவையும் காகிதங்களை மென்று கொண்டிருந்தன. நடுநடுவே அவை தங்களது பளபளப்பான கண்களை உயர்த்தி புஷ்பராஜைப் பார்க்கவும் செய்தன.



ஐந்து நிமிடங்களுக்குள் அங்கிருந்த புத்தகங்கள் மாயமாக மறைந்தன. ஆனால், ஒன்றே ஒன்று மட்டும் ஆச்சரியகரமான முறையில் எலிகளால் ஒதுக்கிவிடப்பட்டிருந்தது.

அது ஸால்வின் துரையின் கடிதம்!

அதற்கு மட்டும் எந்தவிதமான சேதாரமும் ஏற்படவில்லை.

அந்தத் தாளை மட்டும் அங்கேயே போட்டுவிட்டு எலிகள் மேஜை மீதிருந்து தாவிக்குதித்து மறைந்தன.

அந்தக் காட்சி புஷ்பராஜின் மூளைப் பகுதியில் ஒருபோதும் மறையாத திரைப்படக் காட்சி போல் பதிந்து கிடந்தது.

'எப்படிப்பட்ட காட்சி அது!'

அந்த எலிகள் அவ்வளவு சீக்கிரம் எங்கிருந்து வந்தன?

அந்த இரண்டு புத்தகங்களை மட்டும் எலிகள் சாப்பிடக் காரணம் என்ன?

அது மட்டுமா? ஸால்வின் துரையின் கடிதத்தை அவை சாப்பிடாமல் ஒதுக்கிவிட்டுப் போகவும் செய்திருக்கின்றன.

எலிக்கூட்டம் அங்கிருந்த அலமாரிகளின் பின்புறத்திலிருந்து சன்னமாகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தது.

தன் கைவசமிருக்கும் புத்தகங்களை மேற்கொண்டு மேஜைமீது வைப்பதில்லையென்று தீர்மானித்தார்.

புத்தகத்தைத் தின்ற எலிகள் மற்ற சாதாரண எலிகள் மாதிரியானவையல்ல. அவ்வளவு பெரிய புத்தகத்தை அவை எவ்வளவு விரைவில் தின்று தீர்த்தன?

மென்று தின்றன!

சாதாரணமாக எலிகள் கொரித்துப் போடுவது வழக்கம்.

ஆனால், இந்த எலிகள் அப்படியில்லாமல் மனிதர்கள் மாதிரி மென்று தின்றனவே!

37852

வியப்புடன் இந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தவர் மற்றொன்றையும் கவனித்தார். மேற்புறத்திலிருந்து சரவிளக்கு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. பழைய கால விளக்கு. அதன் சிம்மினிக்குள் மெழுகுவத்திகள் இருந்தன. பித்தளை உலோகத்தாலான அந்த விளக்கு பசுமை நிறம் பூண்டு களிம்பேறியிருந்தது மட்டுமின்றிச் சிலந்தி வலைகளும் ஏராளமாகப் படிந்து அந்த விளக்குப் பகுதியை மூடியிருந்தன.

அவர் அந்த விளக்கையே பார்த்துக் கொண்டிருந்தார். அது திடுமென்று அசைந்தது. இருபுறமும் ஆடத் தொடங்கியது. கடிகாரத்தின் ஒரு பெண்டுலம் போல் அது அசைந்தாடியது.

அந்த விளக்கை அப்படி ஆட்டுவது யார்?

அந்த அறைக்குள் காற்று நுழைய எந்தவிதமான வழியும் இல்லை. பின் எப்படி அந்த விளக்கு அசைந்தது?

விளக்கின் ஆடுவிசை நேரத்துக்கு நேரம்-விநாடிக்கு விநாடி அதிகரிக்கத் தொடங்கியது. அதை யாரோ வலுவாகப் பிடித்து ஆட்டுவது போல் தோன்றியது.

விளக்கின் மேற்பும் இருட்டாக இருந்தது. கீழ்ப்புறம் எரிந்து கொண்டிருந்த மெழுகுதிரியின் வெளிச்சம் மையத்திலிருந்த விளக்கின் மேற்புறத் தண்டுப் பகுதியை மறைத்திருந்தது. எனவே, விளக்கிலிருந்து மேற்கூரையை ஒட்டியிருந்த பகுதி இருளானதாகவே இருந்தது.

மறுவிநாடி-

அவருக்கு ஒரு காட்சி தெரிந்தது!

போட்டோவின் மேற்புறம் பார்த்த தடித்த எலி!

அது தொங்கும் விளக்கின் மேற்புறம் உட்கார்ந்திருந்தது. யார் அந்த விளக்கை ஆட்டுவது? யார் அந்த விளக்கை அசைக்க விரும்புவது?

புஷ்பராஜ் பாக்கெட்டிலிருந்து பென் டார்ச்சை வெளியில் எடுத்தார்.



அந்த எலியை நோக்கி லைட்டைப் பிடித்துக்கொண்டு பட்டனை அழுத்தினார். எலியின் கண்கள் வைரக் கற்களைப் போல் ஜொலித்தன.

வெளிச்சத்தைப் பார்த்த எலி சட்டென்று சங்கிலி வழியாக மேற்புறம் ஏறியது. பிறகு மேற்புற மச்சில் ஊர்ந்து-வழவழப்பான சுவர் வழியாக ஓர் உடும்பைப் போல் இறங்கி ஜன்னலை அடைந்து மறைந்தது.

புஷ்பராஜ் மேஜை மீதிருந்த ஸால்வின் துரையின் கடிதத்தை எடுத்தார். அதை அலமாரியிலிருந்து எடுத்த புத்தகத்துக்குள் வைத்தார்.

மூடப் பழக்கவழக்கங்களில் திளைக்கும் அந்தக் கிராமத்தினரைப் பொறுத்தவரையில் அங்கு நடந்த சம்பவங்கள் நம்பமுடியாதவைதான். அப்படிப்பட்ட மனிதர்கள் யாராவது இந்தக் காட்சிகளைக் காண நேர்ந்தால், நிச்சயம் பயப்படவே செய்வார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் 'ஸால்வின் ஃபோக்ஸ்' என்ற கையெழுத்திட்ட கடிதத்தை எலிகள் தொடாததைக் குறிப்பிடலாம்!

அதை மட்டும் எலிகள் ஏன் தொடவே இல்லை?

அத்துடன் அவருக்குள் மற்றொரு யோசனையும் தோன்றியது.

அந்த எலிகள் எதற்காக அந்தப் புத்தகத்தைத் தின்று தீர்த்தன?

எலிகளுக்கே உரிய பசியினாலா, எதையும் கொரிக்கும் இயல்பினாலா? அப்படியானால் குறிப்பாக அந்த ஒரு தாளை அவை விட்டுவைக்க என்ன காரணம்?

சட்டென்று அவர் மனத்துள் ஒரு யோசனை பளிச்சிட்டது.

ஆனால், எவ்வளவு மூடத்தனமான யோசனை அது? வெளியே சொல்லவே வெட்கப்படும் யோசனையும்கூட. 'அந்த எலிகள் அந்தப் புத்தகத்திலிருக்கிற லட்சியத்தையே சாப்பிட்டு விட்டவையா? அதிலிருந்த கருத்துகளை விழுங்கிவிட்டனவா?

சே... என்ன மடத்தனமான சிந்தனை!

மணி இரண்டாகியிருந்தது. அவர் கையில் கட்டியிருந்த எலெக்ட்ரானிக்ஸ் வாட்ச் நேரத்தைப் பளிச்சிட்டது.

கதிர் தூங்காமல் தன்னை எதிர்பார்த்துக் காத்திருப்பாரோ? தனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமென்று கவலைப் படுகிறாரோ என்னவோ? எனவே, தான் இதுவரை பெற்ற விஷயங்களுடன் புறப்பட வேண்டியதுதான் என்று நினைத்தார்.

பங்களா அமைதியில் ஆழ்ந்திருந்தது.

மரங்கள்கூட அசைவற்றிருந்தன.

புஷ்பராஜ் வராந்தாவுக்கு வந்தார்.

அங்குதான் அந்த இளம்பெண் நின்றிருந்தாள். 'ஆமாம்... அவள் யார்?'

வராந்தாவுக்கு வந்தவர் சற்றுநேரம் நின்றார். அப்போது அவருக்கு மற்றொரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது.

லைப்ரரி அறைக்குள் தான் மெழுகுவத்தியை ஏற்றி வைத்திருக்கிறோம். அது மட்டுமின்றி மறுபடி எடுத்த புத்தகத்தையும் மேஜைமீது வைத்திருக்கிறோம். அதையும் எடுக்கவேண்டும். ஏதோ நினைவில் அதை எடுக்க மறந்து போயிருந்தார்.

மறுபடியும் அந்த லைப்ரரி அறைக்குள் நுழைவது அவருக்கு அலுப்பான விஷயமாக இருந்தது. இருப்பினும் அந்தப் புத்தகத்தை அங்கே விட்டுவைப்பது நல்லதல்ல. மெழுகுவத்தியும் வீணாக எரிந்துகொண்டிருக்கும்.

புஷ்பராஜ் மறுபடி வரவேற்பு ஹாலுக்கு வந்தார். லைப்ரரியை அடைந்தார்.

மெழுகுவத்தி வெளிச்சம் மறைந்து போயிருந்தது.

அதே நேரம் அறைக்குள் சன்னமான வெளிச்சம் தெரிந்தது.

கண்ணிமைப்பதற்குள் அதோ...



அவர் ஒரு காட்சியைக் கண்டார். கண்மூடித் திறப்பதற்குள் அது கண்ணிலிருந்து மறைந்து போகவும் செய்தது.

ஒருவேளை தனக்கு அப்படித் தோன்றியதோ என்னவோ? தான் அவ்வளவு நேரமும் யோசனைகளுடன் போராடிக் கொண்டிருந்ததால் அப்படித் தட்டுப்பட்டதோ? உள்மனத்தில் பதிவதெல்லாம் சில சமயம் காட்சி போல் தோற்றமளிக்கவும் செய்யும்.

எப்படி இருப்பினும் தான் ஒரு காட்சியைப் பார்த்தோம்.

ஒருவர் தன் பக்கம் முதுகைக் காட்டிக்கொண்டு நின்றிருந்தார். அவர் பார்வை புத்தகத்தில் பதிந்திருப்பதுபோல் தோன்றியது. தான் மேஜைமீது வைத்திருந்த புத்தகத்தை வாசிப்பது மாதிரி...

ஆமாம்...அந்தப் புத்தகமும் திறந்து கிடந்தது.

'என்ன இது!'

ஸால்வின் துரையின் கடிதத்தை அதற்குள் வைத்துவிட்டு அந்தப் புத்தகத்தை மூடிவைத்தது நன்றாக ஞாபகமிருந்தது.

அது எப்படித் திறந்துகொண்டிருக்கும்?

புஷ்பராஜ் மொத்தத்தில் குழப்பத்துக்கு ஆளானார்.

அந்த பங்களாவுக்குள் நுழைந்தது முதல் நடந்ததெல்லாம் விசித்திரமான அனுபவங்கள்தான். இருப்பினும் புஷ்பராஜ் அந்தப் புத்தகத்தைக் கையில் எடுப்பதென்று தீர்மானித்தார்.

எடுப்பதற்கு முன்னால் திறந்து வைக்கப்பட்டிருந்த பக்கத்தில் கண்களை ஓட்டினார்.

அந்தப் பக்கத்தின் ஆரம்பத்தில் இப்படி இருந்தது...

... என்கிற பொருள் ஒரு போதும் அழிவதில்லை. அதற்கு மரணமில்லை. உடல் மட்டும்தான் அழிகிறது. ஓர் உடம்புக்குள் அது நுழைந்து விட்டால், தன் ஒருசில காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் பொருட்டு உடலிடமே அது சரணாகதி அடைந்து

விடுகிறது. அப்படிப்பட்ட உடம்பை அது இழந்து விடும்போது மற்றொரு நிலைக்காகக் காத்திருக்கிறது. சில சமயம் அது மற்றொரு மனிதனைக்கூட பிடித்துக்கொள்கிறது.

இது மிகவும் அபூர்வமாக கோடியில் ஒருவருக்கு மட்டுமே வாய்க்கிறது.

ஒரு மனிதன் மரணமடையும் சந்தர்ப்பத்தில் பெரும்பாலும் அகாலமாக இருந்தால் மட்டுமே இது நிகழும். குறிப்பிட்ட உடலிலிருந்து விடுபடும் உயிர், அதே நிமிடத்தில்-அதே நிமிடம் என்பதிலும் பொருள் உள்ளது. மற்றொரு உடலுக்குள் பிரவேசிக்கிறது. அதன் பிறகு அந்த உடலில் வசிப்பது பழைய உயிராக இருக்க முடியாது. மாறாகப் புதிதாகப் புகுந்த உயிராக இருக்கும். அந்த உடலே மற்றொரு உயிராக மாறிவிடும். படிப்படியாக இரண்டாவதாகப் புகுந்த உயிரின் தன்மைகளைப் பெறும். அந்த உயிர் பைசாசிகமானதாக இருந்தால், இயல்பாகவே அதுவும் பைசாசிகமானதாக மாறிவிடும்...' புஷ்பராஜ் படிப்பதை நிறுத்தினார்.

'குறிப்பிட்ட இந்தப் பக்கத்தை மட்டும் திறந்து வைப்பதற்கு என்ன காரணம்?' அவர் யோசனையில் ஆழ்ந்தார்.

# 9

டிடெக்டிவ் புஷ்பராஜ் அந்தப் புத்தகத்தை மூடிவைத்தார்.

அதன் பிறகு அவர் ஏற்றிவைத்திருந்த மெழுகுவத்தியைப் பார்த்தார். அதன் ஜுவாலை அறைக்குள் ஆடி அசைந்து கொண்டிருந்தது. ஆனால், அந்த அறைக்குள் சுத்தமாகக் காற்றே இல்லை. இருந்தும் அந்த ஜுவாலை அசைவதைப் பார்த்த போது அவருக்குள் சந்தேகம் உயர்ந்தது.

காற்றே இல்லாத போதிலும் இந்த ஜுவாலை மட்டும் எப்படி அலைகிறது?



'இதில் ஏதோ ரகசியம் உள்ளது.' அவர் யோசனையில் அமிழ்ந்தார்.

புஷ்பராஜ் அந்த அறைக்குள்ளேயே நின்றிருந்தார்.

எங்கிருந்தோ சங்கிலி சலசலக்கும் சத்தம்.

அந்தச் சத்தம் மெதுவாக உயர்ந்து மீண்டும் குறைந்து இல்லாமலாகிச் சுற்றுப்புறத்துடன் கலந்தது.

மீண்டும் அது தொடர்ந்தது.

மூன்றுமுறை இப்படி நிகழ்ந்ததை அவர் கவனித்தார்.

எரிந்து கொண்டிருந்த மெழுகுவத்தியின் ஜுவாலை படிப் படியாகக் குறைந்துகொண்டு வந்தது. சற்று நேரத்தில் அது அணையப் போவதற்கு அடையாளமாகக் கொழுந்து விட்டெரிந்தது.

மறு விநாடி மெழுகுவத்தி அணைந்தது.

அறைக்குள் இருட்டு பரவியது.

இது போன்றதொரு சூழலில், இந்த நேரத்தில் அவர் எங்குமே இதற்கு முன் நின்றதில்லை.

"எதைப்பத்தி யோசிக்கிறீங்க?" சட்டென்று ஒரு குரல் கேட்டது.

அது ஒரு பெண் குரல்!

"யார் நீ?" அவர் திருப்பிக் கேட்டார்.

"யார்னா...நான், நான்தான்!"

"நிஜமாவே என்னை உங்களுக்குப் புரியலையா என்ன?"

"நிஜமா புரியலை!"

"நாம ஏற்கெனவே அறிமுகமாகியிருக்கோம்."

"எப்படி?"

"நல்ல வேடிக்கை... என்னை நீங்க பார்த்திங்களே!"

"பார்க்கலை!"

"உங்களை என்னால இப்பவும் பார்க்க முடியுது."

அவள் வார்த்தைகள் புஷ்பராஜிடம் சந்தேகத்தை எழுப்பின.

இப்படிப்பட்ட பங்களாவில், அதுவும் இந்தச் சூழ்நிலையில், ஒரு பெண் இங்கு தனியாக இருக்கிறாள் என்பதை அவரால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. மட்டுமின்றி, பங்களாவை ஒட்டிய பகுதிகளிலும் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை வேறு வீடுகள் எதுவுமில்லை.

ஏறத்தாழ ஐம்பது ஏக்கர் நிலப்பரப்புக்கு மத்தியில் அந்த பங்களா இருந்தது. எனவே, இந்த இடத்தில் ஒரு பெண்ணின் குரல் கேட்க எந்த வகையிலும் வாய்ப்பே இல்லை!

"ஏன் நீங்க எதுவும் பேசாம இருக்கீங்க?" மீண்டும் அந்தக் குரல் கேட்டது.

"யார் நீ?" அவர் திரும்பவும் கேட்டார்.

"நான்... என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனால், உங்களை எனக்குத் தெரியும்!"

"இருக்கலாம்."

"இந்த பங்களாவைப் பத்தி உங்கஞ்கு ஏதாவது தெரியுமா?"

"தெரியாது!"

"ஏன் தெரிஞ்சுக்கலை?"

"இந்த பங்களா ஒரு காலத்துல ஸால்வின் துரைக்குச் சொந்தமா இருந்ததுன்னு தெரியும். வேற என்ன தெரிஞ்சுக்க வேண்டி இருக்கு?"

"ஸால்வின் துரையின் பங்களாவைப் பற்றி எனக்குத் தெரியும். அவரோட பங்களாங்கிறதாலதான் நான் இங்கே வந்திருக்கேன்."



"எதுக்காக வந்திருக்கே?"

"எனக்கு இந்த இடத்தை விட்டா, வேற இடம் கிடையாதே!"

அவள் வார்த்தைகள் அவர் இதயத்துக்குள் சந்தேகத்தை எழுப்பின. உண்மையில் அவள் பேசுவதன் பொருள் என்ன? எதற்காக இப்படிப் பேசுகிறாள்?

புஷ்பராஜுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. பாக்கெட்டிலிருந்து சிகார் லைட்டை வெளியே எடுத்தார். அந்த அறைக்குள் சன்னமான வெளிச்சம் பரவியது.

அறைக்குள் எவருமில்லை.

'அப்படியானால் அந்தக் குரல் எங்கிருந்து வருகிறது? யார் பேசினார்கள்?

அவர் சிகார்லைட்டின் ஜுவாலையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

எதிர்பாராமல் ஒரு சத்தம் கேட்டதுபோல் இருந்தது.

முன்னர் மெழுகுவத்தி திடுமென்று அணைந்தது. யாரும் அதை ஊதி அணைக்கவில்லை. இருப்பினும் அணைந்தது.

மெழுகுவத்தி இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து, சிகார் லைட்டின் மூலம் அதன் திரியைப் பற்றவைத்தார். ஆரம்பத்தில் உள்வாங்கித் தயங்கிய தீபம் சுடர்விட்டு எரியத் தொடங்கியது.

அறைக்குள் வெளிச்சம் பரவியது.

அதுவரை தன்னுடன் பேசிக் கொண்டிருந்த பெண் மாயமாகிவிட்டிருந்தாள். அந்த இடத்தில் புரிந்து கொள்ள முடியாத என்னென்னவோ, சம்பவங்கள் நடந்து கொண்டிருப்பதாக அவருக்குத் தோன்றியது. .

ஸால்வின் துரையைப் பற்றி ஊருக்குள் பேசிக்கொள்ளும் மூடத்தனமான செய்திகளுக்கு ஏதோ ஓர் அடிப்படை இருப்பதாகப் புரிந்தது. ஸால்வின் துரையின் குறிப்பும், அதில் அவர் குறிப்பிட்டிருந்த விஷயங்களும் ஞாபகத்துக்கு வந்தன.

அப்படியானால் அந்த எலி?

அது ஒரு கேள்விக் குறியாக அவர் முன் தொக்கி நின்றது.

அதன் பார்வையும் செயல்களும் மற்ற எலிகளைப் போல் இல்லை. அதற்கு என்னமோ ஒரு பிரத்தியேகத் தன்மை இருக்கிறது. புஷ்பராஜ் எலி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை நினைவு படுத்திப் பார்த்தார்.

இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

'நீ இந்த பங்களாவுக்குள் நுழைந்ததே எனக்கு பிடிக்க வில்லை!' என்று சொல்லியதா?

மேற்கொண்டும் தான் அங்கு நிற்கவேண்டாம் என்று நினைத்தார். ஆவிகளையோ அங்கு நடைபெற்ற சம்பவங்களையோ நினைத்து அவர் பயப்பட்டது அதற்குக் காரணமல்ல. புகழ்பெற்ற ஒரு துப்பறிவாளரான அவர் இப்படிப்பட்ட பகுத்தறிவுக்கு ஒவ்வாத விஷயங்களை எப்படி ஒப்புக்கொள்வார்?

ஸால்வின் துரையின் குறிப்பும் டைரியும் அவரிடம் இருந்தன. அறைக்குத் திரும்பியதும் அதை ஒரு தடவை முழுவதுமாகப் படிக்கவேண்டும்.

புஷ்பராஜ் வெளியே வந்தார்.

ஆள் நடமாட்டம் அற்ற ஒற்றையடிப் பாதையில் நடக்கத் தொடங்கினார்.

நள்ளிரவு தாண்டி வெகுநேரமாகி விட்டிருந்தது

பாதையின் இருபுறமும் வளர்ந்திருந்த காட்டுச் செடிகளில் ஒட்டிக்கிடந்த பனித்துளிகள் அவர் உடலில் பட்டுக் குளிர் ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

மலை உச்சியில், பனிப்படலத்தினுள் நிலவு வெளிறிப்போய் கிடந்தது. அதன் வெளிச்சம் அந்த மலைச்சரிவில் சாம்பல் தூளைத் தூவியதுப்போல் ஒளிர்ந்தது. குளிர்ந்த வெளிக்காற்றில் மேற்புற மேகங்கள் அசைந்தபோது அந்த மலைச்சரிவே அசைவது போலிருந்தது.



மேற்குப் புறத்திலிருந்து காற்று வீசிக்கொண்டிருந்தது. மரங்களைத் தழுவிக்கொண்டு அது கிழக்குப் புறமிருந்த மலைகளில் போய் மோதியது. பொந்துகளிலும், பாறைகளின் இடுக்குகளிலும் ஒண்டியிருந்த காட்டுமிருகங்கள் குளிருக்குப் பயந்து நகராமலிருந்தது போலிருந்தன.

பாக்கெட்டிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்து உதட்டில் பொருத்தியவர், அதற்கு நெருப்புக் கொடுப்பதற்காக சிகார் லைட்டை எரியவிட்டார். அதன் வெளிச்சம் சுற்றிலும் பரவியது. அதன் மூலம் தான் நடந்துகொண்டிருந்த பாதையின் ஆபத்து புரிந்தது.

சற்றுத் தொலைவு நடந்தவர் பின்திரும்பிப் பார்த்தார்.

சைப்ரஸ் மரங்களின் மறைவில் பங்களா தெளிவற்றுத் தெரிந்தது-அதுவும் இருட்டினால் கட்டியது மாதிரி.

சட்டென்று அதற்குள் ஒரு வெளிச்சம் மின்னி மறைந்தது.

அந்தச் சன்னமான வெளிச்சம் சட்டென்று தோன்றி அதே வேகத்தில் மறைந்தது. அங்கு எப்படி வெளிச்சம் தோன்றி மறைந்தது என்பதே புரியவில்லை.

உடனே அந்த பங்களாவுக்குத் திரும்பிப் போனால் என்ன என்று அவருக்குத் தோன்றாமல் இல்லை. ஒருவேளை அங்கு தனக்கு ஏதாவது ஆபத்து ஏற்படலாம் என்று நினைத்தார். அங்கு போய் எதையும் பார்க்க முடியாமல் போனால் திரும்பவும் இதே வழியிலேயே வர வேண்டியிருக்கும். எனவே, அவர் நேராக கதிர் இருந்த இடத்தை நோக்கி நடந்தார்.

புஷ்பராஜ் வந்து சேர்ந்தபோது கதிர் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார். கதவைத் தட்டியதும் விழித்தார்.

"யாரது?"

"நான்தான்...கதவைத் திறங்க" புஷ்பராஜ் கூறினார்.

"ஏன் இவ்வளவு லேட்? நான் பன்னிரண்டு மணி வரையிலும் புத்தகத்தைப் புரட்டிக்கிட்டே உட்கார்ந்திருந்தேன். அப்புறம்

அப்படியே கண்ணைமூடிப் படுத்திருக்கலாம்னு நெனைச்சேன். தூங்கிப்போயிட்டேன்."

"இவ்வளவு நேரமும் அந்த பங்களாவுக்குள்ளேயே இருந்தேன்" புஷ்பராஜ் பனியில் நனைந்திருந்த ஷர்ட்டைக் கழற்றி கொக்கியில் மாட்டியபடி பதிலளித்தார்.

"அந்த அளவு அங்கே ஏதாவது வேலையா?"

"மிகவும் சுவாரஸ்யமான அனுவங்கள் என்னை அங்கேயே நிற்க வைச்சது. சொன்னால் அதையெல்லாம் நம்பமாட்டாங்க. எனக்கே அதெல்லாம் கனவுதானோண்ணு தோணுது."

"சொல்லுங்களேன், அப்படிப்பட்ட சுவாரஸ்யமான சம்பவங்களை... நானும் கேட்கிறேன்."

"இந்தா இதைப் பாருங்க. இதுல வித்தியாசமான ஆராய்ச்சி விவரங்கள் இருக்கு" புஷ்பராஜ், ஸரல்வின் துரையின் டைரியை சுதிரிடம் கொடுத்தார்.

இற்றுப்போகத் தொடங்கிய அந்தப் பழைய புத்தகத்தை சுதிர் வாங்கிக்கொண்டார்.

மேஜை விளக்கின் வெளிச்சத்தில் அதன் பக்கங்களை நிதானமாகப் புரட்டத் தொடங்கினார்.

"ஸால்வின் துரை அப்படியொண்ணும் முட்டாள் தனமானவராத் தெரியலை!"

"எப்படிச் சொல்றீங்க?"

"இதோ பாருங்க... அவர் எழுதி வெச்சிருக்கிறதை."

"என்ன இருக்கு அதில?"

"நானே வாசிக்கிறேன் கேளுங்க. ஓர் உயிர் இறந்து போனதாகச் சொல்வது, அதன் உடலிலிருந்த கண்ணுக்குத் தெரியாத சக்தி - அதை வேண்டுமானால் உயிர் என்று சொல்லாம் வெளியேறுவதைத்தான். ஆனால், உயிர் அல்லது ஆத்மா என்கிற வேறுபட்ட பொருள் எந்த விதமான பாதிப்பையும் ஏற்பதில்லை. அது காற்றில் அலைந்தபடி மற்றொரு இருப்பிடத்தை



அடைய முயற்சிக்கிறது - உடலைத் தேடுகிறது. அதே சமயம் நமக்கு உள்ளதைப் போன்றே உணர்வு மற்றும் நினைவுகள் அவற்றுக்கும் உண்டு..."

"சுதிர் கொஞ்சம் நிறுத்துங்கள். அங்கே பாருங்க!" புஷ்பராஜ் சட்டென்று வாசலை நோக்கி ஓடினார்.

## 10

"என்னங்க!" சுதிர் அந்தப் புத்தகத்தை மேஜை மீது வைத்து விட்டு புஷ்பராஜைத் தொடர்ந்து ஓடினார்.

கதவைத் திறந்த புஷ்பராஜ் வடக்குப்புறமாக ஓடினார். சற்று நேரத்திலேயே திரும்பி வரவும் செய்தார்.

"என்னங்க நடந்தது?" சுதிர் கேட்டார்.

"நீங்கபாட்டுக்கு படிச்சுட்டே இருந்தீங்க இல்லையா? அப்போ அந்த ஜன்னல் பக்கமா ஒரு கையோட நிழல் நீண்டு வந்தது. அந்த நிழல் கண்ணாடி முழுவதும் பரவிடுச்சு. கொஞ்ச நேரத்துல அது ஒரு பெண்ணோட உருமா மாறிடுச்சு. தலைமுடியெல்லாம் அவிழ்த்துப் போட்ட பெண்ணுருவம். அந்த உருவத்தைத்தான் நான் அந்த பங்களாவிலயும் பார்த்தேன்!"

"அப்புறம்...?" சுதிர் கேட்டார்.

"அவ அந்த பங்களாவில் என்கிட்டப் பேசவும் செஞ்சா!"

"யார் அந்தப் பொண்ணு?"

"அதுதான் ஒண்ணும் புரியலை. அவளுக்கு என்னமோவெல்லாம் தெரிஞ்சிருக்கு. என்னைக்கூடத் தெரியும்னு சொன்னாள். இந்த பங்களாவைத் தவிர நான் வேற எங்கே போறதுன்னும் கேட்டாள். அந்த பங்களாவோட அவளுக்கு ஏதோ தொடர்பிருக்கிற மாதிரிப் பேசினா. அவளுக்குப் பின்னால ஏதோ ரகசியங்கள் இருக்கிறதாத் தோணுது. இல்லேன்னா அவள் இந்த இடத்துக்கு வரவேண்டியது இல்லையே?"

"அந்தப் பெண்...?"

"எனக்கும் புரியாத விஷயம்... அதுதான்!"

"ஒரேயொரு வழிதான் இருக்கு!" சுதீர் சொன்னார்.

"என்ன வழி?"

"இந்தப் பக்கத்துல அதே மாதிரி யாராவது பொண்ணு இருக்காளான்னு விசாரிக்கணும். அதுக்கு நாம யாரை அணுகணும்?"

"அது ஒரு பொருட்டே இல்லை. இந்த மலைச்சரிவில் இருக்கிற யாராவது வயசான பெரியவங்களைத் தேடிக் கண்டுபிடிக்கணும். நாளைக்கே அதுக்கு ஏற்பாடு பண்ணலாம்" புஷ்பராஜ் பதிலளித்தார்.

"சரி படுங்க. ·நேரம் ரொம்ப ஆகிடுச்சு" சுதீர் அந்தப் புத்தகத்தை மேஜை விளக்கின் அருகே தள்ளி வைத்துவிட்டுப் படுத்துக்கொண்டார்.

அன்று நடந்த நிகழ்ச்சிகளை நினைத்தபடி புஷ்பராஜ் படுத்தார்.

விடியற்காலையில் யாரோ கதவைத் தட்டுவதைக் கேட்டு அவர் எழுந்தார். சுதீர் அப்போதும் நல்ல உறக்கத்திலிருந்தார்.

முன்பின் தெரியாத ஒரு மனிதர்!

"என்ன வேணுமுங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

"நான் பக்கத்துலதான் இருக்கிறேன். விவசாயி. நீங்க புதுசா குடி வந்திருக்கிறதாத் தெரிஞ்சது. உங்களுக்கு வேலைக்கு ஆள் ஏதாவது தேவைப்படுமான்னு கேக்க வந்தேன்" வந்தவர் பதிலளித்தார்.

அவருக்கு ஐம்பது வயதுக்கு மேலிருக்கலாம். பழைய பாண்ட்டும், அதே போன்ற கோட்டும் அணிந்திருந்தார். இரண்டுமே கசங்கியிருந்தன. கோட்டு அங்கங்கே கிழிந்திருந்தது. கோட்டின்



பாக்கெட் வேறொரு துணியால் ஒட்டுப்போட்டது போலிருந்தது. வலது கையில் பை ஒன்றைப் பிடித்திருந்தார். அதிலிருந்து இரண்டு மூன்று பாட்டில்கள் மேற்புறமாக தலையை நீட்டிக் கொண்டிருந்தன.

"நீங்க எங்கேருந்து வர்றீங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

"என்கிட்ட ரெண்டு பசுமாடு இருக்கு. காலையில் இந்த ஊர் டீக்கடைக்குப் பால் கொடுக்கிறேன். நீங்க புதுசா குடிவந்திருக்கிற விஷயத்தை அந்தக் கடையிலதான் தெரிஞ்சுக்கிட்டேன்."

"நீங்க வந்ததும் ஒருவகையில் நல்லதுக்குத்தான்" புஷ்பராஜ் சொன்னார்: "நாங்க கொஞ்ச நாள் இங்கே தங்கியிருப்போம். எங்களுக்கும் தினசரி பால் ஊத்தினா நல்லது. உங்களால் முடியலேன்னா, வேற யார்கிட்டயாவது ஏற்பாடு செஞ்சு குடுங்க."

"நானே உங்களுக்குப் பால் ஊத்தறேன். உங்களுக்குக் கூடமாட உதவி பண்றதுக்கு வேணும்னாலும் ஆளை அனுப்பறேன்" வந்தவர் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

"நாம ஒரு வேலைக்காரனை வெச்சுக்கிறது நல்லதுனு தோணுது. வந்தவரே பால் தர்றதோட வேலைக்கு ஆளையும் அனுப்புறதாச் சொல்றார்."

"நானும் அதைப் பத்தித்தான் யோசிச்சுட்டிருக்கேன். நமக்குன்னு தனியா ஒரு சமையல்காரர் இருந்தா நல்லதுதான்" சுதீர் சொன்னார்.

"நாம இங்கே கொஞ்ச நாள் தங்கவேண்டியிருக்கும். இந்தத் தாழ்வரையைப் பத்தி நிறையத் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. போதாக்குறைக்கு இங்கே இருக்கிறவங்களுக்கு மூட நம்பிக்கைகள் அதிகம். இதையெல்லாம் தெரிஞ்சுக்க நமக்கும் கொஞ்சம் அவகாசம் தேவைப்படுது!"

காலையில் சமையல்காரர் வந்து டீ கொடுத்தார்.

மதியம் தாண்டிய பிறகு காலையில் வந்த விவசாயியும், ஓர் இளைஞனும் வந்தனர்.

"இவர்தான் நான் சொன்ன நபர்" பால்காரர் இளைஞனைச் சுட்டிக்காட்டிப் பேசினார்.

இளைஞனுக்கு அதிகபட்சம் இருபது வயதிருக்கலாம். சுறுசுறுப்பு நிறைந்தவனாகத் தெரிந்தான்.

"உங்க பேரு...?" புஷ்பராஜ் கேட்டார்.

"ராகவன்" இளைஞன் பதிலளித்தான்.

"முன்னாடி எங்கேயாவது வேலை செஞ்ச அனுபவம் இருக்கா?"

"செஞ்சிருக்கேன்."

"எங்கே?"

"ஓட்டல்ல. ஆறு மாசம் வேலை செஞ்சிருக்கேன்."

"ஏன் அங்கேருந்து வந்துட்டீங்க?"

"ஓயாத வேலை சார். கொஞ்ச நேரம்கூட ஓய்வா இருக்க முடியாது. ராத்திரி பன்னிரண்டு மணிக்குப் படுத்தா, விடியற் காலையில் அஞ்ச மணிக்கு எழுந்திருக்கணும்."

"இப்ப என்ன பண்றீங்க?"

"மாடு மேய்க்கிறேன்!"

"போதுமான வருமானம் இருக்கா?"

"போதுமானதுன்னு சொல்ல முடியாது. ஓட்டல்ல வேலை செய்யும்போது சம்பளம் முன்னப்பின்ன இருந்தாலும் திருப்தியா சாப்பிட முடிஞ்சது."

"இங்கே வேலை செய்ய உங்களுக்குச் சம்மதம்னா இன்னிலேர்ந்தே வேலை செய்யலாம். இந்த வேலை எவ்வளவு நாள் இருக்கும்னு உறுதி சொல்ல முடியாது. நாங்க இங்கேருந்து கிளம்புற வரைக்கும் வேலை செய்யலாம்."

"அதுக்கென்னங்க...செய்யுறேன்."



"அப்ப நான் கிளம்பட்டா?" பால்காரர் கேட்டார்.

"நாளையிலேர்ந்து பால் ஊத்துங்க!"

பால்காரர் தலையாட்டிவிட்டுக் கிளம்பினார்.

ராகவன் சமையற்கட்டை நோக்கிப் போனான்.

தேவையான பாத்திரங்கள் அங்கு இருந்தன.

"மதியச் சாப்பாடு தயார் பண்ணிடட்டுமுங்களா?" ராகவன் கேட்டான்.

"செய்யுங்க!" சுதீர் சொன்னார்.

ஏறத்தாழ ஒருமணி நேரம் சமையலில் ஈடுபட்டான்.

"கொஞ்சம் அத்தியாவசியமான பொருளுங்க வாங்கணும்" சாப்பாட்டுக்குப் பிறகு ராகவன் சொன்னான்.

புஷ்பராஜ் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து அவனிடம் நீட்டினார்.

"இதோ இந்த சிகரெட்டையும் ரெண்டு பாக்கெட் வாங்கிக்கங்க!"

ராகவன் பையை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

சுதீர், மேஜைமீது வைத்திருந்த ஸால்வின் துரையின் டைரியை எடுத்தார்.

"அதைப் படிச்சு முடிச்சிட்டீங்களா?" புஷ்பராஜ் கேட்டார்.

"முழுசாப் படிச்சுட்டேன்."

"என்ன தோணுது?"

"அந்த மனிதர் சில பிரத்தியேகமான குணங்கள் கொண்டவரா இருந்திருக்கணும். அதுவும் அவரே கண்டுபிடிச்ச சில கொள்கை மற்றும் முடிவுகளோட போராடிக்கிட்டிருந்தவர்."

"டைரியோட சாராம்சம்?" புஷ்பராஜ் கேட்டார்.

"அதாவது உயிருக்கு மரணமில்லைன்னும் அது மறுபடி உயிர்வாழ ஆசைப்படுதுன்னும் இதுல விவரிக்கிறார். ஆனால், என்னால இதை ஒப்புக்கொள்ள முடியலை" கதிர் சொன்னார்.

"அப்படி ஒரேயடியா மறுக்க முடியும்னு எனக்குத் தோணலை." முந்தைய இரவில் தனக்கு நேர்ந்த அனுபவத்தின் அடிப்படையில் புஷ்பராஜ் பேசினார்.

"உங்க கருத்து ஒருவேளை சரியா இருக்கலாம். விஞ்ஞானத்தை மீறின சக்திகளும் இந்த உலகத்துல இருக்கிறதா நாம எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறோமே."

"உண்மைதான். விஞ்ஞானம் இதுவரை தொட்டுப் பார்த்து முடிவு சொல்லாத விஷயங்கள் இதுமாதிரி இன்னும் எத்தனையோ...?"

சூரியன் மேற்குத் திசையில் சாய்ந்துவிட்டது. இன்னும் சற்று நேரத்தில் அது மலைவாயில் விழுந்து விடப்போகிறது. அந்தத் தாழ்வரையைப் பொறுத்தவரை சூரியன் மறைந்தவுடன் இருட்டு வேகமாகப் பரவத் தொடங்கிவிடும்.

அங்கங்கே இருந்த வீடுகளில் எரிந்துகொண்டிருந்த விளக்குகள், இருட்டில் விழுந்த சின்னத் துவாரங்கள் போலத் தெரியும். பத்து மணிக்குப் பிறகு வெளிச்சம் சுத்தமாக மறையவும் செய்யவும். அதன் பிறகு தாழ்வரை மொத்தமும் இருட்டிலாழ்ந்து விடும்.

தொலைவிலிருந்து ராகவன் வருவதை அவர்கள் கவனித்தனர்.

"கொஞ்சம் லேட்டாயிடுச்சு!" ராகவன் அருகில் வந்ததும் சொன்னான்.

"சிகரெட் கிடைச்சதா?"

"அதனாலதான் தாமதமாச்சு!"



"ஏன்?"

"சிகரெட் வாங்கப் போனபோது யாருக்குனு கேட்டாங்க. நீங்க இங்கே தங்கியிருக்கிறதையும், நான் உங்ககிட்ட வேலைக்குச் சேர்ந்திருக்கிறதையும் சொல்லவேண்டி இருந்தது. நீங்க யாருன்னு கடைக்காரர் தோண்டித் துருவி விசாரிச்சார்."

"நீ என்ன சொன்னே?"

"தெரியாதுன்னு சொல்லிட்டேன்."

ராகவன் உள்ளே போனான்.

சுமார் எட்டுமணியானபோது சமையலை முடித்துக் கொண்டு வந்த ராகவன் சொன்னான்:

"சார், கொஞ்சம் சீக்கிரமா சாப்பிட்டுட்டா நல்லது. வெளியிலே குளிர் கொஞ்சம் அதிகம். சாப்பாடு சீக்கிரத்துல ஆறிடும்."

சாப்பாட்டை சீக்கிரமாக முடித்துக் கொண்டனர். வீட்டின் முன்புறம் வந்து அவர்கள் அமர்ந்தபோது யாரோ ஒருவர் அவர்களை நோக்கி நடந்து வந்தார்.

"யார் இந்த நேரத்தில்? மணி ஒன்பதாகப் போகுதே!"

"வர்றவர் கையில வெச்சிருக்கிற லைட்டை எரிய விடாம வர்றாரே!" நிழல் போல் தெரிந்த அந்த உருவத்தைப் பார்த்த கதிர் சொன்னார்.

## 11

அந்த உருவம் நெருங்கி வந்தது.

அவுட்-ஹவுஸை மிகவும் நெருங்கியது.

"யாரது?" புஷ்பராஜ் அந்த உருவத்தின் மீது டார்ச்லைட் வெளிச்சத்தை வீசியபடி கேட்டார்.

"ஒரு வழிப்போக்கன்." அந்த உருவம் நிற்காமல் நெருங்கிய படி பதிலளித்தது.

வராந்தா விளக்கு வெளிச்சத்தில் புஷ்பராஜ் அந்த மனிதரைக் கவனித்தார். அறுபது வயதுக்கு மேலிருக்கும். வெண்மையான ரோமங்கள் அடர்ந்த தாடி. தலையில் சிவப்புத் துணியால் உருமாகட்டி. மார்பில் ஒரு துண்டு போட்டிருந்தார்.

"எங்கேருந்து வர்றீங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

"ரொம்பத் தூரத்திலேர்ந்து வர்றேன். இங்கே வர்றதுக்குள்ளே இவ்வளவு பொழுதாயிடுச்சு. பக்கத்துல இங்கே மட்டும்தான் வெளிச்சம் தெரிஞ்சது. அதனால வந்துட்டேன். ராத்திரி ஒருவேளை நான் இப்படி ஓரமாப் படுத்துக்கலாமா?" வந்தவர் கேட்டார்.

"முதல்ல உட்காருங்க." புஷ்பராஜ் சொன்னார்.

மார்பில் போட்டிருந்த துண்டை எடுத்துப் பக்கத்தில் வைத்து விட்டு அமர்ந்தார்.

"இந்த நேரத்துல எதுக்காக நீங்க இந்தப் பக்கம் வந்தீங்க?"

"அந்த மலைக்கு மறுபுறம் என் வீடு இருக்கு. டவுனுக்குப் போயிட்டுத் திரும்பி வர்ற வழி. காட்டுக்குள்ள போய்த் தேன் எடுத்து பட்டணத்துல விக்குறது என் வேலை."

"உங்க இடத்துல தேன் நிறையக் கிடைக்குதா?"

"மலைக்கு மறுபுறம் இருக்குற பாறைப் பகுதிகள்ல தேன்கூடு நிறைய இருக்கு. கிழக்குப்புறமா நீட்டிட்டிருக்கிற பாறைகள்லதான் கூடுங்க இருக்கு. செங்குத்தான அந்தப் பாறைகள்லேருந்து தேன் எடுக்கிறது கஷ்டம். அம்பெய்து தேன் கூட்டை விழவைப்போம்!"

"வருமானம் பரவாயில்லையா?"

"பரவாயில்லாத வருமானம்தான்!"

"ஏதாவது சாப்பிட்டீங்களா?"



"இல்லை. இங்கே இருக்கிற மக்கடையில் சாப்பிட்டுப் படுத்துக்கலாம்னு வந்தேன். வந்து பார்த்தா கடை மூடியிருக்குது."

வயதான அந்த மனிதருக்கு மலைச்சரிவுப் பகுதியைப் பற்றி ஏதாவது தெரிந்திருக்கும் என்று புஷ்பராஜ் நினைத்தார்.

"நீங்க இந்தப் பகுதியில எத்தனை வருஷமா தங்கி இருக்கீங்க?" அவர் பெரியவரிடம் கேட்டார்.

"எனக்கு நினைவுதெரிஞ்ச நாள்லேர்ந்து இங்கே இருக்கிறேன். என் அப்பாவுக்கும் இதுதான் தொழிலா இருந்தது."

"அப்பமன்னா உங்களுக்கு இந்தத் தாழ்வரையைப் பத்தி ரொம்ப நல்லாத் தெரிஞ்சிருக்கும்."

"ஓரளவு தெரியும்னு சொல்லலாம். உங்களுக்கு என்ன தெரியணுமோ கேளுங்க... தெரிஞ்சதைச் சொல்றேன்."

"இந்தப் பகுதியில் ஸால்வின் துரைன்னு ஒருத்தர் இருந்தாரே... அவரைப் பத்தி ஏதாவது தெரியுமா?"

"குறிப்பா நீங்க அவரைப் பத்திக் கேக்குறதுக்கு ஏதாவது காரணம் உண்டா?"

"காரணம் எதுவும் இல்லை. நாங்க இங்கே வந்ததிலேர்ந்து அந்த பங்களாவுல ஆள் நடமாட்டம் இல்லை... அதனால கேட்டேன்."

"ஆவிங்க குடியிருக்கிற கட்டடமாச்சே அது?"

"அப்படியா சொல்றீங்க?"

"அந்த துரை அங்கே குடியிருந்த காலத்துலகூட அங்கே யாரும் அப்படியெல்லாம் போனதாத் தெரியலை. இன்னும் சொல்லப்போனா அந்த துரை வந்த காலத்துல இந்தப் பகுதியில் ஆளுங்க யாரும் குடியிருக்கலை. கிழக்குப்புற மலையிலிருந்து ஒரு குதிரை வண்டியில அவர் வந்தார். தங்கம் எடுக்கிறது அவரோட நோக்கமா இருந்ததுன்னு சொல்றாங்க. முதல்ல அவர் பங்களா கட்டினார். அப்புறம் சுத்தியிருக்கிற இடங்கள்ல பள்ளம்

தோண்டத் தொடங்கினார். பூமிக்கடியில இருந்து எதை எல்லாமோ எடுத்து குதிரை வண்டியில போட்டு எடுத்துட்டுப் போவாராம். ரொம்ப மோசமான மனுஷன்னு கேள்விப்பட்டிருக்கேன். ஆண் - பெண் வித்தியாசம் இல்லாம நிறையப் பேரைச் சுட்டுக் கொன்னுட்டதாவும் சொல்றாங்க."

"அவர் எப்படி இறந்தார்?"

"ஒருநாள் அவர் பிணம் அந்த பங்களாவுக்குள்ளே கிடக்கிறதை வேலைக்காரங்க முதல்ல பார்த்தாங்களாம்."

"அவரை எங்கே புதைச்சாங்க?"

"ஒருசிலர், பங்களாவை ஒட்டியிருக்கிற தோட்டத்துல அவரை புதைச்சிருக்கிறதாக சொல்றாங்க. அங்கே ஒரு கல்லறை இருக்கு. அதெல்லாம் கிடையாது... அந்த பங்களாவுக்குள்ளேயே புதைச்சுட்டதாவும் சொல்றாங்க. ஆனால், அதுக்குப் பிறகும் அவர் இந்தப் பகுதிகள்ல உலாவுறதை சிலர் பார்த்திருங்காங்க!"

"அது எப்படி சாத்தியம்?"

"அதனாலதான் அதை ஆவிங்க இருக்குற பங்களான்னு சொன்னேன்."

பெரியவர் சொல்வதை புஷ்பராஜும் கதிரும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். இதற்கு முன் கேள்விப்பட்ட செய்திகளை மட்டுமே பெரியவர் இதுவரை சொல்லியிருக்கிறார்.

வெளியே குளிர் அதிகரித்துக் கொண்டிருந்தது. பனி, புகை போல் மலையடிவாரத்தில் படர்ந்து கொண்டிருப்பதை அவர்களால் பார்க்க முடிந்தது.

"சார் நெருப்பு போட்டிருக்கேன். உள்ளே வந்து உட்காருங்க."

"வாங்க... உள்ளே போய் உட்காரலாம்." கதிர், பெரியவரிடம் சொன்னார்.

வட்டமான ஒரு செப்புத் தட்டில் ராகவன் கனல் கட்டைகளைப் பரப்பி வைத்திருந்தான். அந்த அறையே குளிருக்கு இதமாக, கணகணப்பாக இருந்தது.



"இதுதான் இந்த ஊர்ல வழக்கம்." ராகவன் சொன்னான்.

முந்தைய நாள் ராத்திரியிலும் குளிரை விரட்ட இப்படியே செய்திருக்கலாம் என்று கதிர் நினைத்தார்.

பெரியவர் நெருப்புக் கணப்புக்கு அருகே உட்கார்ந்திருந்தார். அவர் தனது சட்டைப் பையிலிருந்து எதையோ எடுத்து வாயில் போட்டு மென்றார்.

"என்னத்தை மெல்லுறீங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

"கஞ்சா! இந்தப் பகுதியில கஞ்சா விவசாயம் ரகசியமாக நடக்குது. நல்லா காஞ்ச இலைக்கு, இயல்பாவே போதைத் தன்மை இருக்கு." மேலும் கொஞ்சம் தூளை வாயில் போட்டபடி சொன்னார்.

சற்றுத் தள்ளி நின்றிருந்த ராகவன் அந்தப் பெரியவரை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"ஸால்வின் துரையைப் பத்திப் பேசறதுன்னா பேசிக்கிட்டே இருக்கலாம். அப்படிப்பட்டவர் அவர்." பெரியவர் சொன்னார்.

"இறந்துபோன பிறகும் துரையைப் பார்த்ததா சொல்றாங்களே? அது எந்த அளவுக்கு உண்மைன்னு நினைக்கிறீங்க?" கதிர் கேட்டார்.

"அதெல்லாம் இங்கே இருக்கிற பெரிசுங்க சொல்ற கதை. ராத்திரி நேரங்கள்ல அந்தப் பங்களாவில் வெளிச்சம் தெரியுதுன்னும், ஆளுங்க நடமாடுற மாதிரி இருக்குன்னும் சொல்றாங்க. யாருக்குத் தெரியும் இதெல்லாம் உண்மையா, பொய்யான்னு!" பெரியவர் தீக்கங்குகளைப் பார்த்தபடி பேசினார்.

"இப்போ அந்தப் பங்களா யாருக்குச் சொந்தம்?"

"யாரோ ஒருத்தர் அதுக்கு வாரிசா இருக்கார். ஆள் யார்னு குறிப்பிட்டுச் சொல்ற அளவுக்குத் தெரியலை. ரெண்டாவது, இந்தப் பகுதியோட எனக்கு அதிகமாத் தொடர்பு கிடையாது. என் தொழிலைப் பத்தித்தான் உங்ககிட்டச் சொன்னேனே!" இப்போது பெரியவர் நீளமும் பருமனும் கூடிய ஒரு பீடியை எடுத்துக் கனலில் பற்ற வைத்துக்கொண்டார்.

கஞ்சாவின் வாசனை அறைக்குள் பரவியது.

மணி பத்துக்கு மேலாகிவிட்டது.

"சரி படுத்துக்கலாமா?" புஷ்பராஜ் கேட்டார்.

பெரியவர் மார்பில் போட்டிருந்த துண்டை தலையின் கீழ் வைத்துவிட்டு, கணப்பின் அருகில் படுத்துக்கொண்டார். புஷ்பராஜும், சுதீரும் உட்புற அறையில் படுத்துக்கொண்டனர். சுதீர், மீண்டும் ஸால்வின் துரையின் டைரியைத் திறந்தார்.

"அந்த டைரியோட உங்களுக்கு ரொம்பவும் ஈடுபாடு ஏற்பட்டதாத் தோணுதே!" புஷ்பராஜ் சொன்னார்.

"அதுக்கு ஒரு காரணம் இருக்கு. இந்த டைரியில் அவர் எழுதி வெச்சிருக்கிறதெல்லாம் நம்ப முடியாத-அறிவுக்குப் பொருந்தாத விஷயமா இருந்தாலும், அவர் சிந்திக்கிற ஒரு மனுஷரா இருந்திருக்கார்."

"அப்படியா சொல்றீங்க?"

"அவர் ஒரு புதுவிதக் கொள்கையை உருவாக்க முயற்சி எடுத்திருக்கிறார். அந்த முயற்சியின் தீவிரம்தான் என்னை இதுல ஆர்வம் காட்ட வைக்குது?"

புஷ்பராஜ் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு ஜன்னல் வழியாக வெளிப்புறத்தை வேடிக்கை பார்த்தார். அங்கிருந்து பார்க்கும்போது ஸால்வின் துரையின் பங்களா தெளிவற்றுத் தெரிந்தது. அந்தப் பகுதியில் உயரமான மரங்கள் நிறைய வளர்ந்திருந்தன. சைப்ரஸ் மரங்கள் விண்வெளியைத் துளைத்துக் கொண்டு வளர்ந்திருந்தன. இருளால் கட்டப்பட்ட ஒரு கூடாரம் போலிருந்தது அந்தப் பகுதி. ஆனால், அதையொட்டிய பிற பகுதிகள் வெறும் மொட்டைக் குன்றுகளாகத் தெரிந்தன. ஆங்காங்கே ஒற்றையாக வளர்ந்திருந்த மரங்கள் பெரும்பாலும் இலைகளை உதிர்த்துவிட்டிருந்தன.

"தீவிரமான யோசனையில் இருக்கீங்க போலிருக்கே?" டைரியிலிருந்து கண்ணை உயர்த்திய சுதீர் கேட்டார்.



"அந்த பங்களாவைப் பத்தித்தான். எதனால மனுஷங்க இப்படியெல்லாம் பேசிக்கிறாங்க? யாரும், வீணா எதையும் சொல்ல மாட்டாங்க. அடிப்படையா அதுக்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கணும். எனக்கு நேர்ந்த அனுபவங்களும் சாதாரணமானதில்லை. குறிப்பா சொல்லணும்னா அங்கிருந்த எலி. நான் அந்தப் பொண்ணுக்கு நேரா துப்பாக்கியை நீட்டினதும் என் கையிலேர்ந்து விழுந்திடுச்சு. துப்பாக்கியைக் கண்டுபிடிச்சு எடுக்கிறதுக்குள்ள பொண்ணு மறைஞ்சுட்டாள். சரியான நேரத்துல எப்படி அந்த எலியால அப்படியெல்லாம் செயல்பட முடியுதுங்கிறது ஆச்சரியமான விஷயம். பயங்கரமான எலிதான். அதே மாதிரி ஸால்வின் துரையோட போட்டோ மேல எலி தெரிஞ்சது. ரெண்டு முழுப் புத்தகங்களையும் கடிச்சு மிச்சம் வைக்காம சாப்பிட்டது... இப்படி ஒவ்வொண்ணையும் யோசிச்சா, ஆச்சரியமா இருக்கு!"

"நீங்க சொல்றதைப் பார்த்தா தனியா ஏதோ ஒரு சக்தி இப்படியெல்லாம் செயல்படுறதா எனக்கும் தோணுது." சுதீர் கூறினார்.

"திரும்ப ஒரு தடவை அந்த இடத்துக்குப் போய்ப் பார்த்தா என்னன்னு தோணுது!"

"நீங்க பேசுறதைப் பார்த்தா கிளம்புறதா தீர்மானிச்சுட்டீங்க போலிருக்கே!"

"உண்மையும் அதுதான்." புஷ்பராஜ் அந்த பங்களா இருந்த திசையைப் பார்த்துப் பேசினார்.

"போகணும்னு நெனைச்சா புறப்படுங்க. தனியாப் போறதுதான் நல்லது. பழைய அனுபவங்களை மறுபடியும் ரசிக்கணும்னா தனியாப் போறதுதான் சரி." சுதீர் சொன்னார்.

"நானும் இதையேதான் நெனைச்சேன்." ஸ்டாண்டிலிருந்து கம்பளிக் கோட்டை எடுத்து அணிந்த புஷ்பராஜ் சொன்னார்.

ரிவால்வரை எடுத்து, உள்ளே குண்டுகள் இருக்கிறதா என்று சரி பார்த்துவிட்டு பாக்கெட்டுக்குள் போட்டுக்கொண்டார்.

டார்ச்லைட்டை எடுத்தார். தவிர்க்க முடியாத தேவை ஏற்பட்டால் மட்டும் டார்ச்லைட்டைப் பயன்படுத்துவது என்று தீர்மானித்தார். லைட்டைப் பயன்படுத்தாமலே பங்களாவை அடைவது நல்லதென்று நினைத்தார்.

பங்களாவுக்குச் செல்லும் பாதையில் நடக்கத் தொடங்கினார். அந்தப் பாதை நேராக பங்களாவுக்குத்தான் சென்றது. பங்களா காம்பௌண்டுக்கு வெளியே நின்றார்.

பங்களா அமைதியாக இருந்தது.

சுற்றுப்புறமும் அப்படியே இருந்தது.

புஷ்பராஜ் பங்களாவைப் பார்த்தவாறு ஒரு சிலை மாதிரி நின்றிருந்தார்.

திடுமென்று பங்களாவுக்குள்ளிருந்து ஓர் அலறல் எழுந்தது.

பயமேற்படுத்தக் கூடிய அலறலாக இருந்தது அது. புஷ்பராஜ் திடுக்கிட்டார்.

## 12

எதிர்பாராத அந்தச் சம்பவம் அவருள் வியப்பை ஏற்படுத்தியது. ஆழ்ந்த அமைதியின் நடுவில் அவர் அந்த அலறலைக் கேட்டார். அதுவரை அமைதியுடனிருந்த அந்தப் பகுதியை அலறல் இரண்டாகப் பிளந்தது போலிருந்தது.

யாரிடமிருந்து அந்த அலறல் எழுந்திருக்கும்?

அது கனமான ஒரு குரலின் அலறல் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அந்த அலறலின் ஒலியலைகள் சைப்ரஸ் மரங்களின் இலைகளைச் சலனப்பட வைத்தன.

எதற்காக அந்த அலறல் எழுந்தது என்பதைத் தெரிந்து கொள்ள புஷ்பராஜ் விரும்பினார். அதே நேரம் அந்த பங்களாவுக்குள் தான் நுழைந்தால் தனக்கு ஏதாவது ஆபத்து



ஏற்படலாம் என்றும் நினைத்தார். இருப்பினும் அவ்வளவு தொலைவு வந்த பிறகு நுழையாமல் பின்வாங்குவதும் சரியல்ல. எனவே, ஒரு தீர்மானத்துக்கு வந்தவராக வராந்தாவை அடைந்தார். வாசல் கதவு வெறுமனே சாத்தப்பட்டிருந்தது. நேற்று இருந்தது போலவே இருந்தது.

புஷ்பராஜ் மெதுவாக ஹாலுக்குள் நுழைந்தார்.

வரவேற்பு ஹாலில் எவரும் இல்லை.

அவர் கையிலிருந்த டார்ச், அந்த ஹாலின் ஒவ்வொரு அங்குலத்திலும் விடாமல் ஒளி பாய்ச்சியது. அங்கு எந்தவிதமான ஜீவராசியும் இருப்பதாகத் தெரியவில்லை. பார்வையை உயர்த்தி ஸால்வின் துரையின் புகைப்படமிருந்த பகுதியைப் பார்த்தார்.

"அந்தப் புகைப்பட...

அவரின் ரத்தக் குழாய்களில் பாய்ந்திருந்த மொத்த ரத்தமும் அப்படியே உறைந்துவிட்டது போலானது.

தான் காண்பது உண்மையா?

ஒருவேளை கனவோ!

புகைப்படம் இருந்த பகுதி சூனியமாக இருந்தது. கையைக் கிள்ளிப் பார்த்துக்கொண்டார். வலித்தது. அப்படியானால் கனவில்லை!

ஸால்வின் துரையின் படம் காணாமற் போயிருந்தது.

முந்தைய நாள் இரவில் அந்தப் புகைப்படம் தன்னை உற்றுப் பார்த்தது புஷ்பராஜுக்கு ஞாபகம் வந்தது. அதன் மேற்புறம் எலியையும் பார்த்தோம்.

அடுத்திருந்த அறைக்குள் நுழையத் தயங்கினார். இவ்வளவு தொலைவு வந்து முழுமையடையாத சந்தேகங்களோடு திரும்புவது சரியில்லை. எனவே, டார்ச் லைட்டை எரியவிடாமல் அந்த அறைக்குள் நுழைந்தார்.

வரவேற்பு ஹாலுக்கு நேர் பின்புற அறை அது.

மச்சின் மீது பதிக்கப்பட்டிருந்த கண்ணாடி வழியாக அறைக்குள் மங்கலான வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் சுவரை ஒட்டிப் போடப்போட்டிருந்த நாற்காலியில் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

நிழல் போன்ற உருவம்!

புஷ்பராஜ் கோட் பாக்கெட்டிலிருந்து டார்ச் லைட்டை வெளியே எடுத்தார்.

சுவிட்ச் பட்டனை அழுத்தினார்.

வட்டமான ஒளி எதிர்ச் சுவரில் பாய்ந்தது.

முன்புமிருந்த நாற்காலியில் ஸால்வின் துரை உட்கார்ந்திருந்தார்!

தன் இரண்டு கைகளையும் நாற்காலியின் இரண்டு கைப்பிடிப் பகுதியில் பதித்திருந்தார்.

அந்தக் கண்கள் புஷ்பராஜை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

"ஹூ ஆர் யூ?" நாற்காலியிலிருந்த உருவம் கேட்டது. கனமான அந்தக் குரல் துரையினுடையதுதான்!

புஷ்பராஜ் பதிலளிக்கவில்லை.

"கேட்டது காதில விழலையா?" துரை மீண்டும் கேட்டார்.

"இந்தப் பகுதியைச் சுத்திப் பார்க்க வந்திருக்கேன்" புஷ்பராஜ் பதற்றமில்லாமல் பதிலளித்தார்.

"நான் அப்படி நினைக்கலை. என்னைப் பத்தி ஆராய்ச்சி பண்ண வந்திருக்கீங்க!"

"என்னத்தை ஆராய்ச்சி பண்றது?"

"உண்மையில் நான் யார்? என் சக்திகள் என்னென்ன? இதையெல்லாம் தெரிஞ்சுக்கிறது உங்க நோக்கம். உங்க முயற்சியில் நீங்க தோல்வியடையப் போறது மட்டுமில்லை; நீங்க



உயிரோட இங்கேருந்து திரும்பிப் போகவும் மாட்டீங்க!" துரையின் குரலில் மிரட்டல் தொனி தெரிந்தது.

புஷ்பராஜ் மௌனமாக இருந்தார்.

டார்ச்லைட்டை அணைத்துவிட்டு துரையின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். மேற்புறத் தளத்தில் பதித்திருந்த கண்ணாடியிலிருந்து வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. அந்த நிழல் உருவம் இருந்த நிலையிலிருந்து அசையவே இல்லை.

"நான் உங்களை மிரட்டுறதுக்காக இதையெல்லாம் சொல்லலை. நல்ல ஒரு இளைஞர் நீங்க... அதனால எச்சரிக்கிறேன்" துரையின் குரல் உயர்ந்து ஒலித்தது.

"அப்படியெல்லாம் நீங்க பெரிய சக்திகள் உள்ளவரா எனக்குத் தோணலை. அப்படி ஏதாவது உங்ககிட்ட இருக்கா என்ன?"

"இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். நான் தெரிஞ்சு வெச்சுட்டிருக்கிறதுல நூத்துல ஒரு பங்கைக் கூட உங்களால் விளங்கிக்க முடியாது. டெலிபதி மூலமா உங்க மனசை என் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துட முடியும். அதன் மூலமா நீங்க என்னவெல்லாம் செய்ய நினைக்கிறீங்கன்னும் துல்லியமா சொல்ல முடியும். நான் வாய்வார்த்தையா பேசுறதை ஒருவேளை உங்களால் நம்பமுடியாமலும் போகலாம். மனுஷங்களை மட்டுமில்லை, எந்த உயிரையும் விருப்பப்படி செயல்பட வைக்க என்னால முடியும். நான் நூற்றாண்டுகளா உயிர் வாழ்ந்துட்டிருக்கேன். மரணம், அது எதனாலங்கிறது உங்களுக்குத் தெரிய வேண்டாத ரகசியம். என் டைரியில இருந்த காகிதத்தை நீங்க வாசிச்சிங்களே, அதிலிருந்து நீங்க ஓரளவுக்குப் புரிஞ்சுக்கிட்டு இருப்பீங்க..." துரை மாறாத குரலில் பேசிக்கொண்டிருந்தார்.

புஷ்பராஜின் துப்பறியும் வாழ்க்கை அனுபவத்தில் இப்படியோர் அனுபவம் இதற்கு முன் ஏற்பட்டதில்லை.

விஞ்ஞான ரீதியான எத்தனையோ சம்பவங்களை அவர் விடுவித்திருக்கிறார். அப்படிப்பட்ட சம்பவங்களில் கவனத்துடனும்,

எச்சரிக்கையுடனும் அணுகியிருக்கிறார். கடலின் ஆழத்தில் பயணம் செய்திருக்கிறார். அதேபோல் மனிதர்கள் எட்டிப் பார்க்காத நிலப் பகுதிகளுக்கும் போய்விட்டு வந்திருக்கிறார். ஆனால், விஞ்ஞானத்துக்கு மாறான இப்படிப்பட்ட சம்பவத்தை இப்போது தான் காண்கிறார். அதுவும் முழுக்க மூட நம்பிக்கைகளின் அடிப்படையில் குறிப்பிடப்படும் விஷயமும்கூட. இங்கு நடப்பதெல்லாம் முற்றிலுமே யாரும் நம்பமுடியாத விஷயங்கள். மட்டுமல்ல, பகுத்தறிவுள்ள இருக்கும் எவரும் கேலி செய்யும் சம்பவங்களும்கூட.

இதோ தனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் இந்த உருவம் சுமார் ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் இறந்து போனது என்பது உலகத்தின் கணக்கு. இப்போதும் அது தன்னுடன் பேசுகிறது. உபதேசம் செய்கிறது. அந்தப் பாதையிலிருந்து விலகாவிட்டால் ஆபத்து ஏற்படுமென்று மிரட்டுகிறது. உதாரணங்களையும் காரிய காரணங்களையும் ஆதாரம் காட்டி விளக்குகிறது.

மற்ற உயிர்களில் ஆதிக்கம் செலுத்துவதாகச் சொல்கிறது. எலியின் செயல்கள் அவருக்கு உடனே நினைவு வந்தது. அதன் நடவடிக்கைகள் யாருமே நம்பமுடியாத படியல்லவா இருந்தது. தனக்கு நேர்ந்த அனுபவங்களின் மூலம் அது புரியவும் செய்கிறது.

"நான் ஒன்று சொல்லட்டுமா? நீங்கள் உடனடியாக இங்கிருந்து கிளம்புவது நல்லது. இல்லாவிட்டால் உண்மையைச் சொல்கிறேன்... நீங்கள் இங்கே வந்திருப்பதேகூட என் திட்டத்தினால்தான். நீங்கள் முதலில் தயங்கினாலும், நான் இங்கிருந்து கொண்டே உங்கள் மனத்துக்குக் கட்டளை போட்டுக் கொண்டிருந்தேன். எப்படியும் உங்களை இங்கு வரவழைப்பது எனது நோக்கம். அதேபோல் நீங்கள் இங்கு வரவும் செய்து இருக்கிறீர்கள். உங்களால், என் கட்டளைகளிலிருந்து விலகவோ, தப்பிக்கவோ முடியாது. நான் நினைத்தால் இப்போதுகூட உங்களை விரட்டியடிக்க முடியும். மட்டுமல்ல உங்கள் மனத்துள் அதிசயிக்கத் தக்க மாற்றங்களையும் ஏற்படுத்த முடியும்.

ஆனால், அப்படி எதையும் நான் செய்யப் போவதில்லை. அந்த அளவுக்கு நான் முட்டாள் இல்லை. உங்களின்



தற்போதைய நிலையில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டால் உடனே அது என்னைக் காட்டிக்கொடுக்கவும் செய்யும். அதனால், உங்களை மீண்டும் எச்சரிக்கிறேன். முடிந்த அளவு விரைவில் நீங்கள் இங்கிருந்து புறப்படுவது நல்லது. இல்லையெனில் ஆபத்துக்கு ஆளாவீர்கள். இது நிச்சயம்!" துரை கூறினார்.

அவருக்கு என்ன பதில் சொல்வதென்று புஷ்பராஜுக்குத் தெரியவில்லை. அதே நேரம் அந்த பயமுறுத்தலுக்குப் பயந்து பணியவும் தயாராக இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படிப் பேசுவது சரியாக இருக்கும் என்று யோசித்தார் அவர்.

"இதுவரை நன் சொன்னதெல்லாம் கேட்டதல்லவா?" துரை கேட்டார்.

"கேட்டேன்..." புஷ்பராஜ் சற்றுநேர மௌனத்துக்குப் பிறகு பதிலளித்தார்.

"அப்படியானால்?"

"எனக்குச் சில சந்தேகங்கள் உள்ளன. அதற்கெல்லாம் சரியான விடையளித்தால் நீங்கள் சொன்னபடி நடக்கத் தயாராக இருக்கிறேன்" புஷ்பராஜ் பதிலளித்தார்.

"என்ன தெரிந்துகொள்ள விரும்புகிறீர்கள்?" துரை அனுதாபம் நிறைந்த குரலில் கேட்டார்.

"இந்தப் பகுதியில் இருக்கும் மனிதர்களின் மூடநம்பிக்கைகள் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

"மூடநம்பிக்கைகளா... இல்லை அவர்களின் நம்பிக்கைகள் சரியானவைதாம்!"

"சரியானதென்றா சொல்கிறீர்கள்?" ,

"இந்த ஊர்க்காரர்கள் ஏதாவது சொல்லியிருந்தால் அதெல்லாம் உண்மைதான்!"

புஷ்பராஜ் மௌனமாக இருந்தார்.

"சொன்னது புரிந்ததில்லையா? அவர்களிடமிருந்து நீங்கள் எதையெல்லாம் தெரிந்து கொண்டிருக்கிறீர்களோ, அதெல்லாம் சரியான உண்மைகள்தான். அதில் எந்தவிதத் தவறும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். அதற்கு மாறான எதையும் அவர்களால் சொல்ல முடியாது!" துரையின் குரல் பழைய நிலைக்குத் திரும்பி இருந்தது.

"நீங்கள் சொன்னதை நான் ஒப்புக்கொள்வதாகவே வைத்துக்கொள்வோம். நான் இங்கு ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவளைத் துப்பாக்கியால் சுட முயன்றபோது சரியாக ஒரு எலி எப்படி என் கைமீது விழுந்து தடுத்தது? அந்த எலிக்கு எங்கிருந்து அவ்வளவு சக்தியும், சமயோசித புத்தியும் கிடைத்தது?"

"நல்ல கேள்விதான். அந்த எலிக்குச் சக்தியை வழங்கியது நான்தான். சந்தேகமிருந்தால் இங்கே பாருங்கள் அந்த எலியை!"

புஷ்பராஜ் டார்ச்லைட்டை எரியவிட்டார்.

பருமனான அந்த எலி மேஜைமீது அசைவற்று, விறைத்துக் கிடந்தது.

அது உயிரற்றுக் கிடப்பதாகவும் தோன்றியது.

## 13

அந்த எலி தன்னை ஏமாற்றிவிட்டது!

"இப்போது அந்த எலிக்கு உயிர் கிடையாது. நீங்கள் விரும்பினால் அதை மறுபடியும் உயிருடன் பார்க்க முடியும். அப்போது முந்தைய சந்தர்ப்பதைவிட அது அதிக வலுவுள்ளதாக இருக்கும். அசாதாரணமான சக்தி பெற்றிருக்கும். சரியாகச் சொல்வதானால் ஒரு காட்டெருமையின் வலு அதற்கு இருக்கும். அதனிடமிருந்து உங்களால் தப்பிக்க முடியாது!" துரை தன் பேச்சை முடித்துக்கொண்டார்.

"எனக்கு மற்றொரு சந்தேகம்?" புஷ்பராஜ் கேட்டார்.



"என்ன?"

"அங்கிருந்த புகைப்பட உருவம் எப்படி சட்டென்று மறைந்தது?"

"எந்தப் புகைப்படம்?"

"வரவேற்பு ஹாலில் இருந்த பெரிய புகைப்படம்?"

"அந்தப் படத்துக்கு என்ன மாற்றம் வந்ததாகச் சொல்கிறீர்கள்?"

"உருவம் மாயமாக மறைந்து விட்டதைக் குறிப்பிடுகிறேன்."

"உங்களுக்கு அப்படித் தோன்றியிருக்கும். இந்த பங்களாவுக்குள் நுழையும் எவருக்கும் இப்படிப்பட்ட அனுபவங்கள் ஏற்படுவதுண்டு. இப்பப் போய் பார்த்துட்டு வாங்க. நான் காத்திருக்கிறேன்." துரை சொன்னார்.

அந்த உருவம் சொல்வது உண்மைதானா என்று தெரிந்து கொள்ள புஷ்பராஜ் விரும்பினார். அங்கிருந்து விரைவாக வெளியேறி ஹாலுக்கு வந்தார். டார்ச் லைட்டை அடித்துப் பார்த்த போது ஆச்சரியப்பட்டார்!

பழையபடி அந்தப் புகைப்படம் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் அப்படியே இருந்தது.

இது எப்படி சாத்தியம்!

புஷ்பராஜ் தனக்குத்தானே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டார். உண்மைதான். துரை குறிப்பிட்டது போல் இதற்குள் ஆச்சரியகரமான சம்பவங்கள் பலதும் நடைபெறுகின்றன. நம்பமுடியாத சம்பவங்களும்கூட.

துரை சொன்னபடியே ஒவ்வொன்றும் நடக்கின்றன.

இந்த ஊர்க்காரர்கள் நம்புவதுபோல் துரை அதிசயமான சக்திகள் நிறைந்த ஒரு பேர்வழிதான். தன் கண்முன்னால் உயிரற்றுக் கிடக்கும் எலியையும் விரும்பினால், உயிருடன் பார்க்கலாம் என்று சொன்னார்.

புஷ்பராஜ் மறுபடியும் துரை உட்கார்ந்திருந்த அறைக்கு வந்தார். ஆனால், அந்த நாற்காலி இப்போது வெறுமையாக இருந்தது. அதற்குப் பதில் எலி உயிர் பெற்றிருந்தது!

ஒரு சில விநாடிகளுக்கு முன்புவரை உயிரற்று அசைவற்றுக் கிடந்த எலி இப்போது உயிரோடிருக்கிறது. புஷ்பராஜ் டார்ச்லைட் வெளிச்சத்தை மேஜை மீது பாய்ச்சினார். எலியும் அங்கிருந்து மாயமாக மறைந்துவிட்டது.

நடப்பதெல்லாம் ஒரு கனவு மாதிரி இருந்தது.

எப்படியிருப்பினும் தனது இன்றைய வரவுக்கு ஒரு அர்த்தமுள்ளது; பயனுமுள்ளது.

மணி பன்னிரண்டு இருபது.

பங்களாவின் வெளியே எந்தவிதமான சத்தமும் கேட்கவில்லை.

மரங்களின் தளிர் இலைகள்கூட அசைவற்று நின்றுகொண்டிருந்தன.

"இங்கே யாருமில்லையா?" புஷ்பராஜ் கேட்டார்.

"... ... ... ... ..."

புஷ்பராஜ் அங்கிருந்து வெளியேறினார்.

வரவேற்பு ஹாலுக்கு வந்தார்.

மேற்கொண்டும் வியப்புக்குரிய சம்பவம் ஏதாவது நடக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்காக டார்ச்லைட்டை அடித்துப் பார்த்தார்.

துரையின் புகைப்படம் அப்போதும் அப்படியே இருந்தது.

பங்களாவிலிருந்து வெளியேற வேண்டியதுதான் என்று நினைத்தவர், வெளிவராந்தாவுக்கு வந்த பிறகு கதவைப் பழையபடி மூடினார்.



முற்றப்பகுதிக்கு வந்தவர் மறுபடியும் ஒருதடவை டார்ச் லைட்டை அடித்து பங்களாவைப் பார்த்தார். எதுவும் தட்டுப் படவில்லை. எல்லாம் பழையபடி இருந்தன.

அன்றைய சம்பவங்களைப் பற்றி நினைத்தபோது கண்டிப்பாக ஒரு விசாரணை நடத்தவேண்டுவது அவசியம் என்று நினைத்தார்.

அவுட் ஹவுஸை நோக்கி நடந்தார்.

சுதீர் உறங்காமல் காத்திருந்தார்.

"இன்னிக்கு ரொம்ப சீக்கிரமா வந்துட்டீங்க போலிருக்கே!" சுதீர் கேட்டார்.

புஷ்பராஜ் அன்றைய அனுபவங்களை விவரித்தார்.

"நீங்கள் சொன்னதெல்லாம் உண்மையா?"

"அவ்வளவும் உண்மை!"

"இதெல்லாம் திட்டமிட்ட ஒரு நாடகம் மாதிரி எனக்குத் தோன்றுகிறது."

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது!"

"மேற்கொண்டு என்ன பண்ணப்போறீங்க?"

"முதல்ல இந்தச் சம்பவங்களுக்குப் பின்னால் இருக்கிற ரகசியங்களைக் கண்டுபிடிக்கணும். அது சாத்தியம்னு தோணுது!"

இருவரும் அவரவர் படுக்கையில் படுத்துக் கொண்டனர்.

காலையில் ராகவன் காபியுடன் எழுப்பியபோது இருவரும் எழுந்தனர்.

"சார், பால்காரர் இன்னிக்கு ஒரு விஷயம் சொன்னார்."

"என்னவாம்?"

"பங்களாவோட சொந்தக்காரர் வர்றாராம்!"

"யார், யார் அது?"

"ஸால்வின் துரைகிட்டேயிருந்து இந்த பங்களாவை விலைக்குவாங்கினவராம். அதாவது உண்மையா வாங்கினவரோட பேரன். அமெரிக்காவுல இருந்து வர்றார்."

"எதுக்காக வர்றாராம்?"

"தெரியலை?"

"நல்லதுதான். அவர்கிட்டப் பேசிப் பார்க்கலாம். ஆமா... எப்போ வர்றார்?"

"இன்னிக்குதான்."

"அவருக்கு எப்படி இந்தத் தகவல் தெரிஞ்சதாம்?"

"அதைப் பத்தி நான் விசாரிக்கலை."

"நல்லதுதான். அப்படி உண்மையாகவே அந்த வாரிசு வந்தால், நிச்சயமா ஏதாவது புதிய சம்பவங்கள் நடக்கும்." புஷ்பராஜ் கூறினார்.

மதியச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு புது வாரிசை எதிர் பார்த்து அவர்கள் காத்திருந்தனர்.

இரண்டு மணியளவில் கூட்டமாக நாலைந்து பேர் நடந்து வருவது தெரிந்தது. அதில் இருவரின் தலையில் என்னென்னவோ சுமைகள் இருந்தன. அவர்களுடன் நாகரிகமான உடையணிந்த இளைஞன் ஒருவனும் இருந்தான். அவர்கள் நடந்து வரும்போது ஆங்காங்கு இருந்த வீட்டினர் வாசலில் நின்று வேடிக்கை பார்த்தனர்.

ஒரு சிலர் பரஸ்பரம் தங்களுக்குள் ரகசியம் போல் எதையோ பரிமாறிக் கொண்டனர்.

வந்தவர்கள் ஸால்வின் துரையின் பங்களாவை நோக்கி நடந்தனர்.

"அந்த இளைஞனிடம் நம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்." புஷ்பராஜ் சொன்னார்.

அந்தக் கூட்டம் துரையின் பங்களா காம்பௌண்டுக்குள் நுழைந்தது.



"அது ஆபத்தான இடம். அவர்களுக்கு ஏதாவது ஆகிடுமோன்னு பயமா இருக்கு." புஷ்பராஜ் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

"நீங்க சொன்னதும் சரிதான்." ராகவன் அதை ஆமோதித்தான்.

மாலை ஐந்து மணியளவில் புஷ்பராஜ் அந்த பங்களாவை நோக்கி நடந்தார். அவர் அங்கு வந்து சேர்ந்தபோது வரவேற்பு ஹாலில் டேப்ரிக்கார்டர் ஒன்று பாடிக்கொண்டிருந்தது. வராந்தாவை அடைந்த புஷ்பராஜ் உட்புறமாக எட்டிப் பார்த்தார்.

ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்த இளைஞன் தலையை உயர்த்திப் பார்த்தான்.

"வாங்க?" புஷ்பராஜை வரவேற்றான்.

புஷ்பராஜ் ஹாலுக்குள் நுழைந்தார்.

ஸால்வின் துரையின் புகைப்படம் அதே இடத்தில் இருந்தது. அதில் எந்தவிதமான மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

"முதல்ல உட்காருங்க... மன்னிக்கணும். உங்களை எனக்குத் தெரியலையே?" இளைஞன் கூறினான்.

புஷ்பராஜ் அமர்ந்தார்.

இளைஞனுக்கு இருபத்தைந்து வயதுக்கு மேல் இருக்கமுடியாது. உற்சாகமும், சுறுசுறுப்பும் நிறைந்தவனாகத் தெரிந்தான். களையான முகம். கையில் ஆங்கில நாவல் ஒன்று வைத்திருந்தான். புஷ்பராஜ் அமர்ந்தவுடன் கையிலிருந்த நாவலை மூடி அருகிலிருந்த டீப்பாயின் மீது போட்டான்.

புஷ்பராஜ் பேசத் தொடங்கினார்:

"நானும் என் நண்பர் ஒருத்தரும் இந்த இடத்தைப் பார்வையிட வந்தோம். இந்த பங்களாவைத் தூர இருந்து பார்த்ததைத் தவிர உள்ளே வந்து பார்க்க இதுவரையிலும் வாய்ப்பு ஏற்படலை. உங்களைச் சந்திக்க நேர்ந்ததுக்கு ரொம்ப சந்தோஷப் படுறேன். ஆமா, நீங்க நிரந்தரமா இங்கே தங்கப்போறீங்களா?"

"இல்லை... பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னால நான் இங்கிருந்து அமெரிக்கா போனேன். இது எங்க தாத்தா வாங்கின இடம். இதோ இந்த போட்டோவில் இருக்கிறவர்தான் இந்த வீட்டோட பழைய உரிமையாளர். அவர் பேரு மிஸ்டர் ஸால்வின்." இளைஞன் தனக்குத் தெரிந்த வரலாற்றை விளக்கினான்.

"உங்க தாத்தா இந்தப் பங்களாவில் தங்கியிருந்தாரா?"

"தாத்தா இங்கே கொஞ்ச நாள்தான் தங்கியிருந்தார். ஆனா, அப்பா கடைசிவரைக்கும் இங்கே இருந்தார். பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னால் அப்பா இறந்ததும் நான் இங்கேருந்து அமெரிக்காவுக்குப் போயிட்டேன்."

"அப்பா இயற்கையா மரணமடைஞ்சார் இல்லையா?"

"இல்லை, விபத்துல இறந்தார்! எதிர்பாராம நடந்த மரணமும்கூட. இப்பவும் நல்லா ஞாபகமிருக்கு. அன்னிக்கு ஒரு வெள்ளிக்கிழமை. அப்பா வேட்டைக்குக் கிளம்பினார். அவர் ஒரு நல்ல வேட்டைக்காரரும்கூட!"

"அப்பா பேரு?"

"வில்ஃபிரட். என் பேரு தாம்சன் வில்ஃபிரட். நான் தான் இப்போ அப்பாவோட மொத்தச் சொத்துக்கும் ஒரே வாரிசு. வேட்டைக்குப் புறப்படுறதுக்கு முன்னால துப்பாக்கியைப் பிரிச்சு துடைச்சு வெச்சுட்டு வெளியே வந்தார். லீவுல ஊருக்குப் போயிருந்த வேலைக்காரரும் அப்போதான் திரும்பி வந்தார். காட்ரிஜ் எடுக்கிறதுக்காக அப்பா உள்ளே போனார். நான் வராந்தாவுல நின்னுட்டிருந்தேன். அப்பா படியிறங்கி வந்தார். அப்ப நல்லா இருட்டத் தொடங்கியிருந்தது. கொஞ்ச நேரத்தில துப்பாக்கியோட அப்பா புறப்பட்டுப் போனார். எப்ப வேட்டைக்குப் போனாலும் ராத்திரி பன்னிரண்டு மணிக்குள்ள வந்துடுவார். ஆனால், அன்னிக்கு அப்படி வரலை. நான் அடிக்கடி திடுக்கிட்டு விழிச்சு எழுந்திரிச்சுப் பார்த்துக்கிட்டே இருந்தேன். அப்பா வரவே இல்லை.



வேலைக்காரனைத் தட்டி எழுப்பி, அப்பாவைத் தேடச் சொன்னேன். அப்போ இந்தப் பகுதியில நிறையக் காட்டு மிருகங்கள் இருந்ததால அவன் வீட்டைவிட்டு வெளியே போறதுக்கே பயந்தான். விடியிற வரைக்கும் நான் தூங்கவே இல்லை. காலையில் சுமார் எட்டுமணி இருக்கும். ஒருத்தர் ஓடி வந்தார். அவர் ரொம்பவும் திகைப்பு அடைஞ்சிருந்தார். நான் என்ன ஏதுன்னு விசாரித்தேன். அவர் வேலைக்காரன் காதோட ஏதோ ரகசியம் பேசினார். அப்புறம் ரெண்டு பேருமா புறப்பட்டுப் போனாங்க. நான் ஒண்ணும் புரியாம அவங்களைப் பின் தொடர்ந்தேன். அதோ தெரியுது பாருங்க... அந்த மலைப் பகுதிக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே நான் பார்த்த காட்சி!..."

அவன் பழைய நிகழ்ச்சியை நினைவுகூர்பவனைப் போல் சற்று நேரம் அசைவற்று உட்கார்ந்தான்.

## 14

"அங்கே... அப்படி என்ன காட்சியைப் பார்த்தீங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

"அது பயங்கரமான ஒரு காட்சி. இப்பவும் அது என்னை நடுங்க வைக்குது. அப்பா ஒரு பாறையில மட்டமல்லாக்க விழுந்து கிடந்தார். அவர் பல்லெல்லாம் வெளிப்புறம் தெரிஞ்சது. கிட்டிப்போயிருந்தது. கை ரெண்டும் ரெண்டு பக்கமும் தளர்ந்து போய் விழுந்து கிடந்தது. அவருக்குப் பக்கத்தில அவரோட துப்பாக்கி கிடந்தது. அவர் போட்டிருந்த கோட், மார்புப் பகுதியில் கிழிந்திருந்தது. நான் கோட்டையும், சட்டையையும் விலக்கிப் பார்த்தேன். மார்பில் ஏதோ பதிஞ்சது மாதிரி அடையாளம். கூர்மையான நகங்கள் பதிஞ்ச அடையாளம்கிறது தெளிவாத் தெரிஞ்சது. ஆனால், நகங்களுக்கு இடையிலிருந்த இடைவெளி அசாதாரணமாயிருந்தது.

ஏதோ ஒரு காட்டுவிலங்கு அவரை அடிச்சுக் கொன்னதாத் தோணுது. அவர் உடம்பை இந்த காம்பௌண்டுக்குள்ளே அடக்கம்

பண்ணியிருக்கோம். அப்பாவோட மரணத்துக்குப் பிறகு நான் இங்கே இருக்க விரும்பலை. என் மாமா அமெரிக்காவுல இருந்ததால அங்கேயே போய்ப் படிப்பைத் தொடர்ந்தேன்."

"இப்போ என்ன செய்யுறீங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

"இன்ஜினீயரிங் முடிச்சுட்டேன். அதுக்கு நடுவில இன்னொரு விபத்து. என் மாமா விமான விபத்துல இறந்து போயிட்டார். அதுக்குப் பிறகு அமெரிக்காவுல தனியா இருக்க எனக்குப் பிடிக்கலை."

"வேறு குறிப்பிடத்தக்க சம்பவங்கள் ஏதாவது நடந்திருக்கா?"

"நீங்க கேட்கிறது புரியலை!"

"வேறு யாராவது இதே மாதிரி இறந்திருக்காங்களா?"

"இறந்திருக்காங்க. அதைப் பத்தித்தான் சொல்ல வந்தேன். எங்க அப்பாவோட தம்பி - அதாவது என் சித்தப்பா இங்கே இருந்தார். அவரும் விபத்திலதான் இறந்தார்."

"அவரோட மரணமும் உங்க அப்பாவுக்கு ஏற்பட்டது போலவே இருந்ததா?"

"ஆச்சரியப்படும்படியா அப்படித்தான் இருந்தது. அப்பா இறந்து ரெண்டு வருஷத்துக்குப் பிறகு சித்தப்பா இறந்தார். அப்ப நான் இங்கே இல்லாததால நேரடியா பார்க்க முடியலை."

"நீங்க அப்போ இந்தியாவுக்கு வரலையா?"

"வரலை. தகவல் சொன்னாங்க. அப்ப எனக்குப் பன்னிரண்டு வயசு. எங்க சித்தப்பா இங்கே வந்தது இதையெல்லாம் கவனிச்சுக்கத்தான்."

"இந்த பங்களாவைத் தவிர வேற ஏதாவது சொத்து உங்களுக்கு இங்கே இருக்கா?"

"ரெண்டாயிரம் ஏக்கர் நிலமிருக்கு. இந்தப் பக்கத்து மண்ணில தங்கம் இருக்கிறதாச் சொல்றாங்க. தாத்தாவோட



காலத்துல இங்கேருந்து தங்கம் எடுத்ததாகவும் சொல்லிக்கிறாங்க. ஸால்வின் துரையின் மரணத்துக்குப் பிறகுதான் தாத்தா இதை விலைக்கு வாங்கினார். இப்பக்கூட ஏதாவது ஒரு இடத்துல மண்ணைத் தோண்டிப் பார்த்தா தங்கம் கலந்திருக்கிறது தெரியும். நான் அதை ஒரு தடவை டெஸ்ட் பண்ணிப் பார்க்க விரும்புறேன். அதில எந்த அளவுக்கு உண்மை இருக்குனு எனக்குத் தெரியலை. எதுக்கும் ஒருதடவை முயற்சி பண்றதுல தப்பில்லையே!"

"மிஸ்டர் தாம்சன், நம்ம பேச்சு திசைமாறிப் போயிடுச்சு. உங்க சித்தப்பா எப்ப இறந்தார்னு நீங்க சொல்லலையே?" புஷ்பராஜ் குறுக்கிட்டார்.

"உண்மையில எனக்கு அதைப் பத்தி எதுவும் தெரியாததால தான் பேச முடியலை. வேறொருத்தரை உங்களுக்கு அறிமுகப் படுத்துறேன்" என்ற தாம்சன் தன் வேலைக்காரனை அழைத்தான்.

நடுவயது மனிதர் ஒருவர் அங்கு வந்தார்.

"ரங்கையா, எங்க ஹென்றி சித்தப்பா எப்படி இறந்தார்னு உங்களுக்குத் தெரியுமில்லையா?"

"தெரியும்!"

"நானும் அதைப் பத்தி விவரமாத் தெரிஞ்சுக்கணும்னு விரும்பினேன். இப்பத்தான் அதுக்கான சந்தர்ப்பம் வாய்ச்சிருக்கு. ரெண்டு பேரும் கேட்கிறோம்... சொல்லுங்க?"

ரங்கையா சற்று நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்தார். அல்லது நினைவுகளைப் பிடித்து இழுத்துவர முயன்றார்.

"ஒருநாள் ஹென்றி எஜமான் வேட்டைக்குப் போனார். அவரும் வேட்டைப் பிரியர்தான். அந்தப் பக்கத்தில இருக்குற பாறை மேல அந்த விபத்து நடந்தது. ராத்திரி மணி பன்னிரண்டு இருக்கும். நானும் அவர்கூடப் போயிருந்தேன். காட்டெருமை ஒண்ணு தட்டுப்பட்டதும் என்னை இருக்கிற இடத்துலேயே இருக்கச் சொல்லிட்டு அவர் மட்டும் இரட்டைக்குழல் துப்பாக்கியோட காட்டெருமையை நெருங்கினார். இருட்டு நேரமா இருந்ததால எனக்கு அங்கே நடந்தது எதுவும் தெளிவாத்

தெரியலை. சுமார் அரைமணி நேரத்துக்குப் பிறகு ஒரு அலறல் சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டுப் போனேன். அது மிருகத்தோட குரல் இல்லை. ஒரு மனுஷனோட குரல்தான்னு உறுதியாத் தெரிஞ்சது. என் கையில் வெச்சிருந்த டார்ச்லைட் உதவியோட சத்தம் வந்த திசைக்குத் தட்டுத்தடுமாறிப் போய்ச் சேர்ந்தேன்.

டார்ச்லைட் வெளிச்சத்தில் யாரோ தரையில் விழுந்து கிடக்கிறது தெரிந்தது. குப்புற விழுந்து கிடந்ததால ஒண்ணும் புரியலை. சந்தேகத்தை விலக்கிக்கிறதுக்காக உடம்பைப் புரட்டிப் போட்டேன். அது, ஹென்றி எஜமான்தான். அவரோட நெஞ்சுப் பகுதியில் இருந்த துணி கிழிபட்டிருந்தது. அவசர அவசரமா அவரைப் பரிசோதிச்சேன். நகத்தால் அவர் மார்பில் கீறினது மாதிரி இருந்தது. ஒரு புலியோ, சிறுத்தையோ அவரைத் தாக்கியிருக்கும்னு நெனைச்சேன். அது தாக்கினபோதுதான் அவர் அலறியிருக்கணும்னு தோணுச்சு. பயந்து நடுங்கி, பயத்துல அவர் செத்துப் போயிருக்கணும்னு தோணுச்சு. நான் ஓடிவந்து ஆளுங்களைக் கூட்டிட்டு போனேன். விவசாயம் பார்க்குறவங்க விழிச்சு எழுந்து ஓடி வந்தாங்க. அவர் இறந்து போயிட்டார்னு உறுதியாத் தெரிஞ்ச பிறகு உடம்பை பங்களாவுக்குக் கொண்டு வந்தோம்.

ரெண்டு பேரும் ஒரே மாதிரி இறந்து போனது அதிசயமாகவும் தெரிஞ்சது. என்ன செய்யுறது? இந்தப் பக்கத்துல காட்டு மிருகங்கள் அதிகம். யாரைத் தப்பு சொல்ல முடியும்?"

"அவரைத் தாக்கினது காட்டு மிருகம்தான்னு உறுதியாத் தெரியுமா உங்களுக்கு?" புஷ்பராஜ் கேட்டார்.

"காட்டு மிருகம் ஏதோ ஒண்ணுதான் அவரைத் தாக்கியிருக்குன்னு என்னால உறுதியாச் சொல்ல முடியும். எனக்குத் தெரிஞ்சு அந்தப் பகுதியில் புலிகளோட நடமாட்டம் இருக்கு. மேயப் போன ஒண்ணு ரெண்டு பசுக்களைக்கூட அந்தப் புலி தாக்கியிருக்கு. புலியடிச்ச மாட்டோட உடம்பை நான் என் கண்ணால பார்த்திருக்கேன். ஒருவேளை அதுகூட எஜமானைத் தாக்கியிருக்கலாம்." ரங்கையா கூறினார்.



"சரி, அதெல்லாம் இருக்கட்டும் ரங்கையா... எங்களுக்கு கொஞ்சம் டீ தர்றீங்களா?" தாம்சன் கேட்டான்.

"போட்டுக் கொண்டுவர்றேன்!" ரங்கையா வீட்டுக்குள் போனார்.

ரங்கையாவின் பேச்சிலிருந்து அங்கு நடந்த விபத்துகளுக்கு ஒரு புலிதான் காரணம் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால், ஸால்வின் துரையின் கதையைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியவில்லை. ஸால்வின் துரையை, தான் பார்த்ததைச் சொன்னால் தாம்சன் கவலைக்குள்ளவார். எனவே, அந்த விஷயத்தை தாம்சனிடமிருந்து மறைப்பதென்று புஷ்பராஜ் தீர்மானித்தார். அதே நேரம், இதுவரை நடந்துள்ள சம்பவங்களின் தொடர்ச்சியாக, தாம்சனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிடுமோ என்ற பயமும் தோன்றியது.

மரணம் நிகழ எத்தனையோ காரணங்கள் உண்டு. விபத்துகளின் மூலமும் நடக்கலாம். இதயத்துக்குச் செல்லும் ரத்தம் சட்டென்று தடைப்பட்டாலும் மரணம் சம்பவிக்கலாம். ரத்தம் சட்டென்று தடைபடுவதற்கும் எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். ஒன்று, இதயம் செயலிழப்பது. இரண்டு, அளவுக்கு மீறிய பீதியும் காரணம். பீதியால் மரணமடைந்த செய்தியை புஷ்பராஜ் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறார். ஒருவேளை இங்கும் அதுவே ஒரு காரணமாக இருந்திருக்கலாமோ?

அப்படியென்றால் வில்ஃபிரட்டும் அவர் தம்பியும் ஒரே மாதிரி எப்படி மரணமடைந்திருக்க முடியும்? ரங்கையாவின் வாக்குமூலப்படி ஒரு புலி அவர்களைத் தாக்கியிருக்க வேண்டும். குறிப்பிட்ட இந்த இருவரை மட்டும் ஏன் அந்தப் புலி தாக்க வேண்டும்?

ரங்கையா டீ மற்றும் பிஸ்கெட்டுடன் வந்தார்.

"ரங்கையா கொஞ்சம் இருங்க!" புஷ்பராஜ் டீ கப்பை எடுக்கும்போது சொன்னார்.

ரங்கையா அங்கேயே நின்றார்.

"புலி மற்ற மிருகங்களைத் தாக்கினதாச் சொல்றீங்களே, அதெல்லாம் நாம வீட்டுல வளர்க்கிற மிருகங்களை மட்டும் தானே?"

"ஆமாம், மேயப் போன பசுக்களைத்தான் தாக்கியிருக்கு."

"அதுவரைக்கும் அந்தப் புலி மனுஷங்களைத் தாக்கினதாச் செய்தி இல்லை. அப்படித்தானே?"

"ஆனால், எஜமானங்க ரெண்டு பேரைத் தாக்கினது அந்தப் புலிதானே?"

"சரி... உங்க பேச்சுப்படியே வர்றேன். அவங்களுக்குப் பிறகு வேற யாரையாவது புலி அடிச்சிருக்கா?"

"இல்லையே!" சற்று நேர யோசனைக்குப் பிறகு ரங்கையா கூறினார்.

"இப்ப நான் கேட்டதோட அர்த்தம் புரிஞ்சதா உங்களுக்கு?"

"புரியலையே?"

"நேரடியாக் கேட்கிறேன். உங்க எஜமானர்கள் ரெண்டு பேரைத் தவிர வேற யாரையும் அந்தப் புலி அடிச்சு இறந்து போகலை!"

"நீங்க சொன்ன புலிக்கு உங்க எஜமானர்கள் மேலமட்டும் அப்படி என்ன கோபம் இருந்திருக்க முடியும்?" புஷ்பராஜின் கேள்வி ரங்கையாவைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

## 15

"அதுக்கு என்ன காரணம்னு எனக்கு எப்படித் தெரியும்?" ரங்கையா கையை மலர்த்திக் காட்டிக் கேட்டார்.

"சரி, நீங்க போகலாம்." புஷ்பராஜ் சொன்னார்.

இருவர் சாப்பிட்ட ம கப்புகளையும் எடுத்துக்கொண்டு ரங்கையா மீண்டும் வீட்டுக்குள் போனார்.



"இந்த ரங்கையா எந்த ஊர்க்காரர்?"

"இவர் ரொம்ப நாளா எங்ககிட்ட வேலை செய்யுறார். அப்பா இங்கே வந்த போதிலிருந்து இவர் இருக்கிறார். அப்பா சின்ன வயசுல இங்கிலாந்துல இருந்தார். தாத்தா தள்ளாமையில் கஷ்டப் பட்டபோது அப்பா இங்கே வந்துட்டார்."

"தாத்தா எங்கே இறந்தார்?"

"இங்கிலாந்தில கடைசிக் காலத்துல் அவர் வாத நோயால கஷ்டப்பட்டார். அதுக்கு சிகிச்சைச் செய்யத்தான் இங்கிலாந்து போனாங்க. அப்படிப் போன தாத்தா, பிற்பாடு திரும்பி வரலை. பாட்டி அங்கேயே இருந்தாங்க."

"தாம்சன், உங்க அப்பா இங்கே தங்குறதுல ரொம்பவும் ஆர்வமா இருந்தாரா?"

"ஆமாம்."

"உங்க அம்மா எங்கே இருந்தாங்க?"

"என் அஞ்சாவது வயசில அவங்க இறந்துட்டாங்க."

"அம்மா எப்படி இறந்தாங்க?"

தாம்சன் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

"நீங்க மரணத்தைப் பத்தியே கேட்குறீங்களே... அதுக்கு என்ன காரணம்?"

"உண்மை அதில்லை. உங்க குடும்பத்துல இருக்கிற யாரைப் பத்திக் கேட்டாலும் அது எதிர்பாராத மரணத்துல முடிஞ்சிருக்குது. அதனால ஒவ்வொருத்தரோட மரணத்தைப் பத்தியும் விசாரிச்சேன். நான் இப்படிப்பட்ட பேச்சாப் பேசறதால உங்களுக்கு வருத்தம் ஏற்பட்டிருந்தா மன்னிச்சிடுங்க." புஷ்பராஜ் சிகரெட் பாக்கெட்டை எடுத்து அதிலிருந்து ஒரு சிகரெட்டை உருவி உதட்டில் பொருத்திக் கொண்டு லைட்டரால் பற்ற வைத்தார்.

"என்கிட்டக் கேட்டிருந்தா ஃபாரின் சிகரெட் தந்திருப்பேனே. டன்ஹில் சிகரெட் நிறையக் கொண்டு வந்திருக்கேன். நான்

செயின்ஸ்மோக்கர் கிடையாது. எப்போதாவதுதான் பிடிப்பேன். உங்களைப் பார்த்தா நிறைய சிகரெட் பிடிக்கிறவராத் தோணுது. உண்மைதானா?" தாம்சன் கேட்டான்.

"நானும் செயின்ஸ்மோக்கர் கிடையாது. ஆனால், அதிகமா சிகரெட் பிடிப்பேன். நான் அதிகமாக வாசிக்கிறது அதுக்குக் காரணமா இருக்கலாம்."

"என்ன மாதிரியான புத்தகங்கள் உங்களுக்குப் பிடிக்கும்?"

"பெரும்பாலும் துப்பறியும் நாவல்கள்தான்."

"தற்போதைய துப்பறியும் நாவல்கள் போலியானதா, பெரும்பாலும் தழுவலா, நம்ம சூழ்நிலைக்குப் பொருந்தாததாத இருக்கு. பெரும்பாலும் வியாபார நோக்கத்துக்காக எழுதப்படுது. திறமை இல்லாதவங்ககூட அதிகமாப் பணம் சம்பாதிக்கலாம்கிறதுக்காக குப்பைகளா நிறைய எழுதித் தள்ளுறாங்க. துப்பாக்கி முனைக்குப் பயந்துட்டு நாவல் எழுதற மாதிரியும் தோணுது. சமூக நாவல் எழுதறவங்ககூட தங்களோட பாதையை மாத்தித் துப்பறியும் நாவல் எழுத வந்துட்டாங்க. காதல் கலந்த, துப்பறியும் நாவலின் போர்வையணிந்த வெறும் கூடுகள்." தாம்சனின் பேச்சு, அவன் ஒரு தேர்ந்த வாசகன் என்பதை அடையாளம் காட்டியது.

"சரி, அதெல்லாம் கிடக்கட்டும். நான் கொஞ்சநேரத்துக்கு முன்னால சொன்னது உங்களுக்கு வருத்தமா இருக்கா?"

"இந்தச் சூழ்நிலையில் எங்க குடும்பத்தைப் பற்றித் தெரிஞ்சுக்க நீங்க காட்டுற ஆர்வம் உண்மையிலேயே எனக்கு ரொம்ப் ஆறுதலா இருக்கு. உண்மையைச் சொன்னா எனக்கு இப்போ யாருமே இல்லை. உங்களைப் பார்த்த பிறகு, உங்க பேச்சைக் கேட்ட பிறகு, எனக்கு ஒரு சகோதரன் கிடைச்ச உணர்வு ஏற்படுது. எல்லாத்துக்கும் மேல உங்க கேள்விகள் எனக்கே, இதையெல்லாம் தெரிஞ்சுக்க உற்சாகத்தைக் கொடுக்குது." தாம்சன் எழுந்து உள்ளே போனான்.



சற்று நேரத்துக்குள் இரண்டு பாக்கெட் டன்ஹில் சிகரெட்டுடன் வந்தான். அதை புஷ்பராஜின் முன்பாக வைத்தான்.

"இது உங்க பிராண்ட் இல்லேன்னு தெரியும். இருந்தாலும் என் திருப்திக்காக இதை நீங்க எடுத்துக்கணும்?" தாம்சன் வற்புறுத்தினான்.

"அம்மாவும் இறந்ததாச் சொன்னீங்க?"

"ஆமாம்..."

"அவங்க எப்படி இறந்தாங்கன்னு..."

"சொல்றேன். எல்லாமே துரதிர்ஷ்டம் பிடித்த மரணங்கள். எங்க குடும்பத்தைத் துரதிர்ஷ்டம் பிடிச்சு ரொம்ப வருஷங்கள் ஆகுது. அதன் கடுமையான பிடியிலிருந்து இன்னிவரைக்கும் தப்பிச்சிருக்கிறது நான் மட்டும்தான். அதையும் சொல்றதுக்கு இல்லை. எனக்கும் எதுவும் நடக்காதுன்னு யாரால சொல்ல முடியும்?" தாம்சன் துயரம் நிறைந்த பழைய நினைவுகளில் மூழ்கியதாகத் தெரிந்தது.

மேற்கொண்டும் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டு தாம்சனை வருத்தப்பட வைக்கக்கூடாது என்று நினைத்தார் புஷ்பராஜ். அதன் பிறகு அவர் எதையுமே கேட்க முற்படவில்லை. இருப்பினும் தாம்சனின் அம்மா எப்படி இறந்தார் என்பதைத் தெரிந்துகொண்டால் முடிந்தால் நல்லது என்று நினைத்தார்.

அவர் சிகரெட் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டியபடி மௌனமாக தாம்சனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"எப்படி இருந்தாலும் நீங்க கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லியாகணும். அது என் கடமையும்கூட. அம்மா இறந்ததைப் பத்தியும் சொல்லிடுறேன்." தாம்சனின் நெற்றியில் சுளிவுகள் தோன்றின.

பாக்கெட்டிலிருந்து வெள்ளியாலான சிகரெட் கேஸை வெளியே எடுத்த தாம்சன் அதிலிருந்து ஒரு டன்ஹிலை எடுத்துப்

பற்ற வைத்துவிட்டு ஒரு தடவை ஆழ்ந்து புகையை இழுத்து வெளியேவிட்டான்.

"மம்மியோட மரணம், எங்க குடும்பத்துல நடந்த பிற மரணங்களைவிட ரொம்பவும் வித்தியாசமானது. அவங்க பங்களாவுக்குள்ளே இறந்தாங்க. அதுவும் பகல் நேரத்துல. நான் இந்த ஊர்ல இல்லை அப்போன்னு உங்ககிட்டச் சொல்லி இருக்கேன். மம்மியோட தூரத்து உறவான அண்ணன் ஒருத்தர், அவங்களுக்குத் துணையாக இங்கே இருந்தார். அவர் இப்போ பிரான்ஸில் இருக்கார். ரொம்ப வருஷமா அவரைப் பத்தி எந்த விதமான தகவலும் இல்லை. நான் ரெண்டு தடவை கடிதம் போட்டேன். ஆனால், பதில் கிடைக்கலை. அவருக்கும் ஏதாவது ஆபத்து நேர்ந்துடுச்சோ, என்னவோ? வேற என்ன சொல்றது? அதெல்லாம் கிடக்கட்டும். மம்மியோட மரணத்தைச் சொல்றேன். அதுவும் எதிர்பாராத ஒரு சம்பவம். மம்மி குளியல் அறையில் இறந்து கிடந்ததா சொன்னாங்க. குளியலறை திறந்து கிடந்தது. ஆனா, எப்படி இறந்தாங்கன்னு யாருக்குமே தெரியலை. இதயம் சட்டுன்னு நின்னு போனதுதான் காரணம்னு சொன்னாங்க!"

"உங்க மாமா, அதான் மம்மியோட தூரத்து அண்ணன் உடனே கிளம்பிட்டாரா?"

"இல்லை. அவர் அதுக்குப் பிறகு ஒரு வருஷம் வரைக்கும் இங்கே இருந்தார். அவர் இங்கே இருக்கிறதுல அர்த்தமே இல்லேன்னுதான் கிளம்பிப் போனார்."

"அதுக்குப் பிறகு உங்க சொந்தக்காரங்க யாராவது இங்கே வந்து தங்கியிருக்காங்களா?"

"இல்லை. யாருமே வந்து தங்கலை!"

"அப்புறம் நீங்க மட்டும் திரும்பி வந்ததுக்குக் காரணம்?"

"நான் ஏற்கெனவே சொன்னதுதான். இந்த மண்ணில தங்கம் இருக்கிற விஷயம். அதைப் பத்தித் தீவிரமா பரிசோதனை செய்யணும்னு நினைக்கிறேன். எனக்கு அந்த விஷயத்துல ஈடுபாடு அதிகம். அப்படி ஏதாவது இருந்தா இடம் மொத்தத்தையும் கவர்மெண்டுக்கே விட்டுக் குடுத்திடுவேன். அதுதான் என் திட்டம்."



"நீங்களே சொந்தமா தங்கம் எடுக்கக் கூடாதா?"

"அதுக்கு அவசியமில்லையே. இதை வேறு யாராவது தெரிஞ்சுக்கிட்டா இந்த இடமே எனக்கு நஷ்டமாகிடலாம். அதனால நானே இதில தீவிரமா இறங்க விரும்புறேன். ஒருவாரம் கழிந்ததும் அதுக்கான வேலைகளை ஆரம்பிக்க வேண்டியது தான்!" தாம்சன் தன்னம்பிக்கை நிறைந்த குரலில் பேசினான்.

"உண்மையிலேயே இந்த முயற்சியில நீங்க வெற்றி பெறணும்னு வாழ்த்துறேன். இங்கே நாங்க ரெண்டுபேர் தங்கிட்டிருக்கிறதா உங்ககிட்டச் சொன்னேனே."

"நீங்க விரும்பினா இங்கே வந்து என்கூடவே தங்கிக்கலாம்!" தாம்சன் கூறினான்.

"நல்ல யோசனைதான். அதுக்கு முதல்ல நன்றி சொல்லிக்கிறேன். ஆனா, நாங்க இப்ப இருக்கிற இடத்தில ஓர் அவசியத்துக்காகத் தங்க வேண்டி இருக்கு. கொஞ்சம் விலகி இருந்தாலும் எப்பவும் நாங்க உங்களுக்கு நண்பர்கள்தான். நான் ஒரு வேண்டுகோள் வைக்கலாமா?"

"சொல்லுங்க!"

"நீங்க எங்கே போனாலும், குறிப்பா ராத்திரி நேரங்கள்ல வீட்டைவிட்டு வெளியே போறதா இருந்தா எனக்குத் தகவல் சொல்லுங்க!"

"எதுக்காக இது!"

"பயப்படாதீங்க... ஒரு பாதுகாப்புக்காகத்தான். தப்பா நினைக்காதீங்க!"

"அதுதான் உங்க விருப்பம்னா சொல்லிட்டாப் போகுது." தாம்சன் ஒப்புக்கொண்டான். எனக்கும் வேட்டையாடுறது ரொம்பப் பிடிச்ச விஷயம்!"

"அப்படீன்னா இன்னொரு வேண்டுகோள்?"

"சொல்லுங்க?"

"ராத்திரி நேரத்துல வேட்டைக்குப் போகக் கூடாது!"

"ஒப்புக்கிறேன். உங்க யோசனைகளை மனப்பூர்வமா ஏத்துக்கிறேன். ஒருவேளை அப்படிப் போக நேர்ந்தா, கண்டிப்பா உங்களுக்குத் தெரிவிக்கிறேன்."

"ரொம்ப நன்றி. அந்த அவுட்ஹவுஸிலதான் இருப்பேன். நான் இல்லேன்னா என் நண்பர்கிட்டயோ, அங்கே இருக்கிற வேலைக்காரத் தோழர்கிட்டயோ சொன்னால்கூடப் போதும்."

"தாராளமா!"

"அப்ப நான் வரட்டுமா?" புஷ்பராஜ் இருக்கையிலிருந்து எழுந்தார்.

"சிகரெட் பாக்கெட்டுகளை எடுத்துட்டுப் போகணும்கிறது என் விருப்பம்!"

"உங்க விருப்பப்படியே!" புஷ்பராஜ் சிகரெட் பாக்கெட்டுகள் இரண்டையும் கையில் எடுத்துக்கொண்டார்.

அந்த பங்களாவிலிருந்து திரும்பி வரும்போது அவர் மனத்தில் அந்த இளைஞரின் உருவமே தங்கியிருந்தது. 'அந்த இளைஞனுக்கு எந்த ஆபத்தும் நேரக்கூடாது!' என்று அவர் மனம் பிரார்த்திக்கத் தவறவில்லை.

இளைஞனும் ரங்கையாவும் மட்டும் அந்த பங்களாவில் இருக்கின்றனர்.

நண்பர் கதீரைக் கண்டதும் அங்கு நடந்ததை விவரித்தார்.

நள்ளிரவு ஆனபோது புஷ்பராஜ் எழுந்து ஜன்னல் வழியாக அந்த பங்களாவைப் பார்த்தார்.

விளக்குகள் எல்லாம் அணைந்திருந்தன.

37862

## 16

அந்த பங்களாவுக்குள் தென்பட்ட கனத்த இருட்டு புஷ்பராஜின் மனத்துள் பலவித சந்தேகங்களை எழுப்பிவிட்டது. குறிப்பாக அந்த பங்களாவின் தற்போதைய ஒரே வாரிசான தாம்சனுக்கு ஏதாவது நேர்ந்துவிடுமோ என்கிற பயத்தைக் கிளறி விட்டது. அதற்கு முந்தைய நாள் இரவு, அதற்குள் தனக்கு நேர்ந்த அனுபவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அவர் மூளைக்குள் கடந்து வந்தன. அதில் ஏதாவது ஒன்று தாம்சனுக்கு நேர்ந்தால் கூட தாம்சனால் உயிர்வாழ முடியாது என்பதும் புஷ்பராஜுக்குத் தெளிவாகத் தெரிந்தது. தாம்சன் தன் வாழ்நாளில் இதுபோன்ற காட்சிகளைப் பார்த்திருக்க முடியாது.

தான் பார்த்த ஸால்வின் துரையின் உருவமும், எலியும், தாம்சனின் முன்னால் வெளிப்படாதிருக்கட்டும் என்று அவர் மனமார வேண்டிக்கொண்டார். அன்று இரவு வெகுநேரம் வரை புஷ்பராஜ் உறங்கவே இல்லை. முதன் முதலாக புஷ்பராஜின் மனத்தில் தாம்சனைப் பற்றிய கவலைகள் இடைவிடாமல் வலம் வந்தன.

தாம்சனுக்கு என்ன நிகழும்?

அந்த உருவம் தாம்சனுக்கு முன்னால் வெளிப்படுமா?

அப்படியானால்...

சிந்தனையின் பாரத்தால் சற்று நேரத்தில் மயங்கிப் போனார்.

எப்போது கண்ணை மூடினார் என்று அவருக்கே தெரியாது.

விடியற்காலையில் கண்விழித்தார்.

புஷ்பராஜ் அறைக்கு வெளியே வந்து பார்த்தபோது ராகவன் கட்டிலில் குப்புறப் படுத்திருந்தான்.

"ராகவன்... ராகவா..." புஷ்பராஜ் தட்டி எழுப்பினார்.

அவன் விழித்து எழுந்தான்.

"என்ன இன்னிக்கு வழக்கத்துக்கு விரோதமா இன்னும் தூக்கம்?"

"ராத்திரி முழுக்கத் தூங்கவே இல்லை சார். கிட்டத்தட்ட விடியப்போற வேளையிலதான் தூங்க ஆரம்பிச்சேன். இந்த இடம் தங்குறதுக்கு ஏற்ற இடம் இல்லேன்னு தோணுது சார்!"

"என்ன... பயந்துட்டயா?"

"இந்த வீட்டுல ஒரு பொம்பளை தூக்குப்போட்டுச் செத்திருக்கான்னு இன்னிக்குக் காலையில பால்காரர் சொன்னார்."

"ராத்திரி முதல்ல நான் நல்லாத் தூங்கிட்டேன் சார். நீங்ககூட தூங்கிட்டீங்கன்னு தோணுது. யாரோ நம்ம வீட்டைச் சுத்தி நடந்துட்டிருக்கிறதா தோணுச்சு. காலடிச் சத்தத்தைக் கேட்டு விழிச்சேன். அதுவரைக்கும் நடந்திட்டிருந்தவங்க சட்டுன்னு நின்னுட்டதா தோணுச்சு. நம்ம வராந்தாவுல யாரோ நிக்குறாங்க. ஒரு பொம்பளை உருவம். பிறகு அது நகர்ந்து இந்த அறையோட ஜன்னல் கிட்ட வந்தது. நான் மெதுவா எழுந்தேன். பின்னால வந்து 'யாருங்க நீங்க?' னு கேட்டேன். பதில் கிடைக்கலை. சட்டுன்னு வாய்விட்டுச் சிரிக்கிற சத்தம். ஒரு பெண்ணோட சிரிப்பு அது. இன்னும் விளக்கமா சொல்றதானா உடைஞ்ச கண்ணாடித் துண்டுகளை தகர டப்பாவில் போட்டுக் குலுக்கின மாதிரிச் சத்தம். நான் நடுங்கிப் போயிட்டேன். அந்த நேரத்துல இப்படிப்பட்ட சிரிப்பை யார் கேட்டாலும் நடுங்கத்தான் செய்வாங்க. இனிமேல் இந்த இடத்துல என்னால தனியா படுக்க முடியாது சார்!" கண்களைக் கசக்கியபடி படுக்கையிலிருந்து எழுந்தான்.

"கோவிச்சுக்காதீங்க. நான் உடனேயே டீ போட்டுடறேன். என்னால உங்களுக்கு வீண் தொந்தரவு. நான் வேலையைவிட்டுப் போயிடுறேன் சார்."



"இதுக்குப் பயந்துட்டா வேலையை விட்டுப்போறே? அதுதான் உன் பிரச்சினைன்னா இன்னிலேர்ந்து நான் படுக்கிற அறையிலேயே படுத்துக்கலாம். நான் சாதாரணமா அவ்வளவு சீக்கிரம் தூங்கமாட்டேன்."

"நல்ல யோசனை. அப்படியே பிசாசு பிடிச்சாக்கூட நம்ம ரெண்டு பேரையும் ஒண்ணா பிடிச்சுக்கும். ஆனா, ஒரே நேரத்துல ரெண்டு பேரை பிசாசு பிடிக்காது சார்." ராகவன் ஸ்டவ் பற்ற வைத்தான்.

"சார் நீங்க நேத்து அங்கே பங்களாவுக்குப் போயிருந்தீங்க இல்லையா?" டீ கப்பை நீட்டியபடி கேட்டான்.

"எப்ப போனேன்னு கேக்குற ராகவா?"

"அந்த வீட்டு சின்ன எஜமானைப் பார்க்க சாயந்திரமா போனீங்கல்ல?"

"ஆமாம்... என்ன சேதி!"

"நான் சொன்னா நீங்க நம்புவீங்களோ என்னவோ... அவருக்கு அங்கே எந்த நேரம் என்ன நடக்குமோன்னு ஒரே பதைப்பா இருக்கு சார். ஏன்னா, இதுவரைக்கும் அந்த பங்களாவுல இருந்தவங்க யாரும் உயிரோட திரும்பிப் போனதில்லை. ஸால்வின் துரையின் ஆவி அந்த பங்காவுக்குள்ளே இருக்கிறதா பேசிக்கிறாங்க. சார், நீங்க விஷயத்தைப் பக்குவமா அந்த வீட்டு எஜமான்கிட்ட செல்லி, அவரை அங்கிருந்து கிளப்பப் பாருங்க." டீ கொடுத்த ராகவன் பேசினான்.

"நான் சொல்லிப் பார்க்கிறேன். ஆனால், அவர் அங்கேருந்து வெளியேறச் சம்மதிப்பார்னு தோணலை."

"அப்பமன்னா இதுக்கு முந்தியிருந்தவங்களுக்கு நடந்தது மாதிரியே..." அவன் மேற்புறமாகக் கண்களை உயர்த்தியபடி சொன்னான்.

"என்ன நடக்கும்னு சொல்ல வர்றே?"

"அவங்க எல்லாருமே வீணா ஆபத்துல மாட்டிச் செத்துப் போனாங்க!"

"அதனால இவருக்கும் அதே மாதிரியெல்லாம் நடக்கும்னு சொல்லிடுறதா!"

"பொதுவா நாம நடந்ததை வெச்சுத்தானே நடக்கப் போறதை யோசிப்போம்? எனக்கென்னமோ என் மனசில அப்படிப் பட்டது சார். என்ன இருந்தாலும் அந்தச் சின்ன எஜமான் அங்கே தங்குறது நல்லதாத் தெரியலை. அந்தத் துரையோட ஆவி அவரைக் கொல்லாம விடாது!"

"சரி, அதெல்லாம் கிடக்கட்டும். இந்தக் கட்டடத்துல தூக்கு மாட்டிச் செத்துச் போனது யாராம்?" புஷ்பராஜ் கேட்டார்.

"எல்லாமே அந்தத் துரையால வந்த வினைன்னு சொல்றாங்க. துரையோட வேலைக்காரங்க அந்தப் பொண்ணைப் பிடிச்சுட்டுப் போயிருக்காங்க. அங்கேயே எல்லாத்தையும் இழந்துட்டு, நேரா இங்கே வந்து தூக்குப் போட்டுக்கிட்டாளாம்."

"கதை எழுதறவங்க பேசுற மாதிரி சொல்றீங்களே ராகவன்!"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிஞ்சதைச் சொல்றேன். அதுவும் நானாச் சொல்லலை. இந்த மலைச்சரிவில குடியிருக்கிற எல்லாருமே சொல்ற கதை இது. என்ன இருந்தாலும் அந்தப் பொண்ணுக்கு என்னைப் பிடிக்க வேண்டிய தேவையே இல்லை. நான் ஒரு அப்பாவி. நீங்க சொன்னதாலதான் வேலைக்கு வந்தேன்."

"வேலைக்கும் நீயாத்தானே வந்தே? இங்க வரும்போது அந்தப் பொண்ணு தூக்குப் போட்டுச் செத்துப் போனது தெரியாதா உனக்கு?" புஷ்பராஜ் கேட்டார்.

"கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், அவள் என்னைப் பிடிப்பாள்னு எனக்கென்ன ஜோசியமா தெரியும்?"

"இதுக்கெல்லாம் பயப்பட்டா எப்படி ராகவா? நாங்கள்லாம் இல்லையா இங்கே? இப்படி ரெண்டுபேர் உன் கூட இருக்கோம்.



குழந்தை மாதிரி பயந்துட்டிருந்தா எப்படி? பயப்படாதே. உனக்கு எந்த விதமான ஆபத்தும் வராது. பயம்தான் மனுஷனோட முதல் எதிரி."

"சரி சார்... பயப்படமாட்டேன்!" என்றவன் டிபன் தயாரிப்பதில் ஈடுபட்டான்.

கதிர் எழுந்து வந்தார்.

ராகவன் சொன்னதை அவரிடம் விவரித்தார் புஷ்பராஜ்

"அதெல்லாம் ஒருவேளை ராகவனோட பிரமையா இருக்கலாம். இந்தக் கட்டடத்தைப் பத்தி மத்தவங்க சொல்ற கதையைக் கேட்டிருப்பான். அதையே மனசில நினைச்சுட்டுப் படுத்திருப்பான். போதாக்குறைக்கு காலையில பால்காரர் வேற வந்து கிளறிட்டுப் போயிட்டாரே. அதுதான்."

"நீங்க சொன்னபடி நடந்திருக்கவும் வாய்ப்பு இருக்குது!"

டிபன் சாப்பிட்டுவிட்டு புஷ்பராஜ தாம்சனைச் சந்திப்பது என்று முடிவு செய்தார். எனவே, தாம்சன் தங்கியிருக்கும் பங்களாவை நோக்கி நடந்தார். காம்பௌண்டுக்குள் நுழைந்ததும் ரங்கையா தோட்டத்தைச் சீர்படுத்திக் கொண்டிருப்பது தெரிந்தது. அந்தப் பகுதியே இப்போது மனித வாசனையேற்று விளங்குவது போலிருந்தது. இப்படியே போனால் இன்னும் ஒரு வாரத்துக்குள் இது மற்ற வீடுகளைப் போல் சகஜ நிலைமைக்குத் திரும்பிவிடும்.

"ரங்கையா!" புஷ்பராஜ் அழைத்தார்.

"என்னங்க!" மண்வெட்டியுடன் நிமிர்ந்தான்.

"உங்க முதலாளி எங்கே?"

"குளத்துல மீன்பிடிக்கப் போயிருக்கார்."

"குளமா, அது எங்கே இருக்கு?"

"பக்கத்திலேயே இருக்கு. அதுல மீனும் ஏராளமா இருக்கு. சின்ன வயசிலேர்ந்து குளத்துல மீன் பிடிக்கிறது தம்பிக்கு ரொம்பவும் பிடிக்கும். இன்னும் அந்தப் பழக்கம் போகலை!"

"எப்பத் திரும்பி வருவார்?"

"மதியம் ஒருமணிக்கு சாப்பாட்டுக்கு வரலேன்னா, நான் சாப்பாட்டை எடுத்துட்டு குளத்தங்கரைக்குப் போவேன்."

"சரி... வழி சொன்னீங்கன்னா, நானே குளத்துக்குப் போறேன்!"

"அதோ தெரியுது பாருங்க... ஒரு பெரிய பாறை. அதுக்குக் கிழக்கதான் குளம். குளத்தோட கரையே அந்தப் பாறைதான்" ரங்கையா இடத்தைச் சுட்டிக்காட்டினார்.

புஷ்பராஜ் அந்தத் திசையை நோக்கி நடந்தார்.

முந்தைய நாள் தாம்சனுக்கு ஏதாவது புதிய அனுபவம் ஏற்பட்டதா என்பதைத் தெரிந்து கொள்வதுதான் அவர் நோக்கம்.

சின்னச் சின்னப் பாறைகளைத் தாண்டி ஒரு பெரும் பாறையைக் கடந்ததும் ரங்கையா குறிப்பிட்ட குளம் தென்பட்டது. தாம்சனும் அங்கு இருந்தான்.

"அங்கு தாம்சன் மட்டுமில்லையே!" புஷ்பராஜ் யோசித்தார்.

தட்டையான ஒரு பாறைப் பரப்பின்மீது காலை ஊன்றி, மறுபுறம் வந்தார். தாம்சன் தூண்டிலைக் குளத்துள் வீசி மீன் பிடித்துக் கொண்டிருந்தான்.

சுற்றிலும் பாறைகள் இறைந்து கிடக்கும் அழகான ஒரு பகுதி அது. குளத்தில் தண்ணீர் கண்ணாடிபோல் தெளிவாக இருந்தது. அவ்வப்போது தூண்டில் அசைவதைத் தவிர குளத்து நீர் சலனம் இல்லாமல் இருந்தது.

புஷ்பராஜ் தாம்சனை நெருங்காமல் தெரியும்படியான தூரத்தில் சற்று ஒதுங்கி ஒரு பாறைமீது அமர்ந்தார்.

தாம்சனுக்கு இருகில் இளம்பெண் ஒருத்தி அமர்ந்திருந்தாள். அவள் முதுகுப்பகுதி தென்பட்டதால் யாரென்பதை அவரால் தெரிந்துகொள்ள முடியவில்லை.



வெள்ளை நிற "பராக். பிரவுன் கலர் தலைமுடி. தோள்வரை வெட்டப்பட்ட பாப் முடி. உண்மையில் அவளை ஒரு சிறிய பெண் குழந்தை என்றுதான் குறிப்பிட வேண்டும். காற்றில் அலைந்து கொண்டிருந்த தலைமுடியை அவள் அவ்வப்போது வலதுகையை உயர்த்தி ஒதுக்கிக் கொண்டிருந்தாள். அவள் பின் கழுத்து, செதுக்கியெடுத்த ஒரு சிலையினுடையதைப் போலிருந்தது.

நேற்றுத்தான் இந்த ஊருக்கு வந்து சேர்ந்த தாம்சனுக்கு அதற்குள் எப்படி இப்படிப்பட்ட பெண் ஒருத்தியின் நட்பு கிடைத்திருக்கும்?

அந்தப் பெண் யார்?

அவள் வாய் ஓயாமல் எதையோ பேசுவது போலவும் தெரிந்தது.

பத்து நிமிடம்வரை காத்திருந்தார்.

புஷ்பராஜ் தாம்சனுக்கு அருகே வந்தார்.

அப்போதும் அவர் மனம் 'அவள் யாராக இருப்பாள்? என்று யோசித்துக் கொண்டிருந்தது.

## 17

புஷ்பராஜ் நிதானமாக நடந்து அவர்களை நெருங்கினார். அவரது காலடியோசை கேட்டும் அவர்கள் திரும்பிப் பார்க்கவில்லை. அவர்கள் இருவரும் எதையோ ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

அடுத்த நிமிடம்-

தாம்சனின் தூண்டில் சட்டென்று உயர்ந்தது.

துடித்துக் கொண்டிருந்த வெள்ளை நிற மீன் ஒன்று தூண்டிலில் தென்பட்டது.

அதைத் தூண்டிலிலிருந்து பிரிக்க முற்படும்போது தாம்சன், புஷ்பராஜைப் பார்த்தான்.

"ஹலோ... வாங்க... இங்கேயே என்னைத் தேடி வந்துட்டீங்களா?" தூண்டிலிலிருந்து மீனை எடுத்து அதன் செவிப் பகுதியில் விரலை நுழைத்தபடி கேட்டான்.

"நான் இப்பத்தான் வர்றேன். அதுக்குள்ளே ஒரு புது ஃபிரண்டு' கிடைச்சுட்டாங்க போலிருக்கே!" புஷ்பராஜ் சிரித்தார்.

"இங்கே வந்தபோது எதிர்பாராம சந்திச்சேன்." தாம்சன் பாறையிலிருந்த ஒரு பள்ளத்தில் மீனைப் போட்டபடி சொன்னான்.

"யார் இவங்க?"புஷ்பராஜ் கேட்டார்.

"பேரு ஜீனா. இவங்க அப்பா டேவிட் மும்பையில இருக்கார்."

டேவிட், ஸால்வின் துரையிடம் தோட்டக்காரராக இருந்தவர். ஸால்வின் துரை மரணமடைந்த பிறகும் டேவிட் அந்தத் தோட்டத்தைப் பராமரித்து வந்தார். செடி கொடிகளுடன் அபரிமிதமான பற்றுள்ளவர்.

ஜீனா, சிறுவயது முதலே இங்குதான் வளர்ந்து வருகிறாள். அவளுக்கு இந்த மலையடிவாரத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கும் நன்றாகத் தெரியும். பயப்படாத தன்மை அவளின் இயல்பு.

ஜீனா, உண்மையில் அழகாக இருந்தாள்.

இருபது வயதுக்கும் குறைவாகத்தான் மதிப்பிட முடியும். பளபளத்த கால் பகுதிகளும் பளிங்கில் செதுக்கியெடுத்தது போன்ற கழுத்துப் பகுதிகளும் அவளை ஒரு வன தேவதையாக மாற்றிவிட்டிருந்தது.

தாம்சனுக்குப் பொருத்தமான ஜோடியாகத் தெரிந்தாள்.

ஜீனா படித்ததெல்லாம் வெளியூரில். ஒவ்வொரு விடுமுறைக்கும் இந்தக் கிராமத்துக்கு வந்துவிடுவது அவள் வழக்கம்.

"உட்காருங்க!" தாம்சன் சொன்னான்.



"அதுக்கெல்லாம் நேரமில்லை. நான் கிளம்புறேன். இன்னிக்கு ராத்திரி இந்த மீனையெல்லாம் நாம சாப்பிட வேண்டியதுதான்." புஷ்பராஜ் சிரித்தபடி நடக்கத் தொடங்கினார்.

வழியெல்லாம் அவர் சிந்தனை தீவிரமாக ஒரு விஷயத்தைப் பற்றியே வட்டமடித்துக் கொண்டிருந்தது. 'இவள் எதற்காக தாம்சனுடன் இவ்வளவு நெருங்கிப் பழகுகிறாள்? தாம்சன் இந்த பங்களாவின் வாரிசு. அவன் எதற்காக இவளுடன் நெருங்கிப் பழகுகிறான்?

மதியத்தில் தாம்சனுக்கான சாப்பாட்டை எடுத்துக்கொண்டு ரங்கையா வந்தார்.

ஆறு பெரிய பெரிய மீன்களை தாம்சன் அவரிடம் கொடுத்து அனுப்பினான்.

மணி மூன்றுக்கு மேல் ஆகியிருந்தது.

சூரியன் மேற்குத் திசையில் சாய்ந்து கொண்டிருந்தான். இன்னும் சற்று நேரத்தில் தூரத்திலுள்ள கூர்மையான மலைமுகடுகளில் சூரிய ஒளி மறைந்து பின்வாங்கிவிடும். விரைவில் அந்தப் பகுதி இருட்டத் தொடங்கிவிடும்.

நிழல்கள் வெளியே வரும். அதுவரை அவையெல்லாம் பாறை இடுக்குகளில் ஒளிந்திருக்கும்.

"புறப்படலாமே?" தாம்சன் எழுந்தான்.

"சரி, நான் கிளம்புறேன்." அவள் காட்டு ஆடு மாதிரி பாறைக் கூட்டங்களுக்கிடையே பாய்ந்து மறைந்தாள்.

தாம்சன் அதற்குப் பிறகு பிடித்த மீன்களை எடுத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். அங்கிருந்த பெரிய பாறையின் மறைவை நெருங்கியதும் சட்டென்று பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது;

"யாரது?"

தாம்சன் திரும்பிப் பார்த்தான்.

திடகாத்திரமான மனிதர் ஒருவர் அங்கு நின்று கொண்டிருந்தார்.

"நான்தான்... என்ன வேணும் உங்களுக்கு?" தாம்சன் திரும்பி நின்று கேட்டான்.

"நீங்க ஒரு இளைஞர். இருட்ட ஆரம்பிக்கிற இந்த நிமிஷத்திலேர்ந்து இந்த மலைச்சரிவு மனுஷங்களுக்கானது இல்லை!"

"நீங்க சொல்றது புரியலை!"

"இதெல்லாம் உங்களுக்குப் புரியாது. இந்த பங்களாவோட சொந்தக்காரரான ஸால்வின் துரையைப் பத்தி உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது!"

"அவர் இன்னும் சாகலை!"

"என்ன பேச்சு இது!"

"உண்மை அதுதான். அந்த நபர் ஒரு மந்திரவாதியும்கூட. நீங்க டிராகுலா பிரபுவைப் பத்திக் கேள்விப்பட்டிருப்பீங்க. அவரை மாதிரியே இவருக்கும் மரணம் கிடையாது. மற்ற உயிர்களுக்குள்ளே வாழும்வித்தை அவருக்குத் தெரியும். இன்னமும் அவர் அப்படியே வாழ்ந்திட்டிருக்கிறதாத் தெரியுது. நான் சொல்றது என்னன்னா, அந்த பங்களாவுல நீங்க இனிமேல் ஒரு நிமிஷம் கூட தங்கக் கூடாது. அங்கே எத்தனையோ பேர் மரணமடைஞ்சி இருக்காங்க. ஜாக்கிரதை." அந்த மனிதனின் குரல் மிகவும் முரட்டுத்தனமாக இருந்தது.

"அதெல்லாம் இருக்கட்டும். முதல்ல நீங்க யார்? அதைச் சொல்லுங்க!"

"நான் யாரா இருந்தா உங்களுக்கு என்ன? ஆனா, எனக்கு இந்த மலைச்சரிவைப் பத்தி நல்லாத் தெரியும்."

"இருக்கலாம்."



"நான் ரொம்ப வருஷமா இங்கே குடியிருக்கிறவன்." மேற்கொண்டு எதுவும் பேசாமல் உடனே திரும்பி நடக்கத் தொடங்கினார். விரைவிலேயே ஒரு நிழல்மாதிரி மறைந்தும் போனார்.

'அந்த மனிதர் எதற்காக இப்படிப் பேச வேண்டும்?' தாம்சன் யோசனையில் ஆழ்ந்தான்.

தாம்சன் அங்கிருந்து நடக்கத் தொடங்கியதும் இருள் அந்தப் பகுதியைச் சூழ்ந்துகொள்ளத் தொடங்கியது. தாம்சனிடம் டார்ச்லைட் இருந்தது.

பங்களாவுக்கு வரும்போது மணி ஏழுக்கு மேல் ஆகிவிட்டது. புதிதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமையல்காரர் வந்து சேர்ந்திருந்தார். ரங்கையாதான் அவரை சிபாரிசு செய்து அழைத்து வந்தவர்.

புது சமையல்காரர் சமையல் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

இரவு ஒன்பது மணி வரையில் தாம்சன் புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

சமையல்காரர் அவனைச் சாப்பிட அழைத்தார்.

டைனிங் ஹாலில் சாப்பாடு தயாராக இருந்தது.

பருமனான மெழுகுவத்திகள் நான்கு டைனிங் டேபிளின் மீது ஒளி சொரிந்து கொண்டிருந்தன.

மீனைத் துண்டு போடாமல் சுத்தப்படுத்தி அப்படியே வறுத்து வைத்திருந்தார். ரொட்டியும் புறாக் கறியும், விஸ்கி பாட்டிலும் டைனிங் டேபிள் மீது தயாராக எடுத்து வைக்கப்பட்டிருந்தன.

தாம்சன் கொஞ்சம் விஸ்கியை கிளாஸில் ஊற்றி முதலில் குடித்தான். பிறகு வறுத்த மீனின் பக்கம் திரும்பினான்.

அப்போது சன்னமான சத்தம் எழுந்ததால் தாம்சன் சட்டென்று தலையை உயர்த்திப் பார்த்தான்.

டைனிங் டேபிளின் மேற்புறம் இருந்த அலங்காரவிளக்குச் சங்கிலி, மற்ற சங்கிலிகளுடன் மோதியதால் எழுந்த சத்தம் அது.

விளக்கு அசையக் காரணம் என்ன என்று தெரிந்து கொள்ள விரும்பினான் தாம்சன்.

தொங்கிக் கொண்டிருக்கும் சங்கிலி வழியாக பெரிய எலியொன்று இறங்கிக் கொண்டிருந்தது. சட்டென்று அது டேபிளின் மீது தாவியது. தாவிய வேகத்தில் டேபிளின் மேலிருந்த நான்கு மெழு வத்திகளும் அணைந்து போனதால் அறை மொத்தமும் இ ரில் ழ்ந்தது.

உடனேயே சமை ற்காரர் எரிந்து கொண்டிருக்கும் மற்றொரு விளக்குடன் ந்தார்.

"என்னங்க ஆச்சு எஜமான்?" சமையற்காரர் விசாரித்தார்.

"பயப்படுற அளவுக்கு ஒண்ணுமில்லை. அலங்கார விளக்கில தொங்குற சங்கிலியில் இருந்து ஒரு எலி கால் தவறி விழுந்துடுச்சு... அவ்வளவுதான்."

"எலியா?"

"ஆமாம்."

"ஐயோ..."

"நீங்க ஏன் திகைச்சுப் போயிட்டீங்க?"

"எலிங்ககிட்ட ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்."

"எதுக்காக?"

"இந்த பங்களாவுல நாம ரொம்பவும் பயப்பட வேண்டியதே எலிகளுக்குத்தான்."

"என்னங்க... என்னமோ புதிர் போடுறீங்க?"

"ஐயோ... அதை நான் என் வாயால சொல்ல மாட்டேன்."

"பரவாயில்லை சொல்லுங்க!"



"சொல்லமாட்டேன்."

"அப்போது யாரோ வெளிக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. சமையற்காரர் கதவைத் திறந்தார். ஆனால், சமையற்காரருக்கு வந்தவரை அடையாளம் தெரியவில்லை.

"நான்தான்!" புஷ்பராஜின் குரல் வெளியிலிருந்து கேட்டது.

"வாங்க சார்... வாங்க!"

"குளத்து மீன் சாப்பிடுறீங்களா?"

"வேண்டாம். நான் இப்பத்தான் சாப்பாடு சாப்பிட்டேன்."

"என்ன சார் இந்த நேரத்துல..." தாம்சன் கேட்டான்.

"சும்மா காலாற நடக்கலாம்னுதான்."

"இன்னிக்கு சுவாரஸ்யமான சம்பவம் ஒண்ணு நடந்தது..." என்று தொடங்கிய தாம்சன் மாலையில் நடந்ததை விவரித்தான்.

புஷ்பராஜ் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"பயப்படாதீங்க... நான் அதுக்கு ஒரு ஏற்பாடு பண்றேன். வரட்டுமா?" புஷ்பராஜ் அங்கிருந்து உடனே வெளியேறினார்.

ஒற்றையடிப் பாதை வழியே விரைவாக நடந்தார்.

சற்றுத் தொலைவு நடந்ததும் அவர் சட்டென்று நின்றார். தனக்கு முன்னால் யாரோ நடந்து கொண்டிருப்பதாக, புஷ்பராஜுக்குத் தோன்றியது.

புஷ்பராஜ் டார்ச்லைட்டை எரியவிட்டார்.

கருமையான உருவம் ஒன்று எதிரில் நின்று கொண்டிருந்தது!

"யார் நீங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

அந்த உருவம் சட்டென்று நின்று அவரை நோக்கித் திரும்பியது.

"நீங்க இந்த இடத்துக்குப் புதுசா குடிவந்திருக்கிறவர் இல்லையா?"

"உண்மைதான்."

"கொஞ்சநேரத்துக்கு முன்னாலகூட நான் உங்களை எச்சரிக்கை செய்தேன்!"

"நீங்க என்ன சொல்றீங்க?" புஷ்பராஜ் புரியாதவராகக் கேட்டார்.

"நான் சொன்னதெல்லாம் ஞாபகத்துல இருந்தா சரி." மேற்கொண்டு எதையும் பேச விரும்பாதவரைப் போல் விடுவிடுவென்று நடந்து மறைந்தது அந்தக் கருமையான உருவம்.

## 18

'கருமையாகத் தட்டுப்பட்ட அந்த உருவம் யார்?' புஷ்ப்ராஜின் சிந்தனை அவசர அவசரமாக மனத்திலிருந்த மறை முகங்களின் அடுக்குகளில் தேடியது, தெரிந்த முகமா என்று. அப்படி எதுவும் தெரியவில்லை. இந்த இரவு வேளையில் அந்த மனிதர் எதற்காக இங்கு வந்து சேர்ந்தார். எதற்காகத் தன்னை எச்சரிப்பது போல் பேசினார்? அந்த மனிதனை உடனடியாகப் பின்தொடர வேண்டும் என்று விரும்பினார்.

விடியற்காலையில் நான்கு மணிக்குப் பிறகுதான் அவர்கள் வேட்டையிலிருந்து திரும்பினர். தாம்சன் ஒரு மானைச் சுட்டு வீழ்த்தினான். மிகவும் சிறிய மானாக இருந்ததால் இருவருமாக அதைச் சுமந்துகொண்டு பங்களாவுக்குக் கொண்டுவந்தனர். மதிய உணவுக்கு சுதீரையும் அழைத்து வருமாறு தாம்சன் கேட்டுக் கொண்டான். புஷ்பராஜ் தனது இருப்பிடத்தை நோக்கி விரைந்தார்.

"ராகவா?" புஷ்பராஜ் அழைத்தார்.

"என்ன சார்?" சமையறையிலிருந்து ஓடிவந்தான் ராகவன்.

"இன்னிக்கு எங்க ரெண்டு பேருக்கும் மதியச் சாப்பாடு வேண்டாம். அந்த பங்களாவில் விருந்துக்குப் போறோம். உனக்கு மட்டும் சமைச்சாப் போதும்!"



"நீங்க இவ்வளவு சீக்கிரமா அவருக்கு நண்பர் ஆகிட்டது ரொம்ப சந்தோஷமா இருக்கு. அவரோட நல்ல நேரத்துக்குத்தான் நீங்க வந்து சேர்ந்திருக்கீங்கன்னு தோணுது."

"இதுக்கு முன்னால நடந்ததையெல்லாம் வெச்சுப் பார்த்தா, நான் சொன்னது சரிதான்னு உங்களுக்குத் தோணலையா?"

"நடந்ததெல்லாம் நடந்ததா இருக்கட்டும். வீணா, அதைப் பத்தி பேசி நேரத்தைப் பாழாக்க வேண்டாம்." புஷ்பராஜ் சொன்னார்.

மதியம் பன்னிரண்டு மணி வாக்கில் இருவரும் அவுட் ஹவுஸிலிருந்து பங்களாவை நோக்கி நடந்தனர்.

தாம்சன் அவர்களை எதிர்பார்த்துப் பிரம்பு நாற்காலி ஒன்றில் வராந்தாவில் உட்கார்ந்திருந்தான்.

"சரியா இந்த நேரத்துக்கு வந்துடுவீங்கன்னு நெனைச்சேன். தெரிஞ்சவங்ககூட உட்கார்ந்து சாப்பிடறதே ஒரு தனி சுகம்தான். அதுவுமில்லாம நான் இங்கே வந்த பிறகு முதல் தடவையா கிடைச்சிருக்கிற வேட்டையும்கூட." புகைத்து முடித்த சிகரெட்டை வீசி எறிந்த தாம்சன் பேசினான்.

"எஜமான், சாப்பாடு தயாரா இருக்குங்க!" சமையற்காரர் குரல் கொடுத்தார்.

"நீங்க என் பார்வைக்குத் தட்டுப்பட்டபோதே சமையல்காரர் கிட்ட விஷயத்தைச் சொல்லிட்டேன்."

அவர்கள் டைனிங் ஹாலை நோக்கி நடந்தனர். தோட்ட வேலை செய்து கொண்டிருந்த ரங்கையா யதேச்சையாகத் தலையை திருப்பிப் பார்த்துவிட்டு, அவர் பாட்டுக்கு வேலையைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

டைனிங் டேபிளின் நடுவே ஏழு மெழுகுவத்திகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. மெழுகுவத்தி ஸ்டாண்ட் பளிச்சென்று துடைத்துச் சுத்தமாக்கப்பட்டிருந்தது. பகல் பொழுதிலும் வெளிச்சம் குறைவாக இருந்த அந்த அறைக்குள் மெழுகுவத்தி வெளிச்சம் தேவையானதாகவும் அழகாகவும் இருந்தது.

மான்கறி, பல வகையான பதார்த்தங்களாகச் சமைக்கப் பட்டிருந்தது. சமையற்காரர் கைதேர்ந்தவர் என்பதற்கு அந்தச் சமையலே ஓர் அடையாளமாக இருந்தது.

மான்கறியால் செய்யப்பட்டிருந்த விருந்து புஷ்பராஜுக்கு மிகவும் பிடித்திருந்தது. பார்த்தாலே சாப்பிடத் தோன்றும் கைப் பக்குவம். அங்கு வந்த பிறகு இப்போதுதான் முதன் முறையாக இறைச்சி சாப்பிடுகிறார்கள்.

"சின்ன வயசுல உங்க அப்பா வேட்டைக்குப் போகும்போது நீங்களும் போயிருக்கீங்களா?" சாப்பாட்டுக்கு நடுவே புஷ்பராஜ் கேட்டார்.

"என்ன கேட்டீங்க?" ஏதோ யோசனையிலிருந்த தாம்சன் திரும்பக் கேட்டான்.

"அப்பாகூட நீங்க வேட்டைக்குப் போயிருக்கீங்களா?"

"ஒருசில சந்தர்ப்பங்கள்ல போயிருக்கேன்."

"இந்த பங்களாவில் குடியிருக்கிறதில உங்களுக்கு ஏதாவது அசௌகரியம் தட்டுப்படுதா?" சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவர்கள் வரவேற்பு ஹாலுக்கு வந்த பிறகு கதிர் முதன் முறையாகப் பேச்சில் கலந்துகொண்டார்.

"ஏன் இப்படிக் கேட்கிறீங்க?"

"விரும்பத்தகாத சில சம்பவங்கள் இங்கே நடந்திருக்கே, அதனால கேட்டேன்."

"நடந்திருக்கிறது என்னமோ உண்மைதான். ஆனா, அதுக்காகப் பயந்தா முடியுமா? நடந்ததெல்லாம் முடிஞ்சுபோன விஷயம். நான் அதையே நினைச்சுட்டு வருத்தப்பட்டுட்டு இருந்தா என்ன பிரயோஜனம்?" சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்த தாம்சன் கேட்டான்.

மலைச் சரிவில் வளைந்து நெளிந்து செல்லும் பாதையில் விவசாயிகள் நடந்து கொண்டிருந்தனர். எறும்புகள் சாரை சாரையாக ஊர்ந்து செல்வது போலிருந்தது அந்தக் காட்சி.



"இன்னிக்கு ராத்திரிக்கு ஏதாவது திட்டம் போட்டிருக்கீங்களா?"

"ஒண்ணும் இல்லை. நேற்றைய களைப்பே இன்னும் தீரலை. நல்லாத் தூங்கணும்." தாம்சன் சொன்னான்.

"அப்ப நாங்க கிளம்பட்டுமா?" புஷ்பராஜ் எழுந்தார். இருவரும் பங்களாவிலிருந்து தாங்கள் தங்கி இருக்கும் அவுட் ஹவுஸை நோக்கிப் புறப்பட்டனர்.

"அந்தப் பக்கத்திலதானே அந்தப் பண்ணையார் வீடு இருக்கிறதா பால்காரர் சொன்னார்?"

"ஆமாம்."

"அங்கே யாரோ புதுசா வந்திருக்கிறதாவும் பால்காரர் சொன்னாரே!"

"புதுசா ஒரு பொண்ணு வந்திருக்கிறதாச் சொன்னார்."

"அது யாருன்னு தெரிஞ்சுக்கணுமே!" புஷ்பராஜ் கூறினார்.

மாலை நேரமானதும் புஷ்பராஜ் மலைச்சரிவினூடக நடந்தார். முந்தைய நாள் தாம்சனைப் பார்த்த அதே குளக்கரை தான் அவர் லட்சியம். பாறைகளைத் தாண்டி குளத்தை அடைந்தார். அந்த இடத்தின் பாதை மிகவும் கடினமானதாக இருந்தது. அங்கு முந்தைய நாள் போலவே தாம்சனும் ஜீனாவும் இருந்தனர்.

தாம்சன் மீன் பிடித்துக்கொண்டிருந்தான்.

ஜீனா அவன் தோளில் கைவைத்துப் பேசிக் கொண்டிருந்தாள். அவர்களின் நட்பு மிகவும் நெருக்கமாக இருப்பது அப்போதுதான் அவருக்குப் புரிந்தது. பதினைந்து வருடங்கள் கடந்து விட்டிருந்தாலும் இன்னும் அந்த நட்பு தொடர்வது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

"யார்... நீங்கதானா?" பூட்ஸின் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் தாம்சன்.

"சும்மா உட்கார்ந்திருக்க போர் அடிக்குது. அதனால இப்படி காலாற நடக்கலாம்னு ..."

"எனக்கும் அதுதான் நிலைமை. ஓய்வெடுக்கணும்னு பார்த்தேன். ஆனால், சாயந்திரமானதும் இந்தப் பக்கம் வர வேண்டுமென்று தோன்றியது. இந்தப் பெண்ணும் காத்திருப்பாளே, பார்க்கலாம்னு தோணுச்சு." தாம்சன் கடைசி வார்த்தைகளைச் சொன்னபோது ஜீனா வெட்கத்துடன் தலைதாழ்த்திக் கொண்டாள்.

"உங்க அப்பா ஊர்ல இல்லையாம்மா?" புஷ்பராஜ் கேட்டார்.

"மும்பைல இருக்கார். போய் ஒரு வாரமாகுது. அங்கே எங்க சொந்தக்காரங்க வீடு இருக்குது."

"என்னிக்கு வர்றார்?"

"சொல்ல முடியாது. அப்பாவோட பயணமெல்லாம் வரையறை இல்லாதது. அவரா விரும்பித் திரும்பி வந்தாத்தான் உண்டு!"

டேவிட் ஊரில் இல்லாமலிருப்பது ஜீனாவுக்கு உகந்த சந்தர்ப்பமாக இருக்கிறது. ஒருவேளை டேவிட்டுக்கு இந்த நட்பு தெரிய வந்தால்கூட தடை எதுவும் சொல்ல மாட்டார் என்று தோன்றியது. காரணம், தாம்சன் அந்த மலைச்சரிவில் குறிப்பிடத்தக்க ஒரு பணக்காரன். தங்கச் சேமிப்பே அவனிடம் ஏராளமாக இருக்கிறதே.

மாலை நேரம் மலைச்சரிவைச் சுற்றி வளைத்துச் சூழ்ந்து கொண்டிருந்தது.

மேற்கொண்டும் அங்கேயே காலம் கடத்தினால் ங்களாவுக்குச் செல்வது சிரமமாகி விடும் என்பதால் உடனே அங்கிருந்து கிளம்பத் தொடங்கினர்.

சூரியன் மேற்குப்புற மலையுச்சியிலிருந்து தாழ்ந்து கொண்டிருந்தான்.

ஜீனா, அவர்களிடமிருந்து விடைபெற்று ஒரு பேடை மான்போல் பாய்ந்தாள்.



சற்று நேரத்துக்குள் அவள் போன திசையிலிருந்து ஓர் அலறல் கேட்டது.

திகைப்புடன் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். புஷ்பராஜ் சற்றும் யோசிக்காமல் அந்தத் திசை நோக்கிப் பாய்ந்தார். அதற்கு முன் அந்தப் பகுதியில் நடந்த சம்பவங்கள் எல்லாம் அவர் மூளைப்பகுதியில் பாய்ந்து வந்தன.

'அவளுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ?' அவர் சிந்தனை அந்தத் திசையிலேயே விரைந்தது.

தாம்சன் வீட்டாருக்கு ஆபத்து நிகழ்ந்ததும் அங்குதான். எல்லாரும் அந்தப் பகுதியில்தான் மரணமடைந்தனர்.

புஷ்பராஜைத் தொடர்ந்து தாம்சனும் ஓடி வந்து கொண்டிருந்தான்.

ஏறத்தாழ நூறு மீட்டர் தொலைவு வந்ததும் ஜீனா பயத்தில் நடுங்கியபடி நிற்பது தெரிந்தது.

"என்னம்மா நடந்தது?" புஷ்பராஜ் கேட்டார்.

"அதோ அங்கே ஒரு மனுஷன்! யாரோ ஒருத்தன் பாறைப் பிளவுகளுக்கு நடுவுல நின்னு கொண்டிருப்பதைப் பார்த்தேன்!"

"எந்த இடத்துல?" புஷ்பராஜ் கேட்டார்.

"அதோ...அங்கே...!" அவள் கையைச் சுட்டிக் காட்டினாள்.

"ரெண்டு பேரும் இங்கேயே நில்லுங்க! நான் உடனே திரும்பி வர்றேன்." புஷ்பராஜ் தனது ரிவால்வரைக் கையில் பிடித்தபடி பிளவுப் பகுதியை நோக்கி ஓடினார். அங்கு எவரையும் காணவில்லை. அந்தப் பிளவைத் தாண்டி மறுபுறம் வந்தார். அதற்குள் அந்தப் பகுதியில் இருள் பரவியிருந்தது. அந்த இருளிலும் அங்கு சில குகைகளும், பள்ளங்களும் இருப்பது தெரிந்தன. அந்தப் பகுதியில், அந்தச் சூழ்நிலையில் யாரையும் தேடிக் கண்டுபிடிப்பது சுலபமல்ல என்று தோன்றியது. ஏமாற்றத்துடன் திரும்பத் தொடங்கினார்.

ஜீனாவும் தாம்சனும் நின்றிருந்த இடத்துக்கு வந்தார்.

"யாராவது இருந்தாங்களா?"

"இல்லை...அந்தப் பக்கத்துல ரொம்பவும் இருட்டா இருக்கு." புஷ்பராஜ் சொன்னார்.

"நாம நேத்துப் பார்த்த அதே உருவமாத்தான் இருக்கணும்," தாம்சன் கூறினான்.

"அந்த உருவம் யாரா இருக்கும்?" பழைய பல்லவியையே அவர் திரும்பவும் பாடினார்.

"நாம இந்த இடத்துலேயே மேற்கொண்டும் நின்னுட்டிருக்கிறது நல்லதில்லை." தாம்சன், ஜீனாவின் தோளில் தட்டியபடி பேசினான்.

"மிஸ்டர் தாம்சன், நீங்க ஜீனாவை பத்திரமா அவங்க வீட்டுல விட்டுட்டு வாங்க." புஷ்பராஜ் கூறினார்.

தாம்சன் அவளுடன் நடக்கத் தொடங்கினான்.

புஷ்பராஜ் அவுட்ஹவுஸை நோக்கி நடந்தார்.

வாசல் கதவை நெருங்கும்போதே உள்ளே யாரோ பேசும் குரல் கேட்டது.

புஷ்பராஜ் தயங்காமல் அறைக்குள் நுழைந்தார்.

சுதீரும் மோகினியும் எதிரெதிரே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"யார் மோகினியா?" புஷ்பராஜ் கேட்டார்.

அவள் உடனே இருக்கையிலிருந்து எழுந்தாள்.

"எப்பம்மா வந்தே?"

"நேற்று வந்தேன்!"

"இந்த இடம் எப்படித் தெரிஞ்சது? நாங்க இங்கே இருக்கோம்னு எப்படித் தெரியும்?"



"ஜீ"ஃப்கிட்ட விசாரிச்சேன். அவர்தான் சொல்லித் தந்தார்" அவள் தலைமுடியை ஒதுக்கியபடி பேசினாள்.

"வேறொரு முக்கியமான விஷயத்தையும் சொல்லி அனுப்பினார். மிஸ்டர் சுதீர் உடனடியா அவரைச் சந்திக்கணுமாம்."

மோகினி, புஷ்பராஜு"டன் பணிபுரியும் சகதோழி

எத்தனையோ வழக்குகளில் அவள் அவருக்கு உதவி இருக்கிறாள். ஆபத்தான கட்டங்களில்கூட அவள் அவருடன் உறுதுணையாக இருந்திருக்கிறாள். அவர்களுக்கு இடையே இருந்த உறவு எப்படிப்பட்டதென்று இன்னும் அவர்களுக்கே விளங்கவில்லை.

"அப்படியானா நான் கிளம்பறேன். உங்களுக்கு இன்னொரு கம்பெனி கிடைச்சாச்சு. ஒருவேளை ராகவனே போய்ட்டாக்கூட உங்க சாப்பாட்டுக்குப் பிரச்சினை இல்லை. டாக்டர் மோகினி ஆச்சே உங்ககூட இருக்கிறது!" சுதீர் சொன்னார்.

டாக்டர் விஜயதேவ் என்கிற விஞ்ஞானியின் சகோதரி மகள் டாக்டர் மோகினி. புகழ்பெற்ற விஞ்ஞானியான டாக்டர் விஸ்வதேவையும், அவரது விஞ்ஞானக் கண்டுபிடிப்பையும் பயங்கரமான கூட்டம் ஒன்று ஒரு தடவை கடத்திச் சென்றது. அவரது ஃபார்முலா அவர்களுக்குப் புரியாததும் ஒருவகையில் நல்லதாகிப் போனது. அவர்களது சரியான இருப்பிடத்தைக் கண்டு பிடித்ததுடன், அந்தக் கூட்டத்தையும் கையும் களவுமாகப் பிடிப்பதில் ஈடுபட்ட புஷ்பராஜ் வழக்கம் போல் அதிலும் வெற்றி பெற்றார்.

சுதீர் அன்று மாலையிலேயே புறப்பட்டார்.

"ராகவா, நான் வர்றவரைக்கும் தூங்கக்கூடாது." புஷ்பராஜ் உடை மாற்றியபடி சொன்னார்.

"ஆமா, நீங்க எங்கே போறீங்க?" மோகினி கேட்டாள்.

"நான் மலையடிவாரம் வரைக்கும் போகவேண்டியிருக்கு. முடிஞ்சா நான் ஒரு மான்குட்டியை வேட்டையாடிட்டு வர்றேன்!" வேட்டைத் துப்பாக்கியைக் கையில் எடுத்தபடி சொன்னார்.

புஷ்பராஜ் அந்தக் குளக்கரைக்கு வந்தார். அவரும் கறுப்பு நிற உடை அணிந்திருந்தார். இருட்டில் அந்த நிறத்தில் எவரும் அவரைச் சுலபத்தில் அடையாளம் காணமுடியாதபடி இருந்தது.

அந்தக் குளத்தின் கரையில் பெரிய பாறையொன்றின் மறைவில் அவர் காத்திருந்தார்.

## 19

அவர். வாட்ச்சைப் பார்த்தார்.

எலெக்ட்ரானிக்ஸ் வாட்ச் மணி பன்னிரண்டு என்பதைத் தெளிவாகக் காட்டியது.

அவர் பார்வை ஜீனா குறிப்பிட்ட பாறைப் பிளவின் மீது பதிந்திருந்தது. கூரிருட்டு நிறைந்திருந்த வேளையில் அவர் பார்வையை அங்கும் இங்கும் திருப்பாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தார். அந்தத் திசையிலிருந்து ஏதாவது சத்தம் வருகிறதா என்று அவர் காதுகள் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தன.

மறுவிநாடி-

அந்தப் பிளவில் ஒரு வெளிச்சம் தெரிந்தது.

அது ஒரு சிகார் லைட்டின் வெளிச்சம்!

சற்று நேரத்தில் சிகார் லைட்டின் நெருப்பு ஒரு சிகரெட்டை பற்ற வைத்ததற்கு அடையாளமாக சிகரெட்டின் வட்டமான சிவப்புத் தணல் தெரிந்தது. அந்த வெளிச்சமே அவர் முயற்சியில் பாதியைக் குறைத்துவிட்டது போலிருந்தது. காரணம் அந்தத் தணல் எந்தத் திசையில் நகர்கிறது என்பதைக் கவனிப்பது சுலபமில்லையா? அந்த வெளிச்சம் பிளவிலிருந்து வெளியேறி கிழக்குப் புறமாக நடந்தது.

ஆகாயத்திலிந்த ஒரு மேகம் சட்டென்று இடம் பெயர்ந்ததால் இருளின் தன்மை சற்றுக் குறைந்தது. குளத்தின்



மேற்பரப்பில் அந்த நிழல் நகர்வதை அவர் கவனித்தார். நட்சத்திரங்களின் மங்கலான வெளிச்சம் அங்கு பரவியது.

இப்போது யாரோ ஒருவர் நடப்பது நன்றாகத் தெரிந்தது. கிழக்குத் திசையில் நகர்ந்த உருவம் குளத்தை வலம்வந்து புஷ்பராஜ் நின்றிருந்த இடத்தை அடைந்தது. அந்த உருவம் தன்னை நோக்கியே வருகிறது என்பது புஷ்பராஜுக்குப் புரிந்தது. அந்த உருவம் அவரை மிகவும் நெருங்கியது.

"அப்படியே நில்லுங்கள்!" அந்த உருவம் நெருக்கத்தில் வந்ததும் புஷ்பராஜ் கட்டளையிடுவது போன்ற குரலில் கூறினார். உடன் டார்ச் லைட்டையும் அதை நோக்கி எரியவிட்டார்.

உடல் முழுவதும் கறுப்பு உடையால் போர்த்தியிருக்கும் ஒரு மனிதன். தலையிலிருந்து தொங்கிய கறுப்புக் கம்பளியில் கண்களுக்கு அருகே மட்டும் இரண்டு துளைகள் தெரிந்தன.

இருப்பினும் ஆள் யாரென்று தெரியவில்லை.

"நீங்க யார்?" புஷ்பராஜ் துப்பாக்கியை அவருக்கு நன்கு தெரியுமாறு நீட்டியபடி கேட்டார்.

"நான்...நான்...நான் தேடிவந்த ஆள் இல்லை நீங்க. நீங்க எதுக்காக இங்கே வந்திருக்கீங்க?" அந்த உருவம் கேட்டது.

"நான் இங்கே கொஞ்சம் நிலம் வாங்கணும்னு விரும்புறேன். அதுக்காக இடம் பார்க்க வந்திருக்கேன்." புஷ்பராஜ் சொன்னார்.

"ஓகோ நான் இங்கே பாறைகளுக்கு நடுவில குடியிருக்கிறவன்." புகைத்துக்கொண்டிருந்த சிகரெட் துண்டை குளத்தின் பக்கம் வீசியெறிந்தபடி பதிலளித்தது அந்த உருவம்.

"எதுக்காக இங்கே குடியிருக்கீங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

"உங்க கேள்விக்கெல்லாம் நான் பதில் சொல்றேன். நாம இங்கே நின்னு பேசாம என்னோட குகைக்குப் போயிடலாமே?" அந்த உருவம் அழைத்தது.

தன்னை அதன் இருப்பிடத்துக்கு அழைப்பதில் ஏதோ வஞ்சகத் திட்டம் இருக்கும் என்றுகூட புஷ்பராஜ் முதலில் நினைத்தார். அப்படியே இருந்தாலும், இதைவிட இன்னும் எத்தனையோ மோசமான சந்தர்ப்பங்களில்கூட வெற்றிகரமாகச் செயல்பட்ட தான் இந்த வாய்ப்பை விட்டுவிடக்கூடாது என்று நினைத்தார். எனவே அந்த உருவத்தைப் பின்பற்றி நடக்கத் தொடங்கினார்.

முன்னால் சென்ற உருவம் எங்கெங்கு கால்களைப் பதித்ததோ, கவனமாக அதே பாதையில் அதே சுவட்டிலேயே பாதத்தைப் பதித்து நடந்தார் புஷ்பராஜ். அவர்கள் ஒரு குகையின் முகப்பை அடைந்தனர்.

"இங்கேதான் நான் தங்கியிருக்கேன். இதுக்குள்ளே நுழையும்போது தலைகுனிஞ்சு வரணும். நுழைவுவாசல் கொஞ்சம் குறுகலானது. உயரமும் கம்மி. உள்ளே போயிட்டா நல்லா விசாலமா இருக்கும். நான் இங்கே ரொம்பவும் சௌகரியமா இருக்கேன்" அந்த உருவம் உள்ளே நுழைந்தபடி சொன்னது.

புஷ்பராஜும் அந்த உருவத்தைப் பின்தொடர்ந்தார்.

குகைக்குள் எண்ணெய் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் அதற்குள் இருந்த பொருட்கள் ஓரளவு தெளிவாகத் தெரிந்தன.

ஒரு படுக்கை, ஒரு பெட்டி, ஒரு சூட்கேஸ், பிறகு சாப்பாட்டுக்கான பொருள்கள், ஒரு ஸ்டவ் போன்றவை ஒரு பகுதியில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"உங்களோட சமையல் எல்லாம் இதுக்குள்ளேயே தானா?" புஷ்பராஜ் கேட்டார்.

"ஆமாம்."

"சமைக்கிறதுக்கான பொருள்களை எப்படி வாங்குறீங்க?"

"அதை ஒரு தம்பி வாங்கிட்டு வந்து தருவான். ஆனால், இந்தக் கொடுக்கல்-வாங்கல் எல்லாம் வெளியில்-கொஞ்சத்



தூரத்துல நடக்கும். அந்தத் தம்பிக்கும் இந்த இடம் தெரியாது. ஆமாம்... நீங்க அந்த அவுட்ஹவுஸில்தானே தங்கியிருக்கீங்க?"

அவருக்கு அது எப்படித் தெரிந்ததென்று புஷ்பராஜ் வியப்படைந்தார். எனினும் வியப்பை வெளிக்காட்டாமல் இருந்தார்.

"நீங்க வந்த செய்தியும் எனக்குத் தெரியும். இந்த மலைச்சரிவில் நடக்கும் ஒவ்வொரு சம்பவத்தையும் நான் உடனுக்குடன் தெரிஞ்சுக்கிறேன்."

'இந்த மனிதன் சாதாரணமானவன் அல்ல' என்று புஷ்பராஜ் எண்ணிக்கொண்டார். தன்னைவிட அதிகமான தகவல்களைத் தெரிந்துகொள்ளும் இந்த மனிதன் எதற்காக இப்படி மறைந்து வாழ்கிறான் என்று அவருக்குப் புரியவில்லை.

"நீங்க எதுக்காக இந்த மாதிரி மறைஞ்சு வாழணும்?" புஷ்பராஜ் கேட்டார்.

"அதை மட்டும் கேட்காதீங்க. அதை நான் சொல்லிட்டா, அதுக்குப் பிறகு நீங்க இந்தப் பகுதியிலேயே இருக்கமாட்டீங்க. நான் இங்கே வந்து ஒரு வாரம் ஆகுது" அந்த மனிதர் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டார்.

அப்போதும் அந்த மனிதர் தனது கறுப்பு உடையை உடம்பிலிருந்து அகற்றவில்லை.

"இந்த மலைச்சரிவு ஆபத்து நிரம்பிய இடம்கிறது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும். இந்தக் குகைக்கு வெளியே ஏராளமான மரணங்கள் நடந்திருக்கு. அதெல்லாத்தையும் கேள்விப்பட்டிருக்கேன். இங்கே ஒரு பங்களா இருக்கே, அதுக்குச் சொந்தக்காரரா இருந்த ஸால்வின் துரை ரொம்பவும் மோசமான மனுஷனா இருந்தார். குரூரமா நடந்து கொள்றதே அவருக்குப் பொழுதுபோக்கா இருந்தது. அதற்காகப் பலர் பலியாடுகளா மாறவேண்டியிருந்தது. எத்தனையோ பெண்களை நாசப்படுத்தி, அழிச்சிருக்கார். நீங்க காத்திருந்த குளத்துல அவங்களோட உடம்பெல்லாம் மிதந்திருந்தது ஒரு காலத்துல..."

"இதெல்லாம் நீங்கள் கேள்விப்பட்ட செய்திகள் மட்டும்தானே?"

"கேள்விப்பட்ட செய்திகளா இருந்தாலும் அதெல்லாம் உண்மைன்னு எனக்குத் தெரியும்."

"நீங்க குறிப்பா இந்த இடத்தைத் தங்குறதுக்கத் தேர்ந்தெடுக்கக் காரணம்?"

"இதை மட்டும் கேட்காதீங்கன்னு ஆரம்பத்திலேயே சொல்லிட்டேன்."

அந்த மனிதனை வற்புறுத்த வேண்டாம் என்று புஷ்பராஜுக்குத் தோன்றியது. கேட்காமலேயேகூட தனக்கு ஓரளவு அவற்றைப் புரிந்துகொள்ள முடியும். இருப்பினும் அந்த மனிதனைச் சுற்றி ஏதோ ஒரு ரகசியம் இருக்கிறது என்று புரிந்தது.

தாம்சனை இந்த மனிதன் தாக்க முற்படுவதாகவும் புஷ்பராஜுக்குத் தோன்றியது.

'அந்தக் கோணத்தில் பார்த்தால் இந்த மனிதன் யாராக இருக்கவேண்டும்? ஒருவேளை தாம்சனைக் கொலை செய்துவிட்டு, அவனது சொத்துக்களைக் கைப்பற்ற நினைக்கிறாரோ? அந்தச் சொத்துக்களை அப்படியெல்லாம் கைப்பற்ற முடியாதே' என்றும் தோன்றியது.

"நாம எதிர்பாராம சந்திக்க நேர்ந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்." புஷ்பராஜ் சொன்னார்.

"எனக்கும் மகிழ்ச்சிதான். நாம மறுபடியும் சந்திப்போம். என்னை நீங்க எப்ப வேணும்னாலும் இங்கே வந்து சந்திக்கலாம். அதாவது, இங்கே வந்து ஒரு சத்தம் குடுத்தாப் போதும்... நான் வெளியே வருவேன். இந்த மலைச்சரிவில் ரெண்டு கிலோ மீட்டருக்குள்ள நீங்க வந்தா நான் தெரிஞ்சுக்க முடியும். உங்ககூட வேற யாராவது வந்தால் என்னை உங்களால் பார்க்க முடியாது. அதோடு நம்ம உறவு துண்டிக்கப்படும். நீங்க எப்போ தனியா வந்தாலும் நான் உங்களை வரவேற்கத் தயாரா இருக்கேன்" பேசியபடி அந்த மனிதர் எழுந்தார்.





எதுவும் சொல்லாமல் குகையிலிருந்து வெளியேறினார். ஆனால், சற்று நேரத்திலேயே திரும்பி வந்தார்.

"என்ன நடந்தது?" புஷ்பராஜ் கேட்டார்.

"யாரோ இந்தப் பக்கம் வர்றது மாதிரி தெரிஞ்சது."

"ஆளைப் பார்த்தீங்களா?"

"பார்த்தேன். ஆனா, நான் எதிர்பார்த்த ஆளில்லை."

"அப்ப வந்தவர் யார்?"

"பால்காரர்."

"அவரை உங்களுக்குத் தெரியுமா?"

"எனக்கு இங்கே இருக்கிற எல்லாரையும் தெரியும். ஆனா, என்னைத்தான் இங்கே இருக்கிற யாருக்கும் தெரியாது. அது என் பாதுகாப்புக்கு அவசியமும்கூட" அந்த மனிதர் லாகவமாகப் பேசினார்.

"உங்களைப் பார்ப்பேன்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கலை" புஷ்பராஜ் சொன்னார்.

"உங்களுக்கு என்னைத் தெரியுமா?" அந்த மனிதர் வியப்புடன் கேட்டார்.

"நீங்கதான்னு எனக்குத் தெரியாது. ஆனால், இங்கே யாரோ தங்கியிருக்கிறாங்கன்னு மட்டும் தெரியும்."

"எப்படித் தெரிஞ்சது?"

"நேத்து டேவிட்டின் மகள் ஜீனா அந்த இடத்துல யாரையோ பார்த்துப் பயந்து அலறினாள்!"

"உண்மைதான்."

"அவள் பயப்பட்டது உங்களைப் பார்த்துதான் இல்லையா?"

"ஆமாம்."

"அதுதான் இங்கே ஆள் யாரோ தங்கி இருக்கிறாங்கங்கிற செய்தியை எனக்குச் சொன்னது."

"நீங்க எதை எதிர்பார்த்து இங்கே வந்தீங்க?" வந்திருப்பவர் தனது நோக்கம் மற்றும் செயல்பாடுகளை ஆராய வந்திருப்பவராகத் தோன்றியதால் அந்த மனிதர் கேட்டார்.

தான் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளாவிட்டால், எதிரிலிருக்கும் மனிதர் தன்னைப் பற்றிய விவரங்களைச் சுலபத்தில் தெரிந்துகொள்வார் என்பதும் புஷ்பராஜுக்குத் தோன்றியது.

"நான் ஏற்கெனவே நோக்கத்தைச் சொல்லிட்டேன். ஒரு வகையில் உங்களை நான் பாராட்டறேன். ஆபத்து நிறைஞ்ச இந்த இடத்துல நீங்க தனியாத் தங்க வந்திருக்கிறதே உங்க தைரியத்தைக் காட்டுது. அதைப் பத்தித்தான் யோசிச்சிட்டிருக்கேன்."

"இந்த இடத்துக்கு யாரும் வரமாட்டாங்கன்னு எனக்குத் தெரியும். குறிப்பா ராத்திரி நேரத்துல இங்கே யார் வந்தாலும் நான் சுட்டுக் கொன்னுடுவேன். எனக்குச் சந்தேகம் தோணினால், அதில் எந்த மாற்றமும் கிடையாது. இந்த இடத்துக்கு முன்னால இறந்து போனவங்களோட பட்டியல்ல மேலும் ஒரு எண்ணிக்கை சேரும் அவ்வளவுதான்." அந்த மர்மமனிதர் எந்தவிதமான தயக்கமும் இன்றிப் பேசினார்.

"அப்ப நான் கிளம்புறேன். வேட்டைக்குப் போறதாச் சொல்லிட்டு வந்திருக்கேன். ஒரு சின்ன உயிரையாவது வேட்டையாடணும்னு நினைக்கிறேன்." புஷ்பராஜ் எழுந்தார்.

"உங்க விருப்பப்படியே செய்யுங்க." அவர் புஷ்பராஜைப் பின்தொடர்ந்தார்.

"குட்நைட்!" விடை கொடுத்தார்.

பதில் வாழ்த்துச் சொல்லிவிட்டு புஷ்பராஜ் குளக் கரையிலிருந்து நடந்து மறைந்தார்.

நேராக தான் தங்கியிருக்கும் அவுட்ஹவுஸுக்குப் போக வேண்டியதுதான் என்று நினைத்தார். ஸால்வின் துரையின்



பங்களாப் பகுதியைக் கடந்துதான் செல்லவேண்டியிருந்தது. அந்தப் பகுதியை நெருங்கியதும் ஒரு தடவை பங்களாவைப் பார்த்தார்.

பங்களாவில் வெளிச்சமில்லை.

ரங்கையன் தூங்கியிருப்பார் என்று தோன்றியது.

சட்டென்று அவர் நின்றார்.

மலைச்சரிவில், யாரோ நின்று கொண்டிருக்கிறார்கள்.

ஊன்றிப் பார்த்தார். சந்தேகமில்லாமல் அது தாம்சன்தான்!

## 20

'தாம்சன் இந்த நேரத்தில் அங்கு எதற்காக நின்று கொண்டிருக்கிறான்?' புஷ்பராஜ் தனக்குத்தானே கேட்டுக் கொண்டார்.

ஆபத்து நிறைந்திருக்கும் இந்தப் பகுதியில் எதற்காக இந்த நேரத்தில் தாம்சன் நின்று கொண்டிருக்கவேண்டும்? வீணாக ஆபத்தை ஏன் வரவழைக்க வேண்டும்? இருப்பினும் சற்று நேரம் தாம்சனைக் கவனிப்பது என்று தீர்மானித்தார்.

மணி ஒன்றுக்கு மேல் ஆகியிருந்தது.

அமைதி அந்தப் பகுதியை மூடியிருந்தது. ஆகாயத்திலிருந்து சன்னமாகப் பனிபொழிந்து கொண்டிருந்தது. மேற்குப் புறத்திலிருந்து பனிப்படலம் மேகத்தைப் போல் நகர்ந்து வருவதை புஷ்பராஜ் கவனித்தார். சற்று நேரத்துக்குள் அது அந்த மலைப் பிராந்தியத்தையே சூழ்ந்து கொள்ளும் என்று தோன்றியது. அப்படி ஏதாவது நிகழ்ந்தால் தாம்சனுக்கு ஆபத்து ஏற்பட்டால்கூட தன்னால் தெரிந்து கொள்ள முடியாது. தாம்சன் இன்னும் அங்கேயே நின்று கொண்டிருந்தான். எந்தவித அசைவுமற்று ஒரு கற்சிலை மாதிரி. புஷ்பராஜ், மேலும் சற்று நகர்ந்து தாம்சன் நன்றாகப் பார்வையில் படும்படி மறைவாக நின்றுகொண்டார்.

மணி ஒன்று இருபது.

நிமிடங்கள் விரைவாகக் கடந்து கொண்டிருந்தன.

நட்சத்திரங்களின் ஒளி மட்டும் அந்த மலையடிவாரத்தில் விழுந்து கொண்டிருந்தது. தெளிவற்ற அந்த மங்கலான வெளிச்சத்தில் யாரோ ஒருவர் நடந்து வருவது போல் புஷ்பராஜுக்குத் தோன்றியது. சற்றுத் தொலைவில் ஒரு புள்ளி மாதிரித் தெரிந்த அந்த உருவம் மெதுவாக நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த உருவம் தாம்சனை நோக்கி வருகிறது என்று புஷ்பராஜுக்குத் தோன்றியது. ஆனால், தாம்சன் அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. என்ன காரணத்தாலோ தாம்சனை ஆபத்து நெருங்கிக் கொண்டிருப்பதாக அவர் நினைத்தார்.

அந்த உருவம் ஏறத்தாழ பாதி வடிவம் தெரியத் தொடங்கிய போது புஷ்பராஜ் மறைந்திருந்த இடத்திலிருந்து அருகே வந்தார்.

அந்த உருவம் திரும்பி நின்றது.

தாம்சனின் கையில் ரிவால்வர் இருப்பதை புஷ்பராஜ் கவனித்தார்.

"யார்... நீங்கதானா?'' தாம்சன் ரிவால்வரை பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டான்.

"என்ன... இந்த நேரத்தில்?" தாம்சன் கேட்டான்.

"நான் வேட்டையாட வந்தேன். யாரோ இங்கே நின்னுட்டிருக்கிற மாதிரி தெரிஞ்சது. பக்கத்துல வந்த பிறகு நீங்கன்னு தெரிஞ்சது. நான் இந்தப் பக்கம் வந்தபோது எனக்கு முன்னால யாரோ நடந்து வர்ற மாதிரித் தெரிஞ்சது. அந்த மனிதனால உங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்துடுமோன்னு பயந்து இந்தப் பக்கமா ஓடிவந்தேன்." புஷ்பராஜ் பேசிக் கொண்டிருந்த போது அந்தப் பக்கமாக வந்த உருவம் திசைமாறி அகன்று விட்டிருந்தது.

"இந்த நேரத்தில் இங்கு வந்தது யாராக இருக்கும்?" புஷ்பராஜ் கேட்டார்.



"யாராவது வழிப்போக்கரா இருப்பாங்க. இந்த இடத்துக்கு வேற யார் வரப் போறாங்க?" தாம்சன் சொன்னான்.

"நீங்க சொன்ன மாதிரி யாராவது வழிப்போக்கனா இருந்தா, இவ்வளவு தூரம் வந்த பிறகு எதுக்காகத் திரும்பிப் போகணும்? அதுதான் எனக்குச் சந்தேகமா இருக்கு." புஷ்பராஜ் சொன்னார்.

"எப்படியோ வந்த உருவம்தான் போயிடுச்சே..." தாம்சன் பதிலளித்தான்.

"இந்த நேரத்துல நீங்க இப்படியெல்லாம் தனியா நிக்குறது நல்லதில்லை." புஷ்பராஜ் கூறினார்.

"நான் இப்பத்தான் வந்தேன். எதுக்கும் இருக்கட்டும்னு ரிவால்வர் எடுத்துட்டு வந்திருக்கேன். எச்சரிக்கையோட இருக்கிறேன்." தாம்சன் விளக்கினான்.

"நேரா பங்களாவுக்குத்தானே போறீங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

"உடனடியா போயிடணும். பனிமூட்டம் நெருங்கிட்டிருக்கு." தாம்சன் திரும்பி நடக்கத் தொடங்கினான்.

பங்களாவுக்குச் செல்லும் பாதையில் அவன் நடப்பதையே புஷ்பராஜ் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். பங்களாவை ஒட்டியிருந்த மரக்கூட்டத்தில் திரும்பி நடக்கத் தொடங்கினார். அங்கிருந்த ஒரு வளைவில் திரும்பி மேலும் சற்று நடந்தால் அவுட்ஹவுஸை அடைந்துவிடலாம். புஷ்பராஜ் அந்த வளைவில் திரும்பியதும் யாரோ முன்னால் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

"யாரது?'' புஷ்பராஜ் பாக்கெட்டில் கையைவிட்டுத் துப்பாக்கியை எடுத்து நீட்டியபடி கேட்டார்.

"நான்தான் ஜீனா!"

"ஜீனாவா! என்ன இந்த அகாலத்துல?"

"பங்களாவுக்குப் போயிட்டிருக்கேன்."

"பரவாயில்லையே நேத்து நீ யாரையோ பார்த்துப் பயந்ததை அதுக்குள்ள மறந்துட்டியா? அந்த மாதிரி சம்பவம் திரும்பவும் ஏற்படாதுன்னு யாரால சொல்ல முடியும்? ரொம்பவும் ஜாக்கிரதையா இருக்கிறது நல்லது." புஷ்பராஜ் கூறினார்.

"எனக்கு அந்த பயமெல்லாம் கிடையாது. நான் இந்தப் பாறைகளுக்கு நடுவில் மலைச்சரிவிலேயே வளர்ந்தவள். அதனால் பயப்பட வேண்டிய தேவை இல்லை. நீங்க எங்கே போயிட்டு வர்றீங்க?"

"தாம்சன் கிட்டப் பேசிட்டு வர்றேன்."

"அவர் எங்கே?"

"பங்களாவுக்குப் போயிட்டார்."

"நானும் அங்கேதான் போறேன்!"

"அந்த பங்களாவுக்குப் போகக்கூடவா பயமில்லை?"

"எதுக்கும் பயமில்லை! என்னை அங்கேயே ராத்திரி படுத்துக்கச் சொன்னால்கூட தனியா படுத்துப்பேன்."

"உடனேயே திரும்பி வந்து வந்துடுவீங்களா?"

"ஆமாம்."

"ராத்திரி நேரமில்லையா?"

"அதெல்லாம் போயிடுவேன்!"

அவள்பாட்டுக்கு நடக்கத் தொடங்கினாள்.

அவளது தைரியம் புஷ்பராஜுக்கு வியப்பை ஏற்படுத்தியது.

கொஞ்சம்கூட பயமே இல்லாமல் அவள் பங்களாவை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த புஷ்பராஜ், அவள் கண்பார்வையிலிருந்து மறைந்ததும் அவுட்ஹவுஸை நோக்கி நடந்தார்.

ராகவன் தூங்காமலிருந்தான். ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான்.



"இந்த ராத்திரியில் எங்கே சார் போயிட்டு வர்றீங்க?"

"சும்மா உலாத்தலாம்னுதான்!"

"இந்த நேரத்துல இந்த மலைச்சரிவுல உலாத்தறது அவ்வளவு நல்லதில்லை சார்." ராகவன் சொன்னான்.

"பயப்படுறதுக்கு என்ன இருக்கு?"

"இந்தப் பகுதியில் - பாறைகளுக்கு மத்தியில் ஜெயில் வேர்ந்து தப்பிச்சு வந்த யாரோ ஒளிஞ்சிருக்கிறதா பேசிக்கிறாங்க!"

"நிஜமாவா?"

"நான் கேள்விப்பட்டது அப்படித்தான்."

"ஜெயிலிலேருந்து தப்பிச்சவரா?"

"கொலைக் குற்றத்துக்குத் தண்டனை அடைஞ்சவராம்! ரெண்டு வருஷ தண்டனைக்குப் பிறகு ஜெயிலிலேர்ந்து தப்பிச்சுட்டாராம். ஆனால், அந்த நபர் எதுக்காக இங்கே வந்திருக்காருன்னு தெரியலை. ஒருவேளை இங்கேயும் யாரையாவது கொலை பண்றது அவரோட நோக்கமா இருக்கலாம். என் சந்தேகம் என்னன்னா..."

"சொல்லு... ஏன் தயங்குறே?"

"நான் சொல்றது சரியில்லை."

"சரியா, தவறாங்கிறது அப்புறம். முதல்ல உன் சந்தேகத்தைச் சொல்லு. எனக்கு அதன் மூலமா ஏதாவது ஒரு பிடி கிடைக்கலாம்."

"அது உங்ககிட்ட ரகசியமாப் பேச வேண்டியது."

"சொல்லு!"

"அந்த பங்களாவில் இருக்கிற சின்ன எஜமானைக் கொல்றதுக்காகத்தான் இருக்கணும்."

"எதுக்காக, தப்பிச்சு வந்த குற்றவாளி அவரைக் கொல்லணும்?"

"பால்காரர் அப்படித்தான் சொல்றார். சாதாரணமா அவர் சொல்ற விஷயம் தப்பா இருக்கிறதில்லை."

"அவ்வளவு தீர்க்கதரிசனம் நிறைஞ்சவரா?"

"அவர் சொன்னதெல்லாம் இதுவரைக்கும் தவறாம நடந்திருக்கு!"

"அப்படியானா இதுக்கு முன்னால நடந்த மரணங்களின் போது அவர் எதுவும் சொல்லலையா?"

"அவரேகூட அதையெல்லாம் செஞ்சிருக்கலாம்!"

"இதையெல்லாம் செய்யறதால அவருக்கு என்ன லாபம்?"

"எனக்கென்ன தெரியும்?"

"சரி, அதெல்லாம் போகட்டும். டேவிட்டைப் பத்தி உனக்கு ஏதாவது தெரியுமா?"

"தெரியும்."

"அவர் மகளைத் தெரியுமா?"

"அந்த அடங்காப்பிடாரிதானே?"

"ஓகோ... அந்தப் பொண்ணை உனக்குத் தெரியுமா?"

"தெரியாம என்ன? அவள் இந்தப் பக்கமெல்லாம் ராத்திரி-பகல்னு வித்தியாசம் இல்லாம சுத்தித் திரியிறாளே!"

"அந்தப் பொண்ணுக்கு தாம்சனை முன்னாடியே தெரியுமா?"

"தெரியும்னுதான் பால்காரர் சொல்றார்."

"அவருக்கு எப்படித் தெரியுமாம்?"

"பதினஞ்சு வருஷத்துக்கு முன்னால பெரிய முதலாளி சாகும்போது இந்தச் சின்ன முதலாளிக்குப் பத்து வயசு இருக்கும்னு சொன்னார். அப்பவே அவங்க ஒண்ணா விளையாடி வளர்ந்திருக்காங்க."



"சரி, அதெல்லாம் இருக்கட்டும். நான் ஒரு விஷயத்தைப் பத்திக் கேட்டா, உன்னால சரியான தகவல் தர முடியுமா?"

"கேளுங்க. முடிஞ்சா சொல்றேன்."

"அந்தக் குடும்பத்தைப் பத்தி ஏதாவது தெரியுமா?"

"எனக்கு அந்தக் குடும்பத்தோட ரகசியம் எதுவும் தெரியாது. பால்காரர்கிட்டக் கேட்டா சொல்வார்?"

மோகினி உறங்கிவிட்டிருந்தாள்.

இருப்பினும் அவள் அடிக்கடி திடுக்கிட்டு உடலை அசைத்துக் கொண்டிருந்தாள்.

புஷ்பராஜ் படுக்கையறைக்கு வந்தபோது அவள் பாதியடைந்த கண்களுடன் படுத்துக் கிடந்தாள். அவர், அவளை அழைத்தார். அவள் திடுக்கிட்டு எழுந்தாள்.

"என்ன ஆச்சு?" அவள் கனவிலிருந்து விழிப்பவளைப் போல் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள்.

"நீங்க போனதுக்கப்புறம் நான் ஒரு புத்தகத்தைப் படிச்சுட்டு அப்படியே கண்ணை மூடிட்டேன். சட்டென்று ஒரு சத்தம் கேட்டது. அந்த ஜன்னல் பக்கம் யாரோ நிக்கிற மாதிரி தெரிஞ்சது. உத்துப் பார்த்தா ஒரு கையோட நிழல் தெரிஞ்சது. கொஞ்ச நேரத்துல அது பெண்ணோட உருமா மாறிடுச்சு. ராகவனைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னதும், இங்க யாரோ ஒரு பொம்பளை தற்கொலை பண்ணிக்கிட்டதா சொன்னார். நான் அதையெல்லாம் நம்பலை. ஆனா, இங்கே நிழலான விஷயங்களோ, மர்மமான செயல்களோ நடப்பதாத் தோணுது. நான் அந்த விவசாயி வீட்டில் தங்கியிருந்தபோதும் இதே மாதிரி அனுபவங்கள் ஏற்பட்டிருக்கு. ஏற்கெனவே இந்தப் பகுதியில் ஏராளமானவங்க விபத்துல இறந்ததாச் சொன்னதும் அதுக்கு ஒரு காரணமா இருக்கலாம். மொத்தத்துல இந்தச் சூழ்நிலையே சரியில்லை!" மோகினி சொன்னாள்.

"அங்கேயும் அந்த நிழல் தெரிஞ்சதா?" புஷ்பராஜ் கேட்டார்.

"ஆமாம்... நான் இங்கே வந்துட்டதையும் அந்த நிழல் தெரிஞ்சு வெச்சிருக்கு போலிருக்கு!" அவள் சிரித்தபடி கூறினாள்.

சட்டென்று ராகவன் படுத்திருந்த அறையிலிருந்து ஓர் அலறல் கேட்டது.

## 21

அலறல் கேட்டதும் புஷ்பராஜ், ராகவன் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த அறையை நோக்கி ஓடினார். அதுவரை புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த ராகவன் தரையில் மல்லாந்து விழுந்து கிடந்தான்.

"கடவுளே!" என்றபடி அவள் ராகவனின் நாடியைப் பரிசோதித்தாள். அப்போதுதான் ராகவனின் சட்டை மார்புப் பகுதியில் கிழிந்திருந்தது தென்பட்டது. சட்டையை விலக்கிப் பார்த்தாள்.

மார்பிலிருந்து அப்போதும் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

ஐந்து கூர்மையான நகங்கள் மார்புப் பகுதியில் ஆழ்ந்து இறங்கியிருக்கும் அடையாளம் தெரிந்தது. ராகவனின் பற்கள் கிட்டித்துப் போயிருந்தன. மார்பின் மீது நிகழ்ந்த திடீர்த் தாக்குதலில் நிலைகுலைந்து போன ராகவன் பயத்தில் உயிரை விட்டிருக்க வேண்டுமென்று தோன்றியது. அந்த அறையின் கதவு திறந்து கிடந்தது. அது புழக்கடைப் பகுதிக்குச் செல்லும் வழி. அந்தக் கதவைத் திறந்து போட்டபடிதான் ராகவன் வாசித்துக் கொண்டிருந்தான். அந்த வழியாக யார் வந்திருப்பார்கள்?

"அந்த அடையாளம் எதனால ஏற்பட்டதுன்னு ஏதாவது தெரிஞ்சுக்க முடியுதா?" புஷ்பராஜ், மோகினியிடம் கேட்டார்.

அவள் தரையில் உட்கார்ந்துகொண்டு அவனின் காயத்தைப் பரிசோதித்தாள். அப்போதும் மார்புப் பகுதியிலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.



"லாபரெட்டரி டெஸ்ட்டுலதான் கண்டுபிடிக்க முடியும்னு தோணுது. பார்வைக்கு ஒரு புலி அடிச்சது மாதிரிதான். அகலமான இடைவெளிகளோடு நகங்களின் அடையாளம் தெரியுது. இப்படிப்பட்ட ஒரு புலியை நாம எங்கே போய்த் தேடுறது? இந்தப் பக்கத்தில காட்டு மிருகங்களோட நடமாட்டம் அதிகம்னு கேள்விப்பட்டிருக்கேன்." மோகினி சொன்னாள்.

"அந்தச் செய்தி என்னவோ உண்மைதான்!" புஷ்பராஜ் ஒப்புக்கொண்டார்.

"இந்தச் செய்தியை நாம எப்படி வேற யாருக்காவது தெரியப்படுத்துறது? அதுக்கு என்ன வழி?" புஷ்பராஜ் கேட்டவாறு யோசனையில் ஆழ்ந்தார்.

மணி இரண்டுக்குமேல் ஆகிவிட்டிருந்தது.

"ராகவன்..." புஷ்பராஜ், மோகினியின் கண்களைப் பார்த்தார்.

"எல்லாம் முடிஞ்சு போச்சு!" அவள் சொன்னாள்.

"மரணத்துக்கான உடனடிக் காரணம்?"

"அதை எப்படி இப்பவே சொல்ல முடியும்? பரிசோதனைகள் முடிஞ்ச பிறகுதான். இப்ப பரிசோதனை செய்யவும் இங்கே எதுவும் வாய்ப்பு இல்லையே? ராகவனோட சொந்தக்காரங்க யாராவது இருக்காங்களா?"

"அப்படி யாரும் இருக்கிறதா தெரியலை. பால்காரர்தான் ராகவனை இங்கே கொண்டுவந்து விட்டவர். அந்தப் பால்காரர் எங்கே தங்கியிருக்கார்னுகூடத் தெரியாதே! ராகவன் இங்கே வந்ததிலேர்ந்து நான் ரொம்பவும் பிஸியா இருந்ததால அதை எல்லாம் விசாரிக்க முடியலை."

"அப்படியானா விடியுற வரைக்கும் நாம காத்திருக்க வேண்டியதுதான், வேற வழி இல்லை!"

"அதைத்தான் செய்யணும். வேணும்னா இந்தத் தகவலை தாம்சன்கிட்டச் சொல்லலாம். ஒருவேளை அவர்கிட்டயிருந்து

ஏதாவது உதவி கிடைக்கலாம். தாம்சன் வீட்டில் வேலை செய்யுற ரங்கையா யாரையாவது கூட்டிட்டு வரலாம்" புஷ்பராஜ் சொன்னார்.

"அதையாவது செய்யுங்க!"

"அப்ப ஒன்னு பண்ணலாம். ராகவன் உடம்பு இங்கேயே கிடக்கட்டும். நாம அந்த பங்களாவரையிலும் போயிட்டு வந்துடலாம்" புஷ்பராஜ் சொன்னார்.

"நானும் வரணுமா?" மோகினி கேட்டாள்.

"வந்துதான் ஆகணும். மேற்கொண்டும் நீங்க இங்கே தனியா இருக்கிறது நல்லதில்லை. நம்மளைத் தாக்கறதுக்கு ஒரு வெள்ளோட்டமாகக்கூட இது இருக்கலாம்."

"அப்படீன்னா?"

"அதையெல்லாம் அப்புறமா விளக்குறேன்."

மோகினி அவசர அவசரமாக கறுப்பு ஓவர் கோட்டையும் தொப்பியையும் எடுத்து அணிந்துகொண்டாள். ராகவனின் உடல் கிடக்கும் அறையை உட்புறமாகத் தாழ்போட்டனர்.

கதவை வெளிப்புறமாகப் பூட்டிவிட்டு இருவரும் தாம்சனின் பங்களாவை நோக்கிப் புறப்பட்டனர்.

பங்களா அமைதியாக இருந்தது.

அங்கு விளக்கு எதுவும் எரிந்துகொண்டிருக்கவில்லை.

புஷ்பராஜ் கதவைத் தட்டினார்.

ரங்கையா கதவைத் திறந்தார்.

அவர் கையில் விளக்கு ஒன்று இருந்தது.

"தாம்சன் தூங்கிட்டாரா?"

"தூங்கியிருப்பார். உட்காருங்க கூப்பிடுறேன்."

அவர்கள் வரவேற்பு ஹாலில் அமர்ந்தனர். சற்று நேரத்தில் தாம்சன் இரவு உடையில் வந்தான்.



"என்னங்க இந்த அகாலத்துல?"

"விளக்கமாச் சொல்ல நேரமில்லை. ராகவனுக்கு ஒரு ஆபத்து!"

"ராகவன் யார்?" தாம்சன் கேட்டான்.

"எங்ககிட்ட வேலை செஞ்சவர். சட்டுன்னு மரணம் அடைஞ்சுட்டார்."

"எப்படி இறந்தார்?"

"விபத்து. அவருக்கு யாராவது சொந்தக்காரங்க இருக்காங்களான்னு தெரியலை. இருந்தாலும் அவங்களுக்கு எப்படித் தகவல் சொல்றதுன்னும் புரியலை. எங்களுக்கு இந்த ஊர்ல யாரையும் தெரியாதே!"

"ரங்கையா, உங்களுக்கு ராகவனோட சொந்தக் காரங்களைத் தெரியுமா?"

"பழக்கமில்லை. ஆனா, அவங்க கிழக்குப்புறச் சரிவில இருக்காங்கங்கிறது தெரியும். அவன் அப்பா இருக்கார்னு நினைக்கிறேன்."

"அப்படியே அந்தப் பால்காரர்கிட்டயும் தகவல் சொல்லிடுங்க!" புஷ்பராஜ் கூறினார்.

"அவரைக் கையோட கூட்டிட்டு வந்துடுறேன்."

"நேரா நாங்க தங்கியிருக்கிற அவுட் ஹவுஸுக்கு வந்துடுங்க!"

"அப்படீன்னா, நீங்க உடனே கிளம்புங்க ரங்கையா!" தாம்சன் கட்டளையிட்டான்.

ரங்கையா புறப்பட்டார்.

"உங்ககூட நானும் வர்றேன்! கொஞ்சம் பொறுங்க!" தாம்சன் வீட்டுக்குள் சென்று இரட்டைக்குழல் துப்பாக்கி ஒன்றை எடுத்து வந்தான்.

மூன்று பேரும் அவுட் ஹவுஸுக்குப் புறப்பட்டனர்.

புஷ்பராஜ் கதவைத் திறந்தார்.

"ராகவன் உடம்பு எங்கே இருக்கு?"

"அதோ அந்த அறையில!"

மூவரும் அந்த அறைக்கு வந்தனர்.

விளக்கு அப்போதும் எரிந்து கொண்டிருந்தது.

அந்த வெளிச்சத்தில் ராகவனின் உடலை அவர்கள் கவனித்தனர். நீலநிறத்துக்கு மாறியிருந்த உடம்பு இப்போது பார்க்கவே பயங்கரமாக இருந்தது.

மோகினி அந்த உடம்பிலிருந்து எதையாவது கண்டுபிடிக்க முடிகிறதா என்று மீண்டும் ஒரு தடவை முயற்சி செய்தாள்.

"நீங்க எப்போ இவரைக் கவனிச்சீங்க?" தாம்சன் கேட்டான்.

"இந்த அறையில இருந்து ஒரு அலறல் கேட்டது. உடனே ஓடிவந்து பார்த்தோம். நாங்க பார்க்கும்போதே இப்படித்தான் விழுந்து கிடந்தார். ஆனா, இப்பத்தான் உடம்போட நிறம் நீலமாகி இருக்கு!"

"அதே சம்பவம் தொடருது!" தாம்சன் தனக்குத் தானே சொல்லிக் கொள்வதுபோல் பேசினான்.

"நீங்க சொல்றது புரியலையே?"

"என் அப்பாவும், சித்தப்பாவும் இப்படித்தான் இறந்து போனாங்க!"

சற்று நேரத்துக்குள் பால்காரரும், ராகவனின் அப்பாவும் வந்து சேர்ந்தனர். ராகவனின் அப்பா எதுவும் பேசாமல் ஒரு மூலையில் ஒதுங்கி நின்று மகனின் உடம்பைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சுமார் ஒரு மணி நேரம் அங்கிருந்த தாம்சன் விடை பெற்றுப் புறப்பட்டான்.

"மத்ததெல்லாம் பொழுது விடிஞ்ச பிறகு பார்த்துக்கலாம்" பால்காரர் சொன்னார்.



விடிந்த பிறகு பத்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. மூன்று கிலோ மீட்டருக்கு முன்பு வரை ஜீப்பில் வந்தவர்கள், அதன் பிறகு ஜீப்பை விட்டுவிட்டு நடந்து வந்தனர்.

புஷ்பராஜ், இன்ஸ்பெக்டரிடம் தனிமையில் என்னவோ பேசினார்.

முதல்கட்ட விசாரணையை முடித்துக்கொண்டு, அரசாங்க ஆஸ்பத்திரிக்கு போஸ்ட்மார்ட்டத்துக்காக உடல் எடுத்துச் செல்லப்பட்டது.

ராகவனின் மரணம் அந்தப் பகுதியில் மேலும் பீதியின் நிழலைப் பரப்பியது.

ஸால்வின் துரை மீண்டும் ஊர்மக்களின் பேச்சுக்கு நடுவே வந்தார். அவரது ஆவிதான் ராகவனை அறைந்திருக்கிறது என்று தீர்ப்புக் கூறினார்கள். இருட்டிய பிறகு வீட்டை விட்டு வெளியேற ஆட்கள் பயந்தனர்.

இரண்டு நாட்கள் கடந்தன.

இரவு பதினோரு மணிக்கு மேல் ஆகியிருந்தது.

யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டு புஷ்பராஜ், வாசித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மடக்கி வைத்துவிட்டு எழுந்தார். மோகினி போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

புஷ்பராஜ் கதவைத் திறந்தார்.

டேவிட்!

டேவிட் மிகவும் குழப்பத்திலிருந்தார் என்று தோன்றியது.

"என்னங்க மிஸ்டர் டேவிட்?" புஷ்பராஜ் கேட்டார்.

"ஜீனாவைக் காணோம்." அவர் குரல் மிகவும் பதற்றத்துடன் வெளிவந்தது.

"உண்மையாவா? எப்போதிலிருந்து காணோம்?"

"அரைமணி நேரத்துக்கு முன்னால்கூட எதையோ வாசிச்சுட்டிருந்தாள். நான் பார்த்தேன். இப்ப யதேச்சையா எட்டிப் பார்த்தபோது அறைக்குள்ள அவளைக் காணோம்."

"ராத்திரியில் உங்க பொண்ணு எங்கேயாவது வாக்கிங் போற வழக்கம் உண்டா?" புஷ்பராஜ் கேட்டார்.

அவர் அப்படிக் கேட்டதற்கும் ஒரு காரணமிருந்தது. அன்றொரு நாள் புஷ்பராஜ் ஜீனாவை நள்ளிரவில் பார்த்து இருக்கிறார். அவள் தாம்சனின் வீட்டுக்குப் போனாளே! அப்படிப் பார்த்தால் அவளைக் காணோம் என்று சொல்வதில் அர்த்தமி ல்லை.

"விசாரிக்கலாம்... கவலைப்படாதிங்க!"

"எங்கே போய் விசாரிக்கிறது?"

"அந்த பங்களா வரைக்கும் போகலாம். தாம்சன்கிட்ட விஷயத்தைச் சொல்லலாம். உங்க மகளைக் கண்டுபிடிக்க அவரும் உதவலாம்."

"அதுவும் நல்லதுதான். நான் அப்படி யோசிச்சுப் பார்க்கவே இல்லை. வாங்க சீக்கிரமா போகலாம்."

"மோகினி இங்கே தனியா இருக்கணுமே!" புஷ்பராஜ் கேட்டார்.

"பரவாயில்லை. நான் இருந்துக்கிறேன். என்கிட்டயும் ரிவால்வர் இருக்கு. பயப்படாமல் போயிட்டு வாங்க!"

"அப்படீன்னா கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுக்கங்க! நான் வந்து கூப்பிட்டா மட்டும் கதவைத் திறந்தால் போதும்."

புஷ்பராஜூம், டேவிட்டும் தாம்சனின் பங்களாவை நோக்கி நடந்தனர்.



அந்தப் பிராந்தியம் முழுவதையும் பனிப்படலம் மூடியிருந்தது.

டார்ச்லைட்டின் வெளிச்சம் அதிக தூரம் பாய்ந்து செல்ல முடியாமல் திணறியது. இருவரும் எச்சரிக்கையுடன் நடந்து பங்களாவை அடைந்தனர்.

தாம்சனால் அந்தச் செய்தியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

"உடனேயே நாம போய்த் தேடலாம்." தாம்சன் தனது துப்பாக்கியை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

மூவரும் பங்களாவிலிருந்து வெளியேறினர்.

பாறைகளைத் தாண்டி நடந்தனர். தாம்சனின் கையிலிருந்த விளக்கு வெளிச்சம் பாதையைத் தெளிவாக்கிக் கொண்டிருந்தது.

அங்கிருக்கும் குளக் கரையை அடைவதுதான் புஷ்பராஜின் திட்டம்!

## 22

"குளத்தங்கரையில் தேடுவோம் என்று சொல்லக் காரணம் என்ன மிஸ்டர் தாம்சன்?" நடந்து கொண்டிருக்கும்போது வழியில் புஷ்பராஜ் கேட்டார்.

"காரணம் இருக்கிறது." தாம்சன் சொன்னான்: "அந்தக் குளத்தங்கரையின் அருகிலிருக்கும் பாறைகளுக்கு நடுவில்தானே அன்று ஜீனா பயந்து அலறினாள். எனவே, அந்த இடத்தில் யாரோ ஒரு மனிதன் மறைந்து வாழ்கிறான் என்று எனக்குத் தோன்றுகிறது. அப்படியொரு சந்தேகத்தை ரங்கையாவும் கிளப்பி விட்டுவிட்டார். ஜெயிலிலிருந்து தப்பித்த ஒரு குற்றவாளி இந்தப் பகுதியில் இருப்பதாகவும் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு குற்றவாளி அவன் என்பதும் ஊர்ஜிதமான செய்தி. அப்படிப்பட்ட ஒரு குற்றவாளி எந்தவிதமான தவறையும் செய்யத் தயங்கமாட்டார். ஒருவேளை அந்த நபர் ஜீனாவைக் கடத்திக் கொண்டும் போயிருக்கலாம். இப்படி எதையும் அவன் செய்யலேன்னாக்கூட அவனைக் கண்டுபிடிச்சே ஆகணும்! ராகவனோட கொலைக்கும் அவன் தான் காரணம்னு என் மனசுக்குப் படுது. ராகவனின் மரணத்துக்குப் பிறகுதான் இது நடந்திருக்குது. என் சந்தேகம் என்னன்னா, இங்கே இதுவரைக்கும் நடந்திருக்கிற கொலைகளுக்குக்கூட அவன்தான் காரணமா இருந்திருக்கணும். நீங்க எனக்குத் துணையாயிருந்தா நாம அவனை நிச்சயம் கண்டுபிடிச்சுடலாம்னு தோணுது." தாம்சன் பேசினான்.

அவர்கள் பாறைகளைத் தாண்டி நடந்து கொண்டிருந்தனர்.

அதே நேரம் புஷ்பராஜுக்கு அந்த மனிதரைப் பிடிக்க முடியுமென்ற நம்பிக்கை கொஞ்சம்கூட இல்லை. தான் அந்த மனிதரைச் சந்தித்தபோது அவர் தன்னிடம் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன. அவர் தங்கியிருக்கும் பகுதியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்துக்குள் யார் வந்தாலும் கண்டு பிடித்துவிடுவேன் என்று சொல்லியிருந்ததும் நினைவில் தெளிந்தது. அப்படியானால் அதற்குத் தேவையான ஏற்பாட்டை அவர் செய்து வைத்திருக்க வேண்டும்.

எனவே, இந்தப் பயணம் கொஞ்சம்கூடப் பலனளிக்காது என்று புஷ்பராஜுக்கு உறுதியாகத் தெரிந்தது.

அவர்கள் குளக்கரையை அடைந்தனர்.

தாம்சனிடமிருந்த விளக்கு பாறையின் மீது வலுவான வெளிச்சத்தைப் பாய்ச்சியது. அங்கிருந்த சாதாரணப் பொருட்கள் கூட மிகவும் துல்லியமாகத் தெரிந்தன.



"அதோ..." புஷ்பராஜ் சட்டென்று கையை அந்தப் பக்கமாகச் சுட்டிக் காட்டினார்.

தண்ணீரில் ஒற்றைச் செருப்பு மிதந்து கொண்டிருப்பதை அவர்கள் பார்த்தனர். அதுவும் கரையை ஒட்டி காற்றில் அலைந்த படி கிடந்தது.

புஷ்பராஜ் குளக்கரையில் குத்துக்காலிட்டு அமர்ந்து, அந்தச் செருப்பை வெளியே எடுத்தார்.

அது பெண்கள் அணியும் செருப்பின் ஜதையிலிருந்து விடுபட்ட ஒன்று.

சிவப்பு நிறமான அந்தச் செருப்பைப் பார்த்ததும் தாம்சன் திடுக்கிட்டான்.

"இந்தச் செருப்பு இது..." தாம்சனால் வார்த்தையை முடிக்க முடியவில்லை.

"என்ன சொல்ல வர்றீங்க மிஸ்டர் தாம்சன்?" புஷ்பராஜ் கேட்டார்.

"இது ஜீனாவோட செருப்புதான்... ஐயோ அவளுக்கு என்ன ஆச்சோ?"

புஷ்பராஜ் அதற்குப் பதில் சொல்லவில்லை. குற்றவாளி என்று மற்றவர்கள் குறிப்பிடும், மறைந்து வாழும் அந்த மனிதனின் மூடப்பட்ட முகம் புஷ்பராஜின் மனத்துள் உயர்ந்து வந்தது. அந்த மனிதன்தான் ஜீனாவைக் கடத்திக் கொண்டு போயிருக்க வேண்டும். அந்த மனிதன் இப்படிப்பட்ட செயலைச் செய்வார் என்று புஷ்பராஜ் எதிர்பார்க்கவில்லை. உண்மையிலேயே அந்த மனிதன் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு தண்டனையடைந்த ஒரு மனிதனாக இருந்தால், அந்த மனிதனைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய விஷயமே அல்ல. தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகக் கூட அவளைக் கடத்திக்கொண்டு

போயிருக்கலாம். ஒருவேளை அந்த மனிதனின் ஆசைக்கு ஜீனா இணங்க மறுத்தால், அவளைக் கொலை செய்துகூட குளத்துக்குள் போட்டுவிட்டிருக்கலாம். அப்படியென்றால் அதைப் பற்றி வீணாகப் பேசுவதோ, யோசிப்பதோ பயனில்லாத விஷயம், அவள் இறந்துதான் போயிருக்க வேண்டும்!

"அந்த மனிதன் இங்கே எங்காவதுதான் தங்கியிருக்க வேண்டும். அவன் எப்ப என் கண்ணில் தட்டுப்பட்டாலும், இந்தக் குளத்துலதான் அவன் கடைசித் தூக்கம் தூங்கணும். என்ன நடந்தாலும் சரி, அவன் வர்றவரைக்கும் நான் இங்கேயே காத்திருக்கிறதுன்னு தீர்மானிச்சிருக்கேன். போக விரும்புறவங்க போகலாம்!" தாம்சன் பிடிவாதத்துடன் பேசினான்.

"இவ்வளவு தூரம் அந்த மர்ம மனிதரைப் பத்திப் பேசின உங்களுக்கு அந்த மனிதனால ஆபத்து ஏதாவது ஏற்பட்டால்?" புஷ்பராஜ் கேட்டார்.

"அதைப் பத்தி நான் கவலைப்படலை. இங்கே எங்கேயாவது நான் ஒளிஞ்சிருக்கப் போறேன். எப்படியும் அந்த மனுஷனை நான் சந்திச்சே ஆகணும்!" தாம்சனின் குரல் உறுதியாக ஒலித்தது.

தாம்சனை அந்தப் பிடிவாதத்திலிருந்து தளர்த்துவது சாமானியமான காரியமாகத் தோன்றவில்லை. எனவே, புஷ்பராஜ் அங்கிருந்து புறப்படத் தீர்மானித்தார். அதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. மோகினி அவுட் ஹவுஸில் தனியாக இருக்கிறாள். அவள் எவ்வளவுதான் தைரியசாலியாக இருந்தாலும் அங்கு தனியாக விட்டுவைப்பது ஆபத்தானது. தாங்கள் விழித்திருக்கும் வேளையில்தான் ராகவன் மரணமடைய நேர்ந்தது என்பதும் நினைவுக்கு வந்தது.

எனவே, மோகினிக்கு ஏதாவது நேரிடலாம். முடிந்த வரை சீக்கிரம் அந்த இடத்துக்குத் திரும்புவதுதான் நல்லது. புஷ்பராஜ் உடனடியாக விடைபெற்று நடக்கத் தொடங்கினார். நல்ல



வேளையாக டார்ச்லைட் கையில் இருந்தது. இல்லாவிட்டால் அந்தப் பாதையில் நடந்து வருவது மிகவும் சிரமமாக இருந்திருக்கும்.

புஷ்பராஜ் அவுட் ஹவுஸை அடைந்தார்.

மோகினியை அழைத்தார்.

அவள் கதவைத் திறந்தாள்.

"நான் போன பிறகு குறிப்பிட்டுச் சொல்ற மாதிரி ஏதாவது நடந்ததா?" அவர் கேட்டார்.

"எந்தச் சம்பவமும் நடக்கலை!" மோகினி பதிலளித்தாள்.

புஷ்பராஜ் வாட்ச்சைப் பார்த்தார். மணி இரண்டுக்கு மேல் ஆகியிருந்தது.

சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது: "மோகினி, நாம இங்கே உட்கார்ந்து நேரம் போக்குறதுல அர்த்தமில்லை."

"என்ன பண்ணலாம்னு சொல்றீங்க?"

"ஒரு இடம் வரைக்கும் போயிட்டு வரலாம்."

"இந்த நேரத்திலயா?"

"இப்பவேதான்?"

"எந்த இடம்?"

"விவரமெல்லாம் பிற்பாடு..." புஷ்பராஜ் சொன்னார்.

அவுட்ஹவுஸுக்குள் விளக்கை அணைக்காமல் விட்டு வைத்தனர்.

"விளக்கை அணைக்க வேண்டாமா?"

"எரியட்டும்... வெளியில இருந்து பார்க்கிறவங்களுக்கு உள்ளே ஆளுங்க இருக்கிற மாதிரித் தெரியட்டும். நேரம் கடத்தாம உடனடியாகக் கிளம்புங்க" புஷ்பராஜ் அவசரப் படுத்தினார்.

அவர்கள் வெளியேறினர்.

இருவரும் நடக்கத் தொடங்கினர்.

அவள் நீண்ட கறுப்பு கோட் அணிந்திருந்தாள். தலையில் தொப்பியும் அணிந்திருந்ததால் சட்டென்று அடையாளம் கண்டுபிடிப்பது சுலபமல்ல.

"இந்த இடத்துக்கா வந்திருக்கோம்?" அவள் கேட்டாள்.

"இதுக்கு முன்னால இங்கே வந்திருக்கிங்களா?"

"வந்ததில்லை. இதுதான் முதல் தடவை!"

புஷ்பராஜ் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார்.

வரவேற்பு அறையைக் கடந்து வலதுபுறமிருந்த அறைக்குள் நுழைந்தார். முற்றிலும் ஒரு புதிய இடத்துக்கு வந்துவிட்டது போலிருந்தது அவருக்கு. ஓர் அலமாரி அந்த அறைக்குள் இருந்தது. மற்றோர் இரும்பு பீரோவும் இருந்தது. அதன் அருகில் கிடந்த மேஜையைத் ரெதிறந்தார். அதற்குள் ஒரு சிறிய 'பேக்' இருந்தது. பேகைத் திறந்தார். அதில் கடிதங்களைத் தவிர வேறு எதுவும் இல்லை. எல்லாம் வெளிநாட்டிலிருந்து வந்த கடிதங்கள். பென்டார்ச்லைட்டைப் பயன்படுத்தி ஒவ்வொரு கடிதத்தையும் பரிசோதித்தார். ஃபிராங்களின் என்பவரால் அந்தக் கடிதங்கள் எழுதப்பட்டிருந்தன. கையெழுத்தில் மட்டுமே அந்தப் பெயர் இருந்தது.

"கிளம்பலாமா மோகினி?" புஷ்பராஜ் கேட்டார்.



"இதுக்காகத்தான் இவ்வளவு தூரம் வந்தோமா?"

"ஆமாம்... இந்த மர்மத்தைத் தெரிஞ்சுக்கத்தான் இங்கே வந்தோம்."

மற்றோர் அறைக்குள் நுழைந்தார்.

இருள் நிறைந்த அந்த அறையிலிருந்து ஏதோ முனகல் சத்தம் கேட்பது போலிருந்தது. புஷ்பராஜ் டார்ச்லைட்டை எரியவிட்டார்.

அங்கிருந்த நாற்காலியில் ஒரு காட்சி தென்பட்டது.

"பரவாயில்லையே!" புஷ்பராஜ் சொன்னார்.

"என்ன .இதெல்லாம்?" மோகினி கேட்டாள்.

"எல்லாத்தையும் விவரமா சொல்றேன். நான் இப்ப எதைச் சொன்னாலும் யாரும் நம்பப்போறதில்லை. ஏன்னா, இதுக்குப் பின்னணியில இருக்கிற எதுவும் உங்களுக்குத் தெரியாது. ஒரு பயங்கரமான மர்மத்தோட சுருள் அவிழப்போகுது வாங்க..."

புஷ்பராஜ், மோகினியை அழைத்தார்.

அவர்கள் வேறொரு பாதை வழியாக அவுட் ஹவுஸ"க்கு வந்து சேர்ந்தனர்.

"இந்தக் கடிதங்கள் அவ்வளவு முக்கியமானதா என்ன?" கடிதங்களைப் பார்த்த மோகினி கேட்டாள்.

"இப்படியொரு ஆதாரம் என் கைக்குக் கிடைக்குமென்று கனவில்கூட நினைத்ததில்லை. இதை வெச்சுக்கிட்டுத்தான் நாம மேற்கொண்டு விசாரணையை ஆரம்பிக்கணும்!"

"இதெல்லாம் அங்கே இருக்கும்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"ஒரு யூகம்தான். நல்லவேளையா என் யூகம் தவறாப் போகலை" புஷ்பராஜ் ஒவ்வொரு கடிதத்தையும் திரும்பத் திரும்பச் சோதனை செய்தார்.

பொழுது விடிந்தது.

புஷ்பராஜ் தாம்சனைத் தேடிப் போனார்.

அங்கு ஜீனாவின் தந்தையும் இருந்தார்.

"ஜீனாவைப் பத்தி ஏதாவது தகவல் தெரிஞ்சதா?" புஷ்பராஜ் அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

"சந்தேகப்பட்ட இடங்களுக்கெல்லாம் ஆளுங்களை அனுப்பியிருக்கோம். இதுவரைக்கும் எந்தத் தகவலும் கிடைக்கலை. மேற்கொண்டு என்ன பண்றதுன்னு தெரியலை."

அப்போது ரங்கையா ஓடிவந்தார்.

"எங்கெல்லாமோ தேடியும் ஒண்ணும் தெரியலை தம்பி. ஆனா, குளத்துக்குப் பக்கத்துல கிட்டயிருந்து பாப்பா போட்டிருந்த இன்னொரு செருப்பும் கிடைச்சிருக்கு" ரங்கையா ரிப்பன் ஒன்றையும் ஜதையின் மற்றொரு செருப்பையும் கீழே வைத்தார்.

சந்தேகமில்லாமல் அது நேற்றுக் கிடைத்த செருப்பின் ஜோடிதான்!

"அந்த ரிப்பனும் அவளோடதுதான்!" டேவிட் சொன்னார்.

"அப்படியானால் சந்தேகமே வேண்டாம். நான் சொன்ன அந்தக் குற்றவாளிதான் காரணம். அவனைப் பிடிக்க என்ன வழி?" தாம்சன், ரங்கையாவைப் பார்த்தான்.

"குளத்துக்குள்ளே தேட ஏற்பாடு செய்யலாமா?" ரங்கையா கேட்டார்.



"அதுவும் நல்ல யோசனைதான். ஆனா, நாம செய்யறது வெளியில யாருக்கும் தெரியாம இருக்கிறது நல்லது. ஏன்னா, இதனால நாம தேடுற குற்றவாளிகூட உஷாராகிறதுக்கு வாய்ப்பிருக்கு. அதனால நம்மள்ல யாராவது ஒருத்தரே அதைச் செஞ்சா நல்லது. வேற யாராவது, ஏதாவது கேட்டால் ஜீனா கிடைச்சுட்டான்னு சொல்லி வையுங்க!" தாம்சன் கூறினான்.

புஷ்பராஜுக்கும் இந்த யோசனை பிடித்திருந்தது. "அப்படியே செய்யலாம்!" என்று ஒப்புக்கொண்டார்.

எல்லோரும் குளக்கரையை நோக்கி நடந்தனர்.

"குளத்துக்குள்ளே இறங்குறது யார்?" தாம்சன் கேட்டான்.

"நானே இறங்குறேன்" டேவிட் தாமாக முன்வந்தார்.

அவர் பெண்ணைக் கண்டுபிடிப்பதில் அவரைவிட வேறு யாருக்கு அவ்வளவு அக்கறையிருக்க முடியும்?

"வேண்டாம். தண்ணி ரொம்பவும் சில்லுன்னு இருக்கும். இந்த வயசுல நீங்க தண்ணியில இறங்க வேணாம். ரங்கையாவே இறங்கட்டும்" தாம்சன் சொன்னான்.

ரங்கையா உடைகளைக் களைந்து வைத்தார். உள்ளுடை மட்டும் தரித்துக் குளத்துள் இறங்கினார்.

சற்று நேரத்தில் தலையை உயர்த்தி மேற்புறம் வந்த ரங்கையா சொன்னார்: "என்னவோ தட்டுப்படுது."

அதே நேரம்-

குகைவாசலில் அந்த மர்ம மனிதன் நின்று கொண்டிருந்தான்.

37862

## 23

சந்தேகம் விலகாதவராக ரங்கையா மறுபடியும் தண்ணீரில் மூழ்கினார்.

ஒரு தடவை தலையை உயர்த்தி ரங்கையா மேலெழும்பிய போது தாம்சன் கேட்டான்:

"என்ன ரங்கையா மேல இழுக்க முடியலையா?"

"என்னமோ இருக்கிற மாதிரி தெரியுது. ஆனால், தொட முடியலை!"

"என்னதான் கிடக்கு?" புஷ்பராஜ் கேட்டார்.

"எதுக்கும் இன்னொரு தடவை பார்த்துட்டு வந்துடுறேன்" ரங்கையா தலைமுடியை ஒதுக்கிவிட்டு மறுபடி மூழ்கினார். சற்று நேரத்துக்கு ரங்கையா வெளிவரவேயில்லை. அதன் பின் மேலெழும்பிய ரங்கையா, எதையோ இழுத்துவந்து கரையில் போட்டார்.

"இதை எடுக்கவா இவ்வளவு கஷ்டப்பட்டீங்க?" தாம்சன் கேட்டான்.

அது ஒரு பொம்மை. பெண் உருவ பொம்மை.

அழகாகத் தயாரிக்கப்பட்ட பொம்மையும்கூட.

'இதில் ஏதோ மர்மம் இருக்கிறது!' புஷ்பராஜ் நினைத்தார்.

தாம்சன் அந்த உருவத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்.



'அப்படியானால் ஜீனா எங்கே?' எல்லோரது கேள்வியும் அதுவாகத்தான் இருந்தது. பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

'இது யாரோ வேண்டுமென்றே நடத்தியிருக்கும் நாடகம். இதன் பின்னணியில் வேறு ஏதோ நோக்கம் இருக்கவேண்டும். ஜீனாவின் செருப்புகள் முதலில் ஒவ்வொன்றாகக் குளத்திலிருந்து கிடைக்கிறது. பிறகு ஒரு பெண்ணின் பொம்மை. எனவே, இது யாரோ திட்டமிட்டு நடத்திய நாடகம் என்பதில் சந்தேகமே இல்லை!'

"ஜீனாவுக்கு ஏதோ ஆகியிருக்குது!" தாம்சன் கவலையுடன் சொன்னான்.

"முதல்ல அவள் எங்கேன்னு தெரியாம நாமளா இப்படிப் பேசுறதுல அர்த்தமில்லை!" டேவிட் சொன்னார்.

"உண்மைதான்... முதல்ல அவளைக் கண்டுபிடிக்கணும். நடந்திருக்கிறதையெல்லாம் பார்த்தா அவளுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கும்னு தோணுது!"

தற்காலிகமாக அந்த இடத்தின் பரிசோதனையை முடித்துக் கொண்டு எல்லோரும் அங்கிருந்து கிளம்பினர்.

டேவிட் யாரிடமும் எதுவும் பேசாமல் அவர் பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தார். மற்றவர்களது யோசனைக்கோ, ஆறுதலுக்கோ அவர் செவிசாய்ப்பவராகத் தெரியவில்லை. ஆனால், அவர் முகத்தில் கடுமையான துயரம் தெரிந்தது.

"ஒருவேளை இதுக்கெல்லாம் காரணம் நான்தான்னு அவர் நெனைக்கிறாரோ என்னவோ?" தாம்சன் முகத்தைத் துடைத்தபடி பேசினான்.

"உங்க மேல குற்றம்சாட்ட அப்படி என்ன நடந்திருக்கு?" புஷ்பராஜ் கேட்டார்.

"காரணம் இருக்கு. அவள் வீட்டிலேருந்து புறப்படுறதே என்னைப் பார்க்கிறதுக்காகத்தான். அப்படி வரும் போது அவளுக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டிருக்கும்னு நெனைக்கலாம். இந்த நிலைமையில என்ன செய்யறதுன்னு எனக்கு ஒண்ணும் புரியலை." தாம்சன் கலங்கியபடி பேசினான்.

புஷ்பராஜ், அவனைத் தேற்றி பங்களாவுக்கு அழைத்து வந்தார்.

பங்களாவை நெருங்கும்போது கதவு திறந்து கிடந்தது. வீட்டுக்குள் நுழைந்த தாம்சன், வரவேற்பு ஹாலைத் தாண்டி, படுக்கையறைக்கு வந்தான். அங்கு எதையோ தேடியவன் மற்றோர் அறைக்குப் போனான். அங்கிருந்த அலமாரிகளையெல்லாம் திறந்து பார்த்தான். அதில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததை எல்லாம் இழுத்துக் கீழே போட்டான். பிறகு வியர்த்துக் களைத்தவனாக வெளியே வந்தான்.

"ஏன் என்னவோ மாதிரி இருக்கீங்க? என்ன ஆச்சு சொல்லுங்க தாம்சன்!" புஷ்பராஜ் கேட்டார்.

"முக்கியமான தஸ்தாவேஜுங்க காணாமல் போயிருக்குது. நாம இங்கேருந்து கிளம்புன பிறகு யாரோ வீட்டுக்குள்ளே நுழைஞ்சு அதையெல்லாம் கிளப்பிட்டுப் போயிருக்காங்க. மொத்தச் சொத்துகளுக்கான டாக்குமெண்ட்டுகள், ஆதாரங்கள் எல்லாம் காணாமல் போயிடுச்சு!" தாம்சன் குழப்பத்திலிருந்து விலகாதவனாகப் பதிலளித்தான்.

தாம்சனிடம் என்ன பதில் சொல்வதென்று அவருக்குத் தெரியவில்லை. உண்மையில் இதன் பின்னணி மிகவும் விசித்திரமாகத் தெரிந்தது. முதலில் ஜீனாவைக் காணவில்லை.



அவளைத் தேடிப் போகும்போது, முக்கியமான தஸ்தாவேஜுகள் காணாமல் போகின்றன. எல்லாம் திட்டமிட்டு மேற் கொள்ளப் பட்டவை போலவே தெரிந்தன. இப்படியெல்லாம் செய்யக் கூடியவர் யார்? இப்படிச் செய்பவருக்கு இதில் என்ன லாபம்?

"அப்ப நான் கிளம்பட்டுமா?" புஷ்பராஜ் கேட்டார்.

"நீங்களும் கிளம்புறீங்களா?"

"வேற என்ன பண்றது?"

"சரி புறப்படுங்க... நீங்க இதுக்கு மேல என்ன செய்ய முடியும்? இதுவரைக்கும் எனக்கு உதவினதுக்கு நான் ரொம்பவும் நன்றிக் கடன்பட்டிருக்கேன். கிட்டத்தட்ட இப்ப நான் எல்லாத்தையுமே இழந்துட்ட மாதிரி. ஜீனாவும் போயிட்டாள். நான் ரொம்பவும் பத்திரமா வெச்சிருந்த ஃபார்முலாவும் காணாமல் போயிடுச்சு. ஃபார்முலாங்கிறது, மண்ணிலேருந்து சுலபமாத் தங்கத்தைப் பிரிச்சு எடுக்கிறதைப் பத்தினது."

"அதுக்கு ஏன் கவலைப்படுறீங்க? அதுதான் உங்களுத் தெரியுமே?" புஷ்பராஜ் கேட்டார்.

"எனக்குத் தெரியும்தான். இருந்தாலும் அந்த ரகசியம் வேறொருத்தர் கைக்குக் கிடைச்சுட்டா என்ன ஆகும்னு யோசிச்சுப் பாருங்க. இங்கே இருக்கிற ரெண்டாயிரம் ஏக்கர்ல எங்கே என்ன நடக்குதுன்னு எப்படித் தெரிஞ்சுக்க முடியும்? அது சாத்தியமே இல்லை. எனக்குத் தெரிஞ்சு இந்த மண்ணுல ஏராளமான தங்கம் இருக்கு. அதுக்காக நான் போட்டு வெச்சிருந்த திட்டம் மொத்தமும் காணாமல் போச்சே... அதனாலதான் பயப்படுறேன்!" தாம்சன் பேசினான்.

"கவலைப்படாதீங்க. நாம சீக்கிரமா இதுக்கெல்லாம் ஒரு பரிகாரம் பண்ணலாம்." புஷ்பராஜ் ஆறுதல் சொன்னார்.

"அந்த மர்ம மனுஷனைக் கண்டுபிடிக்கணும். அவன்தான் இதையெல்லாம் செஞ்சிருப்பான். நீங்க பார்த்துட்டே இருங்க.

இன்னிக்கு ராத்திரியில அவன் என்னோட துப்பாக்கிக்கு இரையாகப்போறான். நீங்க புறப்படுங்க... நான் அவனைக் கவனிச்சுக்கிறேன். இதுவரைக்கும் அவனால இந்தக் குடும்பத்துக்கு ஏற்பட்ட எல்லாக் கஷ்டங்களுக்கும் இன்னியோட ஒரு முடிவு பிறக்கட்டும்." தாம்சன் ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டவன் போலப் பேசினான்.

புஷ்பராஜ் அங்கிருந்து கிளம்பினார்.

"ஜீனாவைப் பற்றி ஏதாவது தகவல் தெரிஞ்சதா?" வீட்டுக்குள் நுழைந்ததும் மோகினி கேட்டாள்.

"எதுவும் தெரியலை. குளத்துல தேடும்போது, ஒரு பொம்மை கிடைச்சது. அதுக்கு முன்னால ரெண்டு தவணையில அவளோட ரெண்டு செருப்பு கிடைச்சது!"

"யார் இப்படி செஞ்சிருப்பாங்க?"

"யாருக்குத் தெரியும்? ஆனா, அதைக் கண்டுபிடிக்க வேண்டியதுதானே நம்ம வேலை? கண்டுபிடிக்காமலா போகப் போறோம்?" புஷ்பராஜ் சிரித்தபடி கேட்டார்.

"இது சிக்கல்கள் நிறைஞ்ச ஒரு கேஸாத் தோணுதே!" மோகினி கூறினாள்.

"அதுக்காக நாம இதிலேர்ந்து பின்வாங்க முடியுமா மோகினி?"

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது டேவிட் அங்கு வந்தார். அவர் மிகவும் சோர்வாகக் காணப்பட்டார்.

"என்னங்க மிஸ்டர் டேவிட்... ஏதாவது தகவல் உண்டா?" புஷ்பராஜ் கேட்டார்.



"என் மகளைப் பற்றி எங்கேயெல்லாமோ விசாரிச்சேன். உருப்படியா எதுவும் தெரியலை!" அவர் குரல் மிகவும் துயரத்துடனிருந்தது.

"அவள் எங்கே இருப்பான்னு உங்களால் ஏதாவது யூகம் செய்ய முடியுதா!" புஷ்பராஜ் கொக்கி போட்டார்.

"இப்போ என்னால எதையும் தெளிவாச் சொல்லவோ, யோசிக்கவோ முடியலை. நான், அவள் தாம்சன்கூட அந்த பங்களாவில்தான் இருப்பான்னு ரொம்ப நம்பிக்கையோட இருந்தேன்."

"தாம்சன் வீட்டுல அவ இருக்கணும்னு நீங்க நினைச்சதுக்குக் காரணம் ஏதாவது உண்டா?"

"ரெண்டுபேரும் ஒருத்தரை ஒருத்தர் அந்த அளவுக்கு விரும்புறவங்க. அதனாலதான்."

"உங்களுக்கு எப்படி அது அவ்வளவு உறுதியாத் தெரியும்? ரெண்டு பேரும் இதைப் பத்தி உங்ககிட்ட ஏதாவது பேசியிருக்காங்களா?"

"சொல்லலை. நானா யூகம் பண்ணினேன். ரெண்டு பேரும் சின்ன வயசுலேர்ந்தே ஒண்ணா வளர்றவங்க."

"அப்படியானால் நீங்க தாம்சன் மேல சந்தேகப்பட வாய்ப்பே இல்லை."

"தாம்சன் மேல எனக்குச் சந்தேகம்னு நான் சொல்லலையே? நான் சொல்ல வர்றது என்னன்னா, அவள் தாம்சனைத் தேடிப் போகும்போது ஏதாவது ஆபத்துல சிக்கிட்டாளோங்கிறதுதான்."

"நீங்க சொல்ற மாதிரியும் நடக்க வாய்ப்பு இருக்கு. இந்தச் சூழ்நிலையில நீங்க வேற யாரையாவது சந்தேகப்படுறீங்களா?"

"ஒரே ஒருத்தனைத்தான்... அந்தக் கொலைகாரப்பாவி!"

"யாரது?"

"ஒரு தடவை அந்தக் குளத்துகிட்ட அவள் யாரையோ பார்த்துப் பயந்ததா சொல்லியிருந்தாள். அவன்தான் என் மகளைக் கடத்திட்டுப் போயிருக்கணும். அவனை எங்கேன்னு தேடிக் கண்டுபிடிக்கிறது? அவன் கொலைகாரன் வேற, கொள்ளைக்காரன் கிட்டக்கூட நாம நேரடியா மோதலாம். ஒரு கொலைகாரன்கிட்ட மோத முடியுமா? அவன் எதைச் செய்யவும் தயங்கமாட்டானே?"

"அவனைக் கண்டுபிடிக்க ஏதாவது திட்டம் வெச்சிருக்கீங்களா?"

"அதெல்லாம் அப்புறம். முதல்ல என் மகளைக் கண்டுபிடிக்கணும். அவள் கிடைக்கலேன்னா, நான் உயிர் வாழறதுல அர்த்தமில்லை!"

இடறிய குரலில் டேவிட் பேசினார்.

"கவலைப்படாதீங்க. நாம அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டாம். நிதானமா யோசிச்சு என்ன பண்ணமுடியும்னு பார்க்கலாம். இந்த விஷயத்துல நான் முழுக்க முழுக்க உங்களுக்கு உதவத் தயாரா இருக்கேன் மிஸ்டர் டேவிட்!" புஷ்பராஜ் அவருக்கு ஆறுதல் கூறினார்.

டேவிட் விடைபெற்றுப் புறப்பட்டார்.

"உங்க அடுத்த திட்டம்?" டேவிட் அங்கிருந்து போன பிறகு மோகினி கேட்டாள்.

"இன்னிக்கு ராத்திரி ஒரு சின்ன வேலை இருக்கு. அதுக்குப் பிறகுதான் மத்ததைத் தீர்மானிக்கணும்!" புஷ்பராஜ் சொன்னார்.

மோகினி அன்றைய சமையலைக் கவனித்துக் கொண்டாள்.



"உங்களுக்கு ரொம்பவும் தொல்லை குடுத்திட்டேனோ?" புஷ்பராஜ், மோகினியிடம் கேட்டார்.

"இதைவிட எவ்வளவோ பெரிய கஷ்டங்களையெல்லாம் பார்த்தாச்சு. அதனால இதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டாவே தெரியலை" மோகினி சிரித்தபடி மறுத்தாள்.

புஷ்பராஜ் சற்று நேரம் ஓய்வெடுக்க விரும்பினார். கட்டிலில் படுத்துக் கண்களை மூடினார்.

இரவு மணி பத்து.

சாப்பாட்டை முடித்துவிட்டு மோகினி புத்தகம் ஒன்றைப் வாசித்துக்கொண்டிருந்தாள். டிடெக்டிவ் மார்க்ஸின் துப்புத் துலக்கிய வழக்கு ஒன்றைப் பற்றிய புத்தகம் அது.

மார்க்ஸின், சர்காடோ கடல் பகுதியில் 'ஆக்டோபஸின்' உருவமுள்ள கப்பலில் பயணம் செய்துகொண்டிருந்தார்.

ஆக்டோபஸ் என்ற வார்த்தையைப் படித்ததும் அவளுக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. மார்க்ஸின் அந்தக் கப்பலை வடிவமைத்ததுகூட ஒரு நோக்கத்துடன்தான். சர்காடோ கடல் பகுதியில் ஆக்டோபஸ்கள் நிறைய இருப்பதாக அவர் கேள்விப் பட்டிருந்தார். அதனால் கடல்வழியே பதுங்கியிருக்கும் விரோதிகள் சுலபத்தில் இந்தக் கப்பலைக் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், இவற்றுடன் தொடர்புள்ள கதைகளை எழுதியிருக்கிற, விஞ்ஞானத்துடன் தொடர்பில்லாத சில எழுத்தாளர்கள் துப்பறியும் நாவல் அரங்கில் விபசாரம் புரிவதை நினைக்கும்போது மோகினி அருவருப்பு அடைவாள்.

துப்பறியும் நாவல், க்ரைம் நாவல் போன்றவற்றின் பொருள் புரியாமல் நாவல் எழுதி அந்தத் துறையையே மோசமாக்கும் சிலரைப் பற்றியும் ஏனோ அப்போது அவள் நினைவு கூர்ந்தாள்.

"நான் உடனே திரும்பி வந்துடுறேன்" புஷ்பராஜ் உடையை மாற்றிக்கொண்டு கிளம்பினார்.

"எங்கேன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" மோகினி கேட்டாள்.

"இந்தத் தடவை அவனை நான் கையும் களவுமா பிடிச்சடுவேன்!"

"அந்தக் குளத்தங்கரைக்குத்தான் போறீங்களா?"

"ஆமாம்!"

அதே நேரம்-

யாரோ வாசல் கதவை பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது.

## 24

புஷ்பராஜ் கதவைத் திறந்தார்.

எதிரே ஜீனா நின்றுகொண்டிருந்தாள்.

அவள் ஏகத்துக்கு பயந்து போனவள் போல் தென்படடாள்.

"யாரு, ஜீனாவா? வாம்மா? ஆமாம் இவ்வளவு நேரமும் எங்கே போயிருந்த?" புஷ்பராஜ் கேட்டார்.

"எப்பிடியோ தப்பிச்சுட்டேன்" அவள் பெருமூச்சுவிட்டபடி பேசினாள்.

"முதல்ல உட்கார். அப்புறமா நிதானமாச் சொல். பதற்றப் படாதே!"

யாரோ அவளைத் துரத்திக்கொண்டு வருவதைப் போல இருந்தன அவளது நடவடிக்கைகள். சோபாவில் உட்கார்ந்தாள்.



"முதல்ல தண்ணி குடி. பதற்றத்தைத் தணிச்சுக்க... அப்புறம் பேசலாம்."

"அதெல்லாம் தேவையில்லை. நான் எதைச் சொல்றதுன்னு புரியலை. எப்பிடியோ இங்கே வந்து சேர்ந்துட்டேன்."

"என்ன நடந்தது?"

"என்ன நடந்ததுன்னு எனக்கு ஒண்ணும் புரியலை. நான் படுத்துத் தூங்கிட்டிருந்தேன். திடும்னு ஏதோ சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழிச்சேன். கறுப்பா ஒரு உருவம் என் முன்னால் நின்னுட்டிருந்தது. அவ்வளவுதான்... நான் மயக்கமாயிட்டேன். கண் விழிச்சபோது குளக்கரையில இருந்தேன்."

"உன்னை யாரும்மா அங்கே கொண்டு போனது?"

"எனக்கு அதெல்லாம் தெரியலை!"

"சரி, நீ இங்கேயே படுத்து ரெஸ்ட் எடும்மா. மோகினி யார் வந்து கூப்பிட்டாலும் இவளை அனுப்பாதீங்க. நான் உடனேயே திரும்பி வர்றேன்." புஷ்பராஜ் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

நேராக பங்களாவை நோக்கி நடந்தார். வரவேற்பு ஹாலில் தாம்சனும் டேவிட்டும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"என்ன சார் திடீர்னு... இந்த நேரத்துல?" தாம்சன் கேட்டான்.

"உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். ஜீனா கிடைச்சுட்டாள்."

"நிஜமாவா சொல்றீங்க? அவளுக்கு எதுவும் ஆகலையே? நம்ப முடியலை?" தாம்சன் இன்னும் திகைப்பிலிருந்து விடுபடாதவனாகக் கேட்டான்.

"பயப்படுறதுக்கு ஒண்ணுமில்லை. நல்லாத்தான் இருக்கா." புஷ்பராஜ் பதிலளித்தார்.

"அப்பமன்னா அவன் தோல்வியடைஞ்சுட்டான் இல்லையா?" தாம்சன்.

"யார்?"

"அந்தக் கொலைகாரன்தான்!"

"ஆமாம். அவனால அவளை ஒண்ணும் பண்ண முடியலை. அதுக்குள்ள நான், அவளை அவன் கிட்டயிருந்து விடுவிச்சுட்டேன்."

"நீங்களா காப்பாத்துனீங்க?" இம்முறை டேவிட் கேட்டார்.

"ஆமாம். நான்தான் அவளைக் காப்பாத்தினேன்."

"உங்களோட இந்த உதவிக்கு நான் எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை. நாங்க இவ்வளவு நேரமும் என்ன பண்றதுன்னு தெரியாமக் குழம்பிக்கிடந்தோம். இனிமேல் அவளை உயிரோட பார்க்க முடியாதுன்னு நெனைச்சுதான் பேசிட்டிருக்கோம். இது வரைக்கும் நடந்திருக்கிற சம்பவங்களை வெச்சுப் பார்த்தா அப்படித்தான் நடந்திருக்கணும்னு நினைச்சோம். நல்ல நேரத்துல கடவுள் மாதிரி நீங்க அவளைக் காப்பாத்திட்டீங்க."

"இதையெல்லாம் யார் செஞ்சிருப்பாங்கன்னு நெனைக்கிறீங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

"உறுதியா எதையும் சொல்ல முடியலேன்னாலும், அந்தக் கொலைகாரப் பாவிதான் இப்பிடிச் செஞ்சிருப்பான்கிறது என் சந்தேகம்!"



"யார்னு சொல்லுங்க!"

"அந்தக் கொலைகாரப்பாவிதான்!"

"அந்த மனுஷனை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்?"

"எப்படிப் பழக்கம்?"

"அவன் தலைமறைவா இருக்கிறவன்னு கேள்விப் பட்டிருக்கேன்."

"உண்மைதான்!"

"அவனைக் கண்டுபிடிக்கத் திட்டம் போட்டிருந்தோம். இன்னிக்கு ராத்திரி நாங்க எப்படியும் அவனைக் கண்டு பிடிச்சுடுவோம்." டேவிட் சொன்னார்.

"சரி, உங்க திட்டப்படியே நடக்கட்டும். நான் எப்பவும் உங்களுக்கு உதவத் தயாரா இருக்கேன்." புஷ்பராஜ் உறுதி அளித்தார்.

அங்கிருந்து வெளியேறிய புஷ்பராஜ் அவுட்ஹவுஸை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

அந்தப் பகுதி முழுவதும் இருள் பரவியிருந்தது. ஒற்றையடிப் பாதையில் நடந்து கொண்டிருந்தார். அவுட்ஹவுஸை அடைய அவருக்கு இன்னும் இருநூறு மீட்டர்தான் இருந்தது.

"நில் அப்படியே!" பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

ஆஜானுபாகுவான ஒரு மனிதன் பின்னால் நின்று கொண்டிருந்தான். அசையாமலிருந்தான் - ஒரு கற்சிலை மாதிரி.

அவனிடம் ஆயுதங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நீண்ட கறுப்புக் கோட்டும் தொப்பியும் அணிந்திருந்தான்.

"நீங்க யார்?" புஷ்பராஜ் கேட்டார்.

"நான் யார்னு உங்களுக்கே தெரியுமே. நாம எத்தனையோ தடவை சந்திச்சுப் பேசியிருக்கோம். அதுவும் பல வடிவத்தில். அந்த பங்களாவில என்னை நீங்க பார்த்திருக்கீங்க! நீங்க என் பாதையில குறுக்கிடக் கூடாதுன்னு நான் உங்களை எச்சரிக்கை பண்ணியிருக்கேன். ஆனால், நீங்க அதையெல்லாம் காதில போட்டுக்காம எனக்குத் தொல்லை குடுத்திட்டே இருக்கீங்க. நான் எல்லாத்தையும் இதுவரைக்கும் மன்னிச்சிருக்கேன். இப்பத்தான் எனக்கு உங்களை முழுமையாகப் புரிஞ்சது. நீங்க ஒரு துப்பறிவாளர். ஆனா, ஒரு விஷயம் சொல்றேன். எந்த ஒரு மனுஷனும் என்னை ஒண்ணும் பண்ண முடியாது. எனக்கு அந்த அளவுக்குச் சக்தி இருக்கு. வேணும்னா அதை உங்களுக்கு நிரூபிச்சுக் காட்டறேன். நீங்க தயாரா?" அந்த மர்ம உருவம் பேசியது.

புஷ்பராஜ் தெளிவற்ற அந்த உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த உருவத்தின் முகத்தை புஷ்பராஜினால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

"இன்னிக்கு... நீங்க உங்க குடியிருப்புக்குத் திரும்பிப் போக மாட்டீங்க!"

"அப்படியா சொல்றீங்க?" புஷ்பராஜ் பதறாமல் கேட்டார்.

"நான்..." அந்த உருவம் புஷ்பராஜை நோக்கி நடந்து வந்தது.



சட்டென்று புஷ்பராஜ் தனது பாக்கெட்டிலிருந்து ரிவால்வரைக் கையில் எடுத்தார்.

"ரிவால்வரா எடுக்குறீங்க?" அந்த உருவம் கேலிக்குரலில் கேட்டது.

"ஆமாம்... குதிரையை இழுத்தால் இதுக்குள்ளேயிருந்து புல்லட் சீறிப்பாயவும் செய்யும்!"

"பரிசோதனை பண்ணிப் பாருங்களேன்." அந்த உருவம் பயமில்லாமல் பேசியது.

அதைக் கேட்ட புஷ்பராஜுக்குச் சிரிப்புதான் வந்தது. ரிவால்வரைக் கையில் பிடித்தபடி அவர் நிதானமாக முன்னேறினார்.

அடுத்த விநாடியில்-

அந்த உருவத்தின் இடது கால் உயருவதை புஷ்பராஜ் கவனித்தார்.

சட்டென்று விலகி ஸ்ட்ரிக்கரை இழுக்காமல் விட்டார்.

அந்த உருவம் குப்புற விழுந்தது. அதே நிமிடத்தில் புஷ்பராஜின் இடதுகால் அந்த உருவத்தின் முதுகில் அழுத்தமாகப் பதிந்தது. அந்த உருவம் அதைச் சற்றும் எதிர் பார்க்கவில்லையென்று தெரிந்தது.

"ம்...எழுந்திருங்கள்!" புஷ்பராஜ் கட்டளையிடும் குரலில் கூறினார்.

"அசையாதே!" சட்டென்று பின்புறத்திலிருந்து மற்றொரு குரல் கேட்டது.

புஷ்பராஜ் காலை எடுத்தபடி திரும்பிப் பார்த்தார்.

ரிவால்வரைக் குறி வைத்தபடி மற்றொரு மனிதன் பின்னால் நின்று கொண்டிருந்தான்.

அந்தச் சூழ்நிலையில் புஷ்பராஜால் அதற்குக் கீழ்ப் படிவதைத் தவிர வேறு வழியில்லை.

விழுந்து கிடந்த உருவம் எழுந்தது.

புஷ்பராஜ் அசைவற்று நின்று கொண்டிருக்கும்போது அந்த இரண்டு உருவங்களும் விரைவாக நடந்து மறைந்தன.

அவர்கள் கண்ணிலிருந்து மறைந்த அதே நேரம், மோகினி மற்றும் ஜீனாவின் ஞாபகம் அவருள் எழுந்தது. புஷ்பராஜ் அவுட் ஹவுஸை நோக்கி ஓடினார். நல்லவேளையாக அவர்களுக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்பட்டிருக்கவில்லை.

மோகினி கதவைத் திறந்தாள்.

"ஏன், என்னமோ மாதிரி இருக்கீங்க?"மோகினி அவர் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

"ஒண்ணுமில்லை. நாம ரொம்பவும் எச்சரிக்கையா இருக்கணும். சூழ்நிலை சரியில்லை."

மறுநாள் மதியம் இரண்டு மணியாகி இருக்கும்.

புஷ்பராஜும் மோகினியும் வராந்தாவில் உட்கார்ந்திருந்தனர். முன்பின் தெரியாத மனிதர் ஒருவர் அவுட் ஹவுஸை நோக்கி நடந்து வந்தார்.

அவருக்கு சுமார் முப்பது அல்லது அதற்குக் குறைவான வயதுதான் இருக்கும். நன்றாக உடை உடுத்தியிருந்தார். ஜீனா காலையிலேயே தனது வீட்டுக்குப் போயிருந்தாள்.



"நீங்கதான் இங்கே தங்கியிருக்கிறவங்களா?" வந்தவர் கேட்டார்.

"ஆமாம். உட்காருங்க!" புஷ்பராஜ் மற்றொரு நாற்காலியைச் சுட்டிக் காட்டினார்.

"நீங்க எங்கேருந்து வர்றீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" புஷ்பராஜ் கேட்டார்.

"பக்கத்துலதான் குடியிருக்கிறேன்."

"என்ன வேணும் உங்களுக்கு?"

"ஒரு முக்கியமான விஷயத்துக்காக வந்திருக்கேன். ஜீனாங்கிற பொண்ணு இங்கே இருக்காளே, அவளைப் பார்க்கணும்னு வந்திருக்கேன்."

"ஜீனா காலையிலேயே போயாச்சே!"

"எங்கே போனாள்?"

"அவங்க வீட்டுக்குத்தான்!"

"ஓகோ!"வந்தவர் அமைதியடைந்தார்.

தனது பாக்கெட்டிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்து, லைட்டரின் உதவியால் பற்ற வைத்துக்கொண்டார்.

சிகரெட்டைப் பற்ற வைத்த பிறகு தனியாக ஒரு தடவை லைட்டரை எரியவிட்டு அதன் பிறகு லைட்டரை பாக்கெட்டில் போட்டுக் கொண்டார்.

அதைப் பார்த்ததும் புஷ்பராஜின் நெற்றி ஒரு தடவை சுளிவடைந்து.

இதே போன்றதொரு காட்சியை இதற்கு முன்பு எங்கோ பார்த்திருப்பதாக அவருக்குத் தோன்றியது.

அது எந்த இடம்?

யார் லைட்டரை இப்படி எரியவிட்டது?

யார் தனக்கு முன் சிகரெட் பிடித்தவர்?

"நான் யாருன்னு உங்களுக்குத் தெரியுமா?" வந்தவர் கேட்டார்.

"ஞாபகம் வரலையே?" புஷ்பராஜ் ஒப்புக்கொண்டார்.

"இல்லை...உங்களுக்கு நிச்சயமா நான் யாருன்னு தெரியும்!" வந்தவரின் குரல் மிகவும் திடமாக ஒலித்தது.

புஷ்பராஜ் தீவிரமான யோசனையில் ஆழ்ந்தார்.

அவரின் மூளையிலிருந்த ஒவ்வொரு அணுவும் துடிப்பாகச் செயல்பட்டது.

"நீங்கள்... நீங்கள்... இப்போது ஞாபகம் வந்துவிட்டது நீங்கள் யாரென்று. உங்கள் பெயர் ஃபிராங்ளின். அந்தப் பேரிலதான் உங்களை மத்தவங்களுக்குத் தெரியும். ஆனால், அது உங்க உண்மையான பேர் இல்லை!" புஷ்பராஜ் சிரித்தபடி கூறினார்.

## 25

அவர் புஷ்பராஜின் முகத்தை ஊன்றிக் கவனித்தார்

"அப்போ என் உண்மையான பெயர் உங்களுக்குத் தெரிஞ்சா சொல்லுங்களேன்."



"அதை நான் இப்போ சொல்லப் போறதில்லை. சந்தர்ப்பம் வரும்போது சொல்வேன்."

"இப்ப நான் என்ன செய்யணும்?"

"எனக்கு ஓரளவு எல்லா உண்மைகளும் தெரியும். நான் உங்களைக் கண்டிப்பா காப்பாத்துவேன். அதை மட்டும் ஞாபகம் வெச்சுக்கங்க!"

வந்தவர் நன்றியுடன் தலையாட்டிக் கொண்டார்.

"நான்..." ஃபிராங்களின் தயக்கத்துடன் கேட்டார்.

"நீங்க உங்க பழைய இருப்பிடமான குகைக்கே போங்கள்." புஷ்பராஜ் சொன்னார்.

"மறுபடியுமா?"

"தற்காலிமாகத்தான். என்னை நம்புங்கள் மிஸ்டர் ஃபிராங்க்ளின்." புஷ்பராஜ் கூறினார்.

ஃபிராங்க்ளின் வேறு எதுவும் பேசாமல் அங்கிருந்து வெளியேறினார்.

இரவு மணி பத்து.

புஷ்பராஜ் அவுட் ஹவுஸிலிருந்து வெளியேறினார். நேராக டேவிட்டின் வீட்டுக்கு வந்தார். தூரத்திலிருந்து பார்த்தபோதே வீட்டில் வெளிச்சம் தெரிந்தது. எனவே, சட்டென்று வீட்டை ஒட்டி வளர்ந்திருந்த சைப்ரஸ் மரத்தின் பின்னால் மறைந்து கொண்டார்.

டேவிட்டின் வீட்டுக்குள் யாரெல்லாமோ பேசிக் கொள்ளும் சத்தம் கேட்டது. புஷ்பராஜ் நின்ற இடத்திலிருந்து அசையாமல் காத்திருந்தார்.

மணி பதினொன்றாகியது.

அந்த வீட்டின் முன்கதவு திறக்கப்பட்டது.

கதவின் இடைவெளி வழியாக நாடா போல் வெளிச்சம் கசிந்தது.

சட்டென்று அந்த வெளிச்சத்தை ஏதோ ஒன்று நகர்ந்து மறைத்தது.

ஒரு மனிதன் வெளியே வந்தான்.

புஷ்பராஜ் நின்றிருந்த மரத்தைக் கடந்து நேராக நடந்தான் அந்த மனிதன்.

நிமிடங்கள் கடந்தன.

மீண்டும் அந்தக் கட்டடத்திலிருந்து ஒரு மனிதன் வெளியே வந்தான். முதலில் போன மனிதனைத் தொடர்ந்து பின்னால் வந்த உருவம் பாய்ந்தோடியது. புஷ்பராஜ் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

மேற்குப்புற மலையிலிருந்து பனிப்படலம் நகர்ந்து வந்து கொண்டிருந்தது.

விரைந்து வந்த அந்தப் பனிப்படலம் அவரைத் தாண்டிக் கிழக்குத் திசையில் நகர்ந்தது.

புஷ்பராஜ் தரையில் படுத்தபடி காதைக் கூர்மையாக்கிக் கவனித்தார்.

பூட்ஸ் சத்தம் அவரை நோக்கி வருவது தெரிந்தது. வேறு எதுவும் தெரியவில்லை.



முதல் சத்தம் அகன்று மறைந்தது.

தொடர்ந்து பூட்ஸ் கால்களின் சத்தம் கேட்டது.

புஷ்பராஜ் துப்பாக்கியின் விசையை அழுத்தினார்.

ஓர் அலறலுடன் யாரோ பொத்தென்று விழும் சத்தம் கேட்டது. தொடர்ந்து யாரோ ஒருவர் ஓடும் சத்தம் தெளிவாகக் கேட்டது. இப்போது புஷ்பராஜ் ஓடும் மனிதனைப் பின் தொடர்ந்தார். பெரிய பாறை ஒன்றை நெருங்குவதற்குள் பனிப் படலம் முற்றிலுமாக நகர்ந்து விட்டிருந்தது.

"நில்லுங்கள் அங்கேயே!" புஷ்பராஜ் கட்டளையிடும் குரலில் சொன்னார். அந்த உருவம் நின்றது.

"உங்களைக் கைது செய்யப்போகிறேன்." புஷ்பராஜ் சொன்னார்.

அந்த உருவம் திரும்பி நின்றது. அந்த உருவத்தின் இரண்டு கைகளிலும் துப்பாக்கி இருந்தன.

"நீங்க யாருன்னு எனக்குத் தெளிவா விளங்கிடுச்சு. இனிமேல் நீங்க என்கிட்டேயிருந்து தப்பிக்க முடியாது." புஷ்பராஜை நோக்கித் துப்பாக்கிகள் உயர்ந்தன.

அதே சமயம் வேறு எங்கிருந்தோ துப்பாக்கிகுண்டு ஒன்று வெடித்தது.

இரண்டு கைகளிலும் துப்பாக்கியைப் பிடித்திருந்த மனிதன் பின்புறமாகச் சரிந்தான்.

அவனுக்குப் பின்னால் ஒரு மனிதன் வெளிப்பட்டான்.

புஷ்பராஜ் டார்ச்லைட்டை எரியவிட்டார்.

அது அன்று மதியம் புஷ்பராஜைத் தேடி அவுட் ஹவுஸுக்கு வந்த மனிதன்!

"மிஸ்டர் தாம்சன் வில்ஃப்பிரட்!" - புஷ்பராஜ் அழைத்தார்.

அவர் அருகில் வந்தார்.

"உங்களுக்கு என்னை எப்படி அடையாளம் தெரிந்தது?"

"அதையெல்லாம் பிறகு விவரமாக விளக்குகிறேன். முதலில் நாம டேவிட்டை பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு போகவேண்டும்."புஷ்பராஜ் சொன்னார்.

தரையில் விழுந்து கிடந்த மனிதனைத் · தோளில் போட்டபடி புஷ்பராஜ் நடந்தார். முழங்காலில் குண்டுக் காயம்பட்ட டேவிட் பாதையில் விழுந்து கிடந்தார். அவரையும் எழுப்பி மெதுவாக அழைத்துக்கொண்டு அவுட் ஹவுஸை நோக்கி நடந்தார் புஷ்பராஜ். அங்கு ஜீனா, புஷ்பராஜை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

புஷ்பராஜைத் தாக்க முயன்ற மனிதனை புஷ்பராஜ் தங்கியிருந்த அவுட் ஹவுஸின் கட்டிலில் படுக்க வைத்தனர். அந்த மனிதன் தாம்சன்!

"ஒண்ணும் புரியலை. என்ன இதெல்லாம்?" மோகினி கேட்டாள்.

"சொல்றேன்!" புஷ்பராஜ் நாற்காலியில் அமர்ந்தார்.

மோகினி அவசர அவசரமாக குண்டுக் காயம்பட்ட இருவருக்கும் முதலுதவி செய்தாள். ஜீனா, மோகினிக்கு உதவினாள்.



"இவர்தான் மிஸ்டர் டேவிட்! அதாவது ஸால்வின் துரையாக நடித்த உயிருள்ள மனிதர். தாம்சன் வில்ஃப்பிரட்டின் அப்பாவான வில்ஃப்பிரட்டை, இரும்பினால் தயாரிக்கப்பட்ட, கூர்மையான நகங்கள் கொண்ட பொட்டாசியம் சயனைடு பூசிய கையுறையால் தாக்கிக் கொன்றவர் இந்த டேவிட்தான். அதேபோல் வில்ஃப்பிரட்டின் தம்பியையும் கொன்றார். தாம்சனின் அம்மாவையும் கொன்றார். இப்படியெல்லாம் நடந்துகொள்ள அவருக்குள் இருந்த பேராசை நிறைந்த லட்சியம்தான் காரணம். ஃப்பிராங்கினின், வில்ஃப்பிரட்டின் மைத்துனர். அதாவது மனைவியின் சகோதரர். அவர் ஆப்பிரிக்காவுக்குப் போனார். இந்த இருவருக்குமிடையே கடிதத்தொடர்பு மட்டும் இருந்தது. அந்தக் கடிதங்கள் எல்லாவற்றையும் நான் டேவிட்டின் வீட்டிலிருந்து எடுத்து வந்துவிட்டேன். அதே நேரம் இந்த உண்மையான தாம்சன்- அதாவது இதோ நின்று கொண்டிருக்கிறாரே இந்த மனிதர்..." புஷ்பராஜ் பேச்சைப் பாதியில் நிறுத்தினார்.

"இவர்தானே மதியம் இங்கே வந்தவர்?" மோகினி கேட்டாள்.

"ஆமாம்... இவரேதான். ஒரு குகையில் வசித்துக் கொண்டிருந்தார். இங்கு நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் அவர் கவனித்துக் கொண்டிருந்தார். இவரைக் கொல்வதுதான் இதோ இந்த இருவரின் (டேவிட், தாம்சன்) நோக்கம். இவரை மட்டும் தீர்த்துக் கட்டிவிட்டால் டேவிட்டும், ஃப்பிராங்க்ளினின் மகனான மார்ட்டின் ஃப்பிராங்களின் சேர்ந்து மொத்தச் சொத்துக்களையும் பங்கு போட்டுக் கொள்ளலாமே?

ஜீனாவுக்கு உண்மையான தாம்சன் யார் என்று தெரியாது. அதானால்தான் அவள் கபட வேடதாரியான

மார்ட்டினை (இதுவரை தாம்சன் என்று அழைத்து வந்தவனை) காதலித்தாள். அதே சமயம் உண்மையான தாம்சன், இந்த மார்ட்டினை (போலி தாம்சனை) கொல்லத் திட்டம் தீட்டினார் என்பதையும் மறுப்பதற்கில்லை" புஷ்பராஜ் உண்மையான தாம்சனைப் பார்த்துச் சொன்னார்.

"இல்லை... நீங்க தப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க மிஸ்டர் புஷ்பராஜ். உங்களுக்கு ஆபத்து நேரப் போகுதுன்னு தெரிஞ்ச பிறகுதான் நான் துப்பாக்கியால இவனைச் சுட்டேன்" தாம்சன் வில்ஃபிரட் சொன்னார்.

"நீங்க என்னிக்கு இந்த ஊருக்கு வந்து சேர்ந்தீங்க? எதுக்காக அந்தக் குகையில் தலைமறைவா வாழ்ந்தீங்க?"

"இவன் (பழைய தாம்சன்) அமெரிக்காவிலிருந்து புறப்பட்டுட்டான்னு தகவல் தெரிஞ்சது. உடனேயே நானும் அங்கிருந்து கிளம்பிட்டேன். வந்த பிறகு சூழ்நிலை சரியில்லாததால் தற்சமயம் இவர்கள் கண்களுக்குப் படாமல் ஒதுங்கியிருந்து அதே சமயம் இவர்களைக் கண்காணிக்க என்ன வழி என்று யோசித்தேன். குகை தகுந்த இடமாகப் பட்டதால் அங்கே போய்த் தங்கினேன்."

"நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாகவே இருக்கட்டும் மிஸ்டர் தாம்சன் வில்ஃபிரட். நான் மிச்சக் கதையையும் சொல்லி விடுகிறேன்" புஷ்பராஜ் தொடர்ந்தார்: "டேவிட் எத்தனையோ கொலைகளைச் செய்திருக்கிறார். அதற்கெல்லாம் ஒரே ஒரு நோக்கம்தான் காரணம். அதாவது வாரிசு இல்லாமல் போகும் இந்த மொத்தச் சொத்துக்களையும் கைப்பற்றுவது மட்டும்தான். டேவிட்டும் அவர் மகள் ஜீனாவும் சேர்ந்து அந்த பங்களாவில் எத்தனையோ இந்திரஜாலங்களை நடத்தியிருக்கின்றனர். டேவிட். ஸால்வின் துரையின் ஆவியாக நடித்தார். ஆவி வடிவத்தில் அங்கு வருபவர்களைப் பயமுறுத்துவது ஜீனாவின் திருப்பணி.



பதப்படுத்தப்பட்ட எலியின் உடலுக்குள் எலெக்ட்ரானிக்ஸ் கருவிகளைப் பொருத்தி பேட்டரியால் அதை இயங்கச் செய்தனர். சில சமயம் எலி இறந்தது போலவும், சில சமயம் உயிர் இருப்பது போலவும் அந்தப் பதப்படுத்தப்பட்ட எலி செயல்பட்டது. அதனால்தான் அவர் என்ன நோக்கத்துக்காக இதையெல்லாம் மேற்கொண்டாரோ, அதை இந்த ஊராரும் நம்பி அவரை உற்சாகப்படுத்தினர். ராகவனைக் கொன்றதும் டேவிட்தான். நம்மைப் பற்றிய உண்மைகளை உணர்ந்த டேவிட், நம்மைப் பயப்படுத்தி இங்கிருந்து விரட்டுவதற்காக ராகவனையும் தன் வழக்கமான பாணியில் கொன்றார்.

பெரேராவைக் கொலை செய்தவரும் டேவிட்தான். டேவிட்டின் வீட்டிலிருந்து நான் கைப்பற்றிய கடிதங்களில் இதற்கெல்லாம் ஆதாரம் இருக்கிறது." புஷ்பராஜ் கூறினார்.

மறுநாள் காலையில் போலீஸ் வேன் ஒன்று மலைச் சரிவுக்கு வந்தது. ஊரார் மொத்தமும் அந்த அவுட் ஹவுஸுக்கு முன்னால் குழுமியிருந்தனர். புஷ்பராஜ் போலீஸாரிடம் எல்லா உண்மைகளையும் விளக்கினார்.

கொலைகள் பல புரிந்த டேவிட்டையும், ஆள்மாறாட்டம் செய்த ஃபிராங்கிளினையும் போலீஸார் கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றனர்.

ஜீனா, உண்மையான தாம்சனை அப்போதுதான் அடையாளம் கண்டுகொண்டாள்.

"அன்னிக்கு எதுக்காக என்னை அப்படி பயப்படுத்தினீங்க?" ஜீனா கேட்டாள்.

"நானா பயப்படுத்தினேன்? நீ போட்ட சத்தத்துல நான்தானே பயந்து ஓடினேன்." சிரித்தபடி தாம்சன் கேட்டார்.

அவள், அவர் கண்களை உற்றுப் பார்த்தாள்.

புஷ்பராஜும் மோகினியும் அவர்களிடம் விடை பெற்றனர்.

அந்த பங்களா அப்போதும் அசைவற்று அமைதியாகவே நின்று கொண்டிருந்தது. தாம்சனும் ஜீனாவும் அதை நோக்கி நடந்து செல்வதை புஷ்பராஜும், மோகினியும் பார்த்துக் கொண்டு நின்றனர்.

---------

மாவட்ட கிளை நூலகம்
37862
6479494
கொளத்தூர், சென்னை